தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை



2019 ஆண்டறிக்கை

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு

நோக்கம் :
தொழில்நுட்ப மற்றும் சேவைச் சிறப்பின் மூலம் இலங்கையின் அதிஉன்னத பொது வசதிகள் நிறுவனமாக விளங்குதல்

குறிக்கோள் :
பாவனையாளர்களின் பூரண திருப்தியை உறுதிப்படுத்திக்கொண்டு குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டிற்கு சேவை புரிதல்

இலக்குகள்

- நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளை விஸ்தரித்தல்
- தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்
- உயர் பொறுப்புடைமையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதிசெய்தல்
- கிராமிய மற்றும் விழிப்புநிலை சமூகங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலையும் துப்புரவேற்பாட்டு வசதிகளையும் வழங்கல்

உள்ளடக்கம்

ந.அ.நீ.வ.வீ.வ.அ. செயலாளரின் செய்தி	iii
அறிக்கை பற்றிய அறிவிப்பு	01
தலைவரின் கூற்று	02
கூட்டு ஆளுகையும் புள்ளிவிபர மீளாய்வும்	
பிரதான பணியாளர்கள்	06
தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்	09
கூட்டிணைந்த திட்டம்	10
நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத்துறையின் பிரதான செயலாற்றுகை	13
தொழிற்பாடுகளின் பொழிப்பு	15
முதலீடுகளின் பொழிப்பு	19
ஊழியர்கள்	21
நிலைபேறான அறிக்கை	
தகவல் தொழில்நுட்பம்	26
வர்த்தக நடவடிக்கைகள்	27
கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு	28
பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல்	28
நிகழ்ச்சிட்டம்	
வலுசக்தி முகாமைத்துவம்	29
மத்திய ஆய்வுகூடம்	29
வருவாயற்ற நீர் குறைப்பு நிலக்கீழ் நீர்	30
விநியோகம் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்	30
நாட்பட்ட சிறுநீரக நோய் நிகழ்ச்சித்திட்டம் அபிவிருத்தி	31
ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்	32
GIS மற்றும் வரைபடமாக்கல்	32
நீர் பாதுகாப்புத் திட்டம்	33
உட்கட்டமைப்பு அபிவிருத்தி	
பிராந்திய உதவி நிலையங்கள்	39
நீர் வழங்கல்	
நடைமுறையிலுள்ள வெளிநாட்டு / உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்	46
இலங்கை அரசாங்க நிதியளிப்பிலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்	59
குழாய் வழிக் கருத்திட்டங்கள் (நீ.வ.க.)	60
திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (நீ.வ.க.)	61
சாக்கடை	
தற்போதுள்ள சாக்கடைத் திட்டங்கள் நடைமுறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டங்கள்	62
திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை)	65
எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகள் நிலைபேறானதன்மை மற்றும் அவசர பதில்நடவடிக்கைகள்	66
நிதி மற்றும் கணக்காய்வு அறிக்கைகள்	
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை	68-69
நிதிக் கூற்று	73
2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை	101-122
சுருக்க வடிவங்கள்	123
ஒருங்கிணைந்த தகவல்கள்	126

செயலாளரின் செய்தி

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் வீடமைப்பு வசதிகள் அமைச்சு



நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் (தே.நீ.வ.வ.ச.) இணைந்து பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் குழாய்வழி சாக்கடை அகற்றல் வசதிகளை வழங்குவதன் மூலம் தேசத்திற்கு சேவையாற்றும் பொருட்டு உறுதியான முயற்சிகளை எடுத்தது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பெறுபேறாக 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் நாட்டின் மொத்த சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு குழாய்நீர் வசதிகளை வழங்குவதற்கு இயலுமாயிருந்தது. 2020 ஆம் ஆண்டளவில் குழாய் நீரை சனத்தொகையில் 55% க்கு கிடைக்கச் செய்வதையும், குழாய் வழி சாக்கடை முறையை சனத்தொகையில் 2.25% க்கு கிடைக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இலக்கை அடைவதற்காக அமைச்சு தே.நீ.வ.வ.சபையுடன் நெருங்கியிருந்து செயலாற்றுகின்றது.

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைக்கான விரிவான மூலோபாய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தே.நீ.வ.வ.ச.யின் முதன்மைத் திட்டத்தைத் தயாரிப்பதில் தே.நீ.வ.வ.ச.யுடன் சேர்ந்து செயலாற்றுவதற்குக் கிடைத்தமையையிட்டு அமைச்சு மகிழ்ச்சியடைகின்றது. நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்கு இணையாகக்கூடிய விதத்தில் இந்நிகழ்ச்சித்திட்டம் மறுசீரமைக்கப்பட்டது. தே.நீ.வ.வ.ச. மற்றும் ஏனைய நிறுவனங்களால் வெவ்வேறாக குழாய் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வேண்டிய பிரதேசங்கள் மற்றும் தோண்டப்பயட்ட கிணறுகள் மற்றும் மழைநீர் முறைமைகள் போன்ற ஏனைய பாதுகாப்பான நீர் வளமூலங்களுக்கான மேம்பாட்டுத் தேவைப்பாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. குழாய்ச் சாக்கடை முறைமைகள் தேவைப்படும் பிரதேசங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டுத் தலத்திற்கான மேம்பாட்டுத் தேவைப்பாடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. தற்போதுள்ள பாவனையாளர்களுக்கான சேவையின் அளவு மற்றும் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் தற்போதுள்ள சேவை மட்டத்தை மேம்படுத்தல், சேவை உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் இடைநிரப்பல் மற்றும் விநியோக விஸ்தரிப்பு ஆகியன முன்னுரிமையளிப்பு முதலீடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மூலோபாய முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்துடன் 2020-25 க்கான மூலோபாய வியாபாரத் திட்டத்தை இயைபாக்கித் தாபிப்பதற்காக தே.நீ.வ.வ.ச.க்கு வழிகாட்டப்பட்டுள்ளது. இச்சூழமைவினுள் அமைச்சானது தே.நீ.வ.வ.ச.யின் வியாபார வினைத்திறன் கண்ணோட்டத்தை மேம்படுத்துவதற்காக அதனுடன் நெருக்கமாக செயலாற்றிவருகின்றது. நிறுவனத்தை மீளமைப்பதற்கு மேலதிகமாக, வினைத்திறன்மிக்க வளப் பயன்பாடு, வருவாயற்ற நீரைக் குறைத்தல், வினைத்திறனான கையிருப்பு முகாமைத்துவம் ஆகியவற்றின் ஊடான செலவினக் குறைப்பு மற்றும் நவீன செயலாற்றல் நுட்பங்கள் ஊடான உற்பத்தித்திறன் மேம்பாடு ஆகியன தொடர்பிலும் தற்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத்துறை அபிவிருத்தி முயற்சியில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய எமது பல்வேறு நிதியளிப்பு பங்காளர்களுக்கு அமைச்சு நன்றி தெரிவிக்கின்றது.

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் தலைமை வகித்து வழிகாட்டியமைக்காக மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும் பிரதம அமைச்சருக்கும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதற்கு நான் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறேன். எமது செயற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்வதில் தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கியமைக்காக திறைசேரியின் செயலாளருக்கும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

பொதுமக்களுக்கு உயர் தரத்திலான வினைத்திறன்மிக்க நீர் வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைகளை வழங்குவதற்கும் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு இலக்குகளை அடைவதற்குமாக 2020 ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக தே.நீ.வ.வ.சபை எடுக்கின்ற முயற்சி வெற்றியளிக்கட்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.



கலாநிதி (பொறி.) பிரியாத் பந்து விக்ரம
செயலாளர்
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு





தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

குடிநீர் வழங்கும் பொறுப்பு ஆரம்பத்தில் பொது வேலைகள் திணைக்களத்தின் கீழ் காணப்பட்டதோடு, 1965 ஆம் ஆண்டில் இப்பொறுப்பு நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் 1975 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தற்போது நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

அறிக்கை பற்றிய அறிவிப்பு

கௌரவ நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, சுனில் மாவத்தை
பெலவத்தை,
பத்தரமுல்லை.

கனம் அமைச்சர் அவர்களே,

ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் - 2019
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் நியமங்களுக்கமைவாக, 2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும் சபை அங்கத்தவர்களால் கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இப்படிக்கு உண்மையுள்ள,

நிசான்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை



“தே.நீ.வ.வ.ச. ஆண்டினுள் 108,850 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்கி, மொத்த எண்ணிக்கையை 2,437,504 ஆக உயர்த்தியதோடு, இதன் மூலம் தே.நீ.வ.வ.ச.யினால் வழங்கப்படுகின்ற குழாய்வழி நீர் வழங்கலை சனத்தொகையில் 41.5% ஆக உயர்த்துவதற்கு பங்களிப்பு செய்யப்பட்ட அதேவேளை நாட்டின் குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை 51.8% உயர்த்துவதற்கு இயலுமாயிருந்தது.”

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் என்ற வகையில், எமது மதிப்புமிக்க நிறுவனத்தில் பெரும் நம்பிக்கை வைத்துள்ள தற்போதைய பாவனையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்டதும் உயர் தரத்திலுமான குடிநீர் வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைகளை வழங்குவதை முன்னிட்டு தே.நீ.வ.வ.சபையை தயார்படுத்தல் எனது முதன்மையான பொறுப்பாகும்.

2016-2020 கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் வகுக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடையப்பெறுவதை முன்னிட்டு, 2019 ஆம் ஆண்டு முழுவதிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை முயற்சியெடுத்தது. தே.நீ.வ.வ.ச. ஆண்டினுள் 108,850 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்கி, மொத்த எண்ணிக்கையை 2,437,504 ஆக உயர்த்தியதோடு, இதன் மூலம் தே.நீ.வ.வ.ச.யினால் வழங்கப்படுகின்ற குழாய்வழி நீர் வழங்கலை சனத்தொகையில் 41.5% ஆக உயர்த்துவதற்கு பங்களிப்பு செய்யப்பட்ட அதேவேளை நாட்டின் குழாய்வழி நீர் உள்ளடக்கத்தை 51.8% உயர்த்துவதற்கு இயலுமாயிருந்தது. 2019 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. 746 மில்லியன் க.மீ. குடிநீர் உற்பத்தியை மேற்கொண்டுள்ளதோடு, இது. 2018 ஆம் ஆண்டின் 707 மில்லியன் க.மீ. குடிநீர் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்றபோது 5.52% அதிகரிப்பாகும். இதற்கு மேலதிகமாக ஆண்டினுள் 2,047 குழாய் சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டு மொத்த எண்ணிக்கை 24,494 ஆக கொண்டுவரப்பட்டதோடு, கழிவுநீர் சுத்திகரிப்புக் கொள்ளளவு நாளொன்றுக்கு 70,500 க.மீ.களாகும்.

தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் ஆண்டினுள் ரூபா 77.44 பில்லியன் தொகையை முதலீடு செய்துள்ளதோடு, இது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 16.38% அதிகரிப்பாகும். இலங்கை அரசாங்கத்தின் ரூபா 43.58 பில்லியன் நேரடி நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக, உள்நாட்டு/வெளிநாட்டு வங்கிகளிலிருந்து கடன் பெறுதலின் ஊடாக நீர் வழங்கல் கருத்திட்டங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 25.09 பில்லியன் மற்றும் உள்நாட்டு வங்கிகளில் இருந்து பெற்றப்பட்ட ரூபா 3.06 பில்லியன் தொகையையும் நிதியியல் மூலோபாயங்கள் உள்ளடக்குகின்றன. மேற்படி முதலீடுகள், 23 பாரிய அளவிலான கருத்திட்டங்கள், 04 சாக்கடைக் கருத்திட்டங்கள், 14 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான கருத்திட்டங்கள், 03 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் 06 நீர் துறை சமுதாய வசத்திப்படுத்தல் கருத்திட்டங்கள் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்டன. இக்கருத்திட்டங்களில் 2019 ஆம் ஆண்டினுள், தே.நீ.வ.வ.ச. யினால் ஒரு பாரிய அளவிலான சாக்கடைக் கருத்திட்டம் மற்றும் 03 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான கருத்திட்டங்களையும் நிறைவு செய்வதற்கு இயலுமாயிருந்தது. மேலும், குணப்படுத்த முடியாத சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு ரூபா 173.47 மில்லியன் தொகை செலவில் சமுதாய வசதியேற்பாட்டுக் கருத்திட்டத்தின் ஊடாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வியாபார வினைத்திறனை மேம்படுத்துவதன் ஒரு பகுதியாக, வருவாயற்ற நீர் (NRW) குறைப்பை தே.நீ.வ.வ.ச. தீவிரப்படுத்தியதோடு, 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் நாடளாவிய ரீதியில் வருவாயற்ற நீர் சதவீதம் உற்பத்தியில் 24.95% ஆக காணப்பட்டது. அத்துடன் தே.நீ.வ.வ.ச. வியாபார வினைத்திறனை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டினுள் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் அவசரநிலை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் அதன் கவனத்தை தொடர்ந்தும் செலுத்தியது.

குடிநீர் தரத்திற்கான உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) வழிகாட்டல்களின் விதப்புரைகளை பின்பற்றி, நாடு முழுவதிலும்

264 நகர நீர் வழங்கல் திட்டங்களில் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக தே.நீ.வ.வ.ச. நீர் மாதிரிகளின் நாளாந்த பரிசோதனைகளை தீவிரப்படுத்தியதோடு, 2019 ஆம் ஆண்டின் பகுப்பாய்வுத் தரவுகள், நுண் உயிரியல் பரிசோதனையில் 99.3% திருப்திகரமாக உள்ளதை வெளிப்படுத்தியது.

ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் நிதி அமைச்சு கூட்டிணைந்த மற்றும் தேசிய இலக்குகளை அடைவதில் தே.நீ.வ.வ.ச.க்கு தொடர்ந்தும் அவற்றின் உதவிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கின. 2012 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித அறவீட்டு அதிகரிப்பும் இன்றி செலவுகளை மீளப்பெறுகின்ற பிரச்சினைக்கு முகம்கொடுத்து அனைத்து சாதனைகளையும் அடையப்பெற்று தொடர்ந்தும் அதன் சேவைகளை வழங்குவதற்கு தே.நீ.வ.வ.ச.க்கு இயலுமாயிருந்ததென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். எவ்வாறாயினும் தே.நீ.வ.வ.ச.யின் தலைவர் என்ற வகையில், பாவனையாளர் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டை அடைவதற்காக தே.நீ.வ.வ.ச.யில் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்கள் தேவைப்படுகின்றதென்பதை நான் அவதானித்துள்ளேன். வர்த்தக, சந்தைப்படுத்தல் மற்றும் பொது மக்கள் உறவுகள் ஆகிய புதிய தொழிற்பாட்டுப் பிரிவுகள் வகைப்பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் மற்றும் பாவனையாளர் திருப்தியை மேம்படுத்தும் பொருட்டு தெளிவாகவே எல்லைவகுக்கப்பட வேண்டியுள்ளன. கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக தே.நீ.வ.வ.ச.யினால் புதுக் கருத்திட்டங்கள் தொடர்பில் பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இணைப்புகளை வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்காக முதலீடு செய்தல் தொடர்பில் பிரதானமாக கவனம் செலுத்தப்பட வேண்டும். உற்பத்தி மற்றும் கொள்ளளவு மேம்பாடு, விநியோக இடைநிரப்பல் மற்றும் நீடிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக தற்போதுள்ள திட்டங்களிலிருந்து உச்ச பயனைப்பெற வேண்டியுள்ளது.

இம்முயற்சியில், கடந்த 5 ஆண்டுகளுக்கான சிறந்த வழிப்படுத்தல் மற்றும் சிறந்த நெறிப்படுத்தலுடன் கூடிய கூட்டிணைந்த திட்டம்/ வியாபாரத் திட்டத்தை நீர் வழங்கல் சபை அபிவிருத்தி செய்தல் மிக முக்கியமானதாகும். பாவனையாளர்களை அவர்களது எதிர்ப்பார்ப்புகளையும் தாண்டிய விதத்தில் திருப்திப்படுத்துவதற்காக சிறந்த சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு அனைத்தையும் உள்ளடக்கியதான கூட்டிணைந்த மற்றும் வியாபாரத் திட்டமொன்றை அபிவிருத்தி செய்வதற்கு தே.நீ.வ.வ.ச.யின் அலுவலர்களை வழிப்படுத்தல் எனது முதன்மையான பணிகளில் ஒன்றாகும்.

அரசாங்க அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கமைய, சுபீட்சத்துக்கான எதிர்கால நோக்கில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் இறுதியாகின்றபோது இலங்கையின் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக தே.நீ.வ.வ.ச. மூலோபாயங்களை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

தற்போது தொழிற்பட்டு வருகின்ற 331 நீர் வழங்கல் திட்டங்களிலின் தற்போதுள்ள வசதிகளை விரிவாக்கி மற்றும் உச்ச பயனைப் பெறுவதன் மூலம் அதிகூடிய எண்ணிக்கையிலான இணைப்புகளை வழங்கி அதிகூடிய நலனைப் பெறுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிக நீரை உற்பத்தி செய்வதற்காக இப்பொறித்தொகுதிகளில் சிலவற்றை இலகுவாக விரிவாக்க முடியுமென்பதும் ஒருசில திட்டங்களில் எதிர்பார்க்கின்ற தரநியமத்தை அடைவதற்காக தர மேம்பாடும் மேம்படுத்தல்களும் அவசியமென்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. முதலாவது நடவடிக்கை, மிகக் குறைந்த அளவிலான தலையீடு மற்றும் முதலீட்டுடன் தர மேம்பாடு மற்றும் தரமேம்பாடு/ மேம்படுத்தல் எங்கு மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்திட்டங்களை அடையாளம் காண்பதாகும்.

மிக அவசரமாகவும் விரைவாகவும் உயர் தர நியமத்திற்கு பரிவர்த்தனை செய்ய முடியுமான திட்டங்களை அடையாளம்காணல் மற்றும் பிரதேசங்கள் மற்றும் பாவனையாளர்களை உள்ளடக்கக்கூடிய வகையில் விநியோக நீடிப்புகளையும் ஆரம்பிப்பதை முன்னிட்டு எமது வழிகாட்டல்களின் கீழ் தே.நீ.வ.வ.ச. ஊழியர்கள் அயராது உழைத்து வருகின்றார்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர் துறையில் அரசாங்கத்தின் அபிலாசைகளை யதார்த்தமாக்குவதற்காக தே.நீ.வ.வ.ச.யின் ஊழியர்கள் கடப்பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் கூடியதாக எதிர்பார்க்கப்படும் இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கான தெளிவான திட்டமிடல்களுடன் கூடியதாக சிறந்த முறையில் வழிப்படுத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டம்/ வியாபாரத் திட்டம் மிக உறுதியான அடித்தளத்தை வழங்குமென நான் உறுதியாக நம்புகிறேன்.

மேற்படி மாற்றங்களுடன், தன்னிறைவடைந்த ஒரு நிறுவனமாக தே.நீ.வ.வ.ச.க்கு நிலைத்து நிற்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும். மேற்படி மாற்றங்களை முன்னிட்டு பணியாற்றுவதில் தே.நீ.வ.வ.ச.யின் அனைத்து ஊழியர்களிடமிருந்தும் கடப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் கவனக் குவிப்பையும் அத்துடன் நாட்டிற்கு வலுவானதும் தன்னிறைவானதுமான நிறுவனமாக பெறுமதிமிக்க சேவையினை வழங்குமென்றும் நான் எதிர்பார்க்கிறேன்.



நிசான்த ரணதுங்க
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை



" நீர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய பெறுமதிமிக்க ஒரு பொது மரபுரிமையாகும். கவனமாகவும் சிக்கனமாகவும் நீரைப் பயன்படுத்துதல் ஒவ்வொருவரினதும் கடமையாகும்."


- ஐரோப்பிய நீர் சாசனம்

கூட்டு ஆலோசனைப் பயிற்சியாக நீதியான மீளாய்வும்



தெதுறு ஓயா அணைக்கட்டு

முக்கியமான பதவியினர்



பணிப்பாளர்கள் சபை

- 01. தலைவர்
- 02. உப தலைவர்
- 03. செயற்பாட்டுப் பணிப்பாளர்
- 04. பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- 05. பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- 06. பணிப்பாளர் சபை அங்கத்தவர்
- 07.- 09. பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்
- ■ சபையின் செயலாளர்

சிரேஷ்ட முகாமைத்துவம்

- 10. பொது முகாமையாளர்
- 11. மேலதிக பொது முகாமையாளர்கள்
- 12. பிரிவுகளுக்கான பிரதி பொது முகாமையாளர்கள்
- 13. மாகாணங்களுக்கான பிரதி பொது முகாமையாளர்கள்
- 14. கருத்திட்டப் பணிப்பாளர்களாக பணியாற்றும் பிரதி பொது முகாமையாளர்கள்

பணிப்பாளர்கள் சபை

01. பொறியியலாளர் கே.ஏ. அன்சார்
Charted Civil Engineer / Lead Auditor (QMS)
M.Sc (Delft), B.Sc. Eng. (Hons.), Dip. H.E. (Delft),
C.Eng., MIE (SL),
தலைவர், தே.நீ.வ.வ.ச.
(2015.02.05 தொடக்கம் 2019.11.28 வரை)

02. திரு. எம். எச்.எம். சல்மான்
சட்டத்தரணி
உப தலைவர், தே.நீ.வ.வ.ச.
(2018.01.24 தொடக்கம் 2019.11.26 வரை)

03. திரு. பீ.ஐ.ரீ. மஹிலால் சில்வா
BA, MA, MSc.
செயற்பாட்டு பணிப்பாளர், தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம் 2019.11.25 வரை)

04. திரு. சாந்த ரத்நாயக்க
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச.
(2015.02.12 தொடக்கம் 25.11.2019 வரை)

05. திருமதி. கே.ஏ. சுபத்ரா வல்பொல
AB.Sc. M.A (Economic)
P.G. Diploma (Business Administration)
(2015.02.13 தொடக்கம் 2019 நவெம்கர் வரை)

06. டாக்டர் ரீ.பீ. ஆனந்த ஜயலால்
MBBS, M. Sc., MD, PG Cer. in Paed. Nutrition
Acting Deputy Director General Environmental Health,
Occhpational health and Food Safty
Director, Youth, Elderly and Disaled Persons
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
(2017.01.20 தொடக்கம் 2019.06.03 வரை)

07. டாக்டர் எம்.ரீ. கம்லத்
MBBS, M.Sc. (Medical Administration)
Deputy Director General (Environmental Health,
Occupational Health & Food Safety),
Ministry of Health, Colombo
(2019.06.04 தொடக்கம் 2019 நவெம்பர் வரை)

08. திரு. ஜே.எம்.யூ.பீ. ஜயமஹ
DPFM, PGD (A&F), Fellow Member of APFASL
Additional Director General, Department of Public Enterprises
(2015.04.02 தொடக்கம் 2019.04.04 வரை)

09. திருமதி பீ.கே.ஏ. த சில்வா
B.Com. (SP), MA (International Development),
PGD (Demography), SLEA (Line Member),
SLPA (Line Member)
Director General
Department of Project Management & Monitoring
Minisry of Finance
(2019.06.13 தொடக்கம் 2019 நவெம்பர் வரை)

சபை செயலாளர்
திருமதி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா
B.Sc. Special (Hons.)
Master of Public Management, IMSL (Member)

2019 ஆம் ஆண்டில் 11 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சிரேஷ்ட முகாமைத்துவம்

10. பொது முகாமையாளர்
பொறியியலாளர் டி.யூ. சுமனசேகர (2019.09.01 வரை)
B.Sc. Eng., (Hons), M.Sc. (Netherlands), C.Eng. FIE (SL)

பொறியியலாளர் ஆர்.எச். ருவினீஸ்
(2019.09.05 தொடக்கம் இன்று வரை)
(நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
B.Sc. Eng. (Hon.) M.Sc. in Sanitary Engineering
MBA, C.Eng., FIE (SL), MIE (Aus), CP Eng.

11. மேலதிக (பொ.மு)
(2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜே. ராஜ்குமார் (வட/மத்திய)
M.Sc. in Sanitory Engineering, M.Sc. in Environmental Engineering and Management, C.Eng., FIE (SL),

பொறியியலாளர் என்.எச்.ஆர். குலநாத (சாக்கடை)
B.Sc. Eng., P.G. Dip.(Condt. Mgt.), PG Dip. (Enviromental Engineering), C.Eng. FIE(SL),

பொறியியலாளர் ரீ.எஸ். விஜேதுங்க
(கொள்கை மற்றும் திட்டமிடல்)
B.Sc.Eng., MBA, M.Sc. (Planing), MA (Financial Economics), MIM (SL), Pg.Dip. (Finance) – (ICA(SL), Dip. (Mgt.) – DK C.Eng., FIE (SL),

பொறியியலாளர் ஜே.கே.எஸ். பதிரண (தெற்கு/ கிழக்கு)
B.Sc. Eng. (Hons), M.Sc. (Sanitary) Delft, C.Eng. MIE (SL)

பொறியியலாளர் ரீ.டபி.எஸ். பெரோ (நீர் வழங்கல் கருத்திட்டம்)
B.Sc. Eng. (Hons), M.Sc. (Development Science), C.Eng., MIE (SL)

பொறியியலாளர் சீ.சீ.எச.எஸ். பர்னாந்து (மேற்கு)
B.Sc. Eng., MPM, PG Dip.(OSLO University), C.Eng., FIE (SL), MIM (SL)

பொறியி. டாக்டர் (திருமதி) வசந்த இலங்கசிங்க
(கூட்டிணைந்த சேவைகள்)
B.Sc. (Eng.), M. Eng. (Japan), Ph.D, C.Eng. MIE (SL)

திரு. ஜீ.கே. இத்தமல்கொட (மனித வள முகாமைத்துவம்)
B.Sc. (B. Admin). Dip. in Per. Mgt. MA (Mgt. & Admin) London jpU. MH.V.vk;.v];. tPuNrd (epjp)
B.Com (Sp.), PGDBM (Col.), ACA

12. பிரிவுகளின் பிரதி பொது முகாமையாளர்கள்
(2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)
திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன (கைத்தொழில் உறவுகள்)
BA, P.G. Dip. in Management (PIM), Member (IMSL)

திரு. டபி.ஏ.எஸ். சுமனசூரிய (மனித வளம்)
BB.Mgt. – HR (Special), MBS, PgdLS, NDIPM, MIPM, MIMSL

திரு. ஆர்.எம்.ஏ. பண்டார (விநியோகம், பொருட்கள் முகாமைத்துவம்)
B.Sc. (Business Administration – Spl) Dip. in Purchasing and Materials Mgt.

திருமதி எம். எம்.எஸ். பீரிஸ் (நிதி)
B.Sc. (Accountancy & Finance Mgt.), ACA (SL)

திரு. ஏ.ஜீ.எஸ். குமார (செலவினம்)
B.Com. (Sp.), M. Sc. (Management), FCA

பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் (வர்த்தகம்)
B.Sc. Eng. (Hons), M. Sc. (Denmark), MBA (PIM-US),
M. Eng. (Moratuwa), C. Eng. FIE (SL)

பொறியியலாளர் கே.டீ.பீ.எப். சிறிவர்தன (கூட்டிணைந்த திட்டமிடல்)
M.Sc. (Env.Eng.) Denmark, PG Dip. (const. Mgt.) SL, C.Eng., MIE (SL),

பொறியியலாளர் ஐ.வீ.டபி. எதிரிவீர (கிராமிய நீர் வழங்கல்)
B.Sc. Eng. M.Sc.(Water Resources Management),
M.Sc. (Development Studies), C.Eng., FIE(SL), MIWA(UK)

பொறியியலாளர் (திருமதி) மிட்டவல (அபிவிருத்தி)
B.Sc.Eng. Civil (Hons), MSc. Env. Eng. (DK), C.Eng., MIE (SL)

பொறியியலாளர் ஜாலிய லலித் சீக்குகே (ADB கருத்திட்டம்)
B.Sc.Eng. (Hons), MBA (PIM-SRJ), PG Dip (Const. Mgt.),
PG Dip. in Drinking Water Mgt.(Germany) C.Eng., MIE (SL)

பொறியியலாளர் ரீ.எம்.டபி. சுனில் பண்டார - பதில் (இயந்திரவியல் மற்றும் மின்னியல்)
PG Dip. (B. Admin.), PG Dip. (Disaster Mgt.)
C.Eng., MIE (SL)

பொறியியலாளர் டபி.ஜீ.சீ.எல்.வீரசேகர (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)
B.Sc. Eng., MBA, PG Dip. (Const. Proect Mgt.) SL, C.Eng. MIE (SL)

பொறியியலாளர் ஜே. சந்திரதாச (தகவல் தொழில்நுட்பம்) - பதில்
B.Sc. Eng., PG Dip. (eGov), M.Sc. (GIS/RS), MPA (eGov),
C.Eng. MIE (SL), MBSC, MIEEE

பொறியியலாளர் தனேஷ் குதிலக (சாக்கடை)
B.Sc. Eng.(Hons), PG.Dip. Env. Eng & Mgt (Moratuwa), M.Sc. Sanitory Eng. (UNESCO-IHE, Delf), C.Eng. Intl.P Eng., FIE (SL) MCIWEM (UK)

பொறியியலாளர் விபுலானந்தன் (கருத்திட்ட இணைப்பு)
B.Sc. Eng., M.Sc. (Construction Project Mgt.),
M.BA. (University of Colombo), Dip. (Commercial Arbitration),
Dip. (Adjudication), C.Eng. FIE (SL)

திருமதி ஏ. சிறியாலதா (உள்ளக கணக்காய்வு) - பதிற் கடமை
B.Sc. (Busi. Admin.) University of SJP, MBA - University of Colombo
PG Dip. (Busi. & Fin. Mgr.) CUSM (UK), Ex.Dip (Acc. & Fin.) CA (SL),
Int. CA (SL), Member of IMSL

13. மாகாணங்களுக்கான பிரதி பொது முகாமையாளர்கள் (2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பொறியியலாளர் கே.பி.ஆர்.எஸ். சமரசிங்க (மேல் மத்திய)
M.Sc.(Water Shpply Eng.) The Netherlands
M.Sc. (Env. Eng.), Moratuwa, MIE(SL), AM(OACETT) Canada

பொறியியலாளர் எம்.ரீ.எம். ரசீல் (மேல் தெற்கு)
B.Sc. Eng. (Hon), PG Dip (Structural Engineering Design),
PG Dip (Cons. Mgt.), PG Dip (Project Mgt.), C.Eng. MIE (SL)

பொறியியலாளர் பீ. ராமவிக்ரம (மேல் வடக்கு)
PG Dip. (Construct Project Mgt.), PG Dip (Environ. Eng. & Mgt.)
Moratuwa, C.Eng. MIE (SL)

பொறியியலாளர் டபி.என். பிரேமசிறி (உற்பத்தி)
B.Sc. (Eng.), PGD (Water Resources Engineering & Management)
C.Eng. MIE (SL)

பொறியியலாளர் டாக்டர் (திருமதி) வசந்தா இலங்கசிங்க (வட மேற்கு)
B.Sc. (Eng.), M. Eng.(Japan), Ph.D, C.Eng. MIE(SL).

பொறியியலாளர் ஜீ.வீ. விஜேரத்ன (வட மத்திய)
B.Sc.(Eng), M.Sc(Water Resources Engineering & Management),
C.Eng, MIE (SL)

பொறியியலாளர் எம்.கே.டீ.ஜே.எச். மீகொட (மத்திய)
B.Sc. Eng., M.Sc. (Water Management), C.Eng. FIE (SL)

பொறியியலாளர் ரீ. பாரதிதாசன் (வடக்கு)
B.Eng. (India), M. Eng. (Moratuwa), M.Sc. Eng. (UNESCO-IHE)
PGD (Rajarata), C.Eng., MIE (SL)

பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (ஊவா)
B.Sc. Eng., PGD (Management), M.Sc. (Water & Environment Resources Mgt.), MBA, M.Sc. (Water Resources Management) Holland,
C.Eng. FIE (SL), MIM

பொறியியலாளர் எஸ்.எஸ். தேவராஜ் (சப்பிரகமுவ)
B.Tech. (Eng.), PG Dip. (Environ. Mgt.), M.Sc (Environ. Eng. & Mgt),
MDS (Development Studies), C.Eng. MIE (SL)

பொறியியலாளர் எம்.கே.ஏ.ஜே.எம். விஜேசிங்க (தென்)
B.Sc. Eng., M.Sc. (Sanitary Engineering) Delft, C.Eng. MIE (SL)

பொறியியலாளர் என். சுதேசன் (கிழக்கு)
B.Sc. Eng., M.Sc. (Const. Mgt.), M.Sc. (Structural Engineering Designs),
C.Eng. Intl. PEng., FIE (SL)

14. கருத்திட்டப் பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற பிரதிப் பொது முகாமையாளர்கள்

பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட் (கொழும்பு நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டு கருத்திட்டம்)
B.Sc. Eng., M.Sc.(Sanitary Eng.) Netherlands, PG.Dip.(Structural Engineering Design), Sri Lanka, C.Eng., MIE(SL))


பொறியியலாளர் ஆர்.ஏ.ஏ. இரணவக்க
B.Sc.(Eng).Hons, PG Dip. (Env. Eng & Man), C.Eng., FIE (SL)

பொறியியலாளர் எம்.எம். உமா லெப்பே (அனுராதபுரம் கட்டம் 11)
PG. Dip. (Str. Eng. Design)
PG. Dip. (Water & Waste Water Treatment). C Eng, MIE (SL)

பொறியியலாளர் என்.எச்.டீ.பி. தர்மபால (கம்பஹா அத்தனகல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்)
B.Sc. (Eng.), M. Sc. (Const. Project Mgt.), PG Dip. (Enviro. Eng. & Mgt.), C.Eng., FIE (SL)

தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்

மாகாணம்/ பி.உ.நி.	நீ.வ.தி.எண்ணிக்கை
மத்திய	45
கிழக்கு	52
வட மத்திய	28
வட மேல்	30
வடக்கு	36
சப்ரகமுவ	22
தென்	53
ஊவா	36
மேல் - மத்தி	11
மேல் - வடக்கு	21
மேல் - தெற்கு	14
மொத்தம்	348


கிளிநொச்சி
முல்லைத்தீவு
மன்னார்
வவுனியா
முருங்கன்
பதவியா
மதவாச்சி
தந்திரிமலை
ஒயமடு
அனுராதபுரம்
மிஹிந்தலை
நாச்சியாதுவ
தலவ்வ
ஏப்பவல
தம்புத்தேகம
கல்நேவ
கலகமுவ
ஆணமடு
அம்பன்பொல
நிக்கவரெட்டிய
வன்னிமம
நாவுல
புஸ்ஸல்ல
மாத்தளை
உடகம
குருணாகல
மாவத்தகம
நாத்தாண்டிய
தம்தெனிய
அல்வ
தங்கொட்டுவ
மீரிகம
நீர்கொழும்பு
மினுவாங்கொட
கம்பஹ
ஜா-எல
கிரிந்திவெல
கொழும்பு
கோட்டே
பாதுக்க
பியகம
மஹரகம
களுத்துறை
பயாகல
பேருவல
அலுத்கம
பிட்டிகல
எல்பிட்டிய
பலபிட்டிய
அம்பலாங்கொட
பத்தேகம
ஹிக்கடுவ
போப்பே-போதல
காலி
மாத்தறை
தெவிநுவர
கந்தளாய்
சேரவில
மெதிரிகிரிய
ஹிங்குராக்கொட
மின்னேரியா
செவகம
பெண்டிவெவ
பொலநறுவை
Gallella
மாதம்பிட்டிய
திம்புலாகல
தம்புள்ள
உடதென்ன
பக்கமூன
தெஹியத்தகண்டிய
சந்துன்புற
மாவன்கல
லிஹினியகம
மஹஓயா
கிராந்துருகோட்டை
பதியத்தளாவை
மெனிக்கின்ன
லியனகஹவெல
மஹியங்கனை
மெதகும்புர
பல்லேகெலே
இங்கினியாகலை
தமன
அக்கறைபற்று
திருக்கோவில்
பிபிலை
கந்தேகெடிய
மெதகம
பொத்துவில்
சியம்பலாண்டுவ
வெல்லவாய
புத்தளம்
ஒக்காம்பிட்டிய
நக்கல
மொனராகலை
பண்டாரவளை
ஹாலிஎல
பதுளை
ஹப்புத்தளை
சீலத்தென்ன
நமுனுகுல
தியத்தலாவ
வெலிமடை
மடவெல்ல
ஹட்டன்
நுவரெலியா
மஸ்கெலியா
போரலந்த - தியிட்டாலே
கினிகத்தேன
தலவாக்கலை
லிந்துலை
அம்பகமுவ
கெப்பெட்டிபொல
பண்டாரவளை
ஹாலிஎல
சிலுமியாபுர
பசறை
ஊவாபரணகம
ஹல்துமுல்ல
ஹப்புத்தளை
ஹாலிஎ

"நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேவுகை இலக்கை முன்னிட்டான செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டன."

2016 / 2020 கூட்டிணைந்த திட்டத்தின் அமுலாக்கல் பற்றிய நிலைமை

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டானது, 2016 - 2020 கூட்டிணைந்த திட்டத்தின் நான்காவது ஆண்டாகும். ஆண்டினுள் கூட்டிணைந்த திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதை முன்னிட்டான செயற்பாடுகளை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது.

நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வடிகாலமைப்புச் சேவையின் உள்ளடக்கம் பற்றிய இலக்கை முன்னிட்டான செயற்பாடுகள் நாடு முழுவதிலும் நீர் வழங்ல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டப் பிரிவினாலும் அனைத்து பிராந்திய சேவை நிலையங்களினாலும் (RSCs) மேற்கொள்ளப்பட்டன. நாடு முழுவதிலும் சனத்தொகையில் ஏறத்தாழ 91.9% வீதத்தினர் பாதுகாப்பான குடிநீருக்கான அணுகுதலைப் பெற்றுள்ள அதேவேளை இதில் 51.8% வீதத்தினர் குழாய் நீர் வழங்கல் முறைமையின் ஊடாக குடிநீரைப் பெறுகின்றனர். சனத்தொகையில் 2.07% வீதத்தினர் குழாய் சாக்கடை வசதிகளைப் பெறுகின்றனர். வியாபார வினைத்திறனை மேம்படுத்தும் இலக்கை அடைவதில், வருவாயற்ற நீர் மற்றும் வலுசக்திச் செலவைக் குறைத்தல் தொடர்பில் 2019 ஆம் ஆண்டினுள் விசேட கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும் என்பதோடு பாவனையாளர் தேவைகள் தொடர்பான சேவைகளின் மேம்பாடுகள் தொடர்பிலும் முன்னுரிமையளிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப மேம்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், நிறுவன ரீதியான அபிவிருத்தி மற்றும் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் ஆகியன தொடர்பிலான முன்னெடுப்புகளும் இவ்விலக்குகளை முன்னிட்டு பங்களிப்புச் செய்தன. "உயர்ந்தளவில் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதிசெய்தல்" என்ற இலக்கை அடையப்பெறுவதை முன்னிட்டு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவு ஆகிய இரண்டும் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் பகிரங்கத்தன்மை பிரச்சினைகள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொண்டன. தே.நீ.வ.வ.ச.யின் பாவனையாளர்களுக்கு மட்டுமன்றி முழு சனத்தொகையினதும் குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டு நிலைமையை மேம்படுத்துகின்றதான சமூகப்பொறுப்பு தொடர்பிலான நோக்கத்தை முன்னிட்டு பாதுகாப்பான நீர் வழங்கல் வசதிகளைக் கொண்டிராத நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட, மற்றும் கிராமிய சமுதாயத்தினர் தொடர்பில் கிடைக்கத்தக்கதான வளங்களின் ஊடாக முன்னுரிமையளிக்கப்பட்டது. RSCs க்களின் ஊடாக சமூக மைய அமைப்புக்களால் முகாமை செய்யப்படுகின்ற திட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

உலக சுகாதார அமைப்பின் (WHO) மதியுரை மற்றும் நடைமுறைப்படுத்தல் உதவியுடன் 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் நீர் பாதுகாப்புத் திட்டத்தின் (WSP) நடைமுறைப்படுத்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. சமுதாயத்தினால் நுகரப்படுகின்ற அனைத்து நீரும் பாதுகாப்பானதாயிருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தே.நீ.வ.வ.ச. முழு முற்சியெடுக்கிறது. இச் சூழமைவின் கீழ் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. 2019 இறுதியாகின்றபோது, கண்டியில் தாபிக்கப்பட்ட நீர் பாதுகாப்புத் திட்ட மதியுரை அலகின் உதவியோடு பிராந்திய சேவை நிலையங்களின் (RSCs) பிரதிப் பொது முகாமையாளர்களால் (DGMs) நாடளாவிய ரீதியில் பல கட்டங்களில் 264 நகர நீர் பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பில் காலக்கிரமப்படி மீளாய்வினை மேற்கொள்ளல் முக்கியமானதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிணங்க, கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் தொடர்பிலான 2018 ஆம் ஆண்டின் 4வது காலாண்டினதும், 2019 ஆம் ஆண்டின் 1வது, 2வது மற்றும் 3வது காலாண்டினதும் முன்னேற்ற அறிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற சபைக் கூட்டங்களில் சபை அங்கத்தவர்களால் மீளாய்வு செய்யப்பட்டன.

சர்வதேச நீர் சங்கம் (IWA) – நீர் மற்றும் அபிவிருத்திப் பேரவை மற்றும் கண்காட்சி (WDCE) 2019 திசெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 78 நாடுகளின் பங்களிப்புடன் நடத்தப்பட்டதோடு, இந் நிகழ்வில் தே.நீ.வ.வ.ச. பிரதான அமைப்பாளராக இருந்தது. இந்நிகழ்வுக்கு சமாந்திரமாக தே.நீ.வ.வ.ச. யின் ஐந்தாவது வருடாந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) கருத்தரங்கும் 2019 திசெம்பர் மாதம் 2ஆம் திகதி BMICH இல் நடத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் மற்றும் அடைவுகள் உள்ளடங்கிய மேலதிக விபரங்கள் இவ்வறிக்கையின் 11 ஆம் பக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் தொடர்பிலான முன்னேற்றம்

இலக்கு	முதன்மைக் குறிக்கோள்கள்		2019 இறுதியில் இலக்கு	2019 இறுதியில் அடைவு
1. நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை உள்ளடக்கத்தை விஸ்தரித்தல்	1.1	மொத்த குழாய் நீர் வழங்கல் மேவுகை	53.2%*	51.81%
	1.2	குழாய் சாக்கடை மேவுகை	2.24%*	2.07%
	1.3	பாதுகாப்பான குடிநீர் வழங்கலைப் பெறுவதற்கான வாய்ப்பின் மேவுகை	89.8%	91.9%
2. தொழில்துறை வினைத்திறனை மேம்படுத்தல்	2.1	வருவாயற்ற நீர் (நாடளாவிய)	26.0%	24.95%
	2.2	1000 இணைப்புகளுக்கு மொத்த பணியாளர்கள்	4.9%	3.99%
	2.3	மொத்த மீண்டுவரும் செலவில் வலுசக்திச் செலவு	15.45%	14.52%
	2.4	மொத்த மீண்டுவரும் செலவில் பராமரிப்புச் செலவு		
	2.5	மொத்த மீண்டுவரும் செலவில் தாபனச் செலவு	6.47%	6.11%
	2.6	மொத்தக் கட்டணப் பட்டியல்களில் மதிப்பிடப்பட்ட கட்டணப் பட்டியல்கள்	11.54%	11.00%
	2.7	சேகரிப்பு வினைத்திறன்		
	2.8	பெறத்தக்க கணக்குகள் -	1.0%	1.26%
		(அ) வீட்டுப் பாவனை மற்றும் வர்த்தக நிறுவனங்கள்	100%	110%
		(ஆ) அரச நிறுவனங்கள்		
	2.9	மனித வள அபிவிருத்தி மேம்பாடு	30 நாட்கள்	29 நாட்கள்
		(அ) உள்ளக பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	40 நாட்கள்	07 நாட்கள்
		(ஆ) உள்நாட்டு வெளிவாரிப் பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	7800	11560
		(இ) வெளிநாட்டுப் பயிற்சி (பங்குபற்றுனர் எண்ணிக்கை)	250 80	247 88
	2.10	வாடிக்கையாளர்களுக்கான சேவை மேம்பாடு மற்றும் பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுத்தல். நாடளாவிய ரீதியில் பொது மக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் (பாடசாலை/ ஏனையவை)	229	237
	2.11	சக்தி சேமிப்புக் கருத்திட்டங்களிலிருந்தான வருடாந்த சேமிப்பு	30.0	40.6
	2.12	வினைத்திறன்மிக்க வியாபாரத்திற்கான புதிய அறிவைப் பெறும் நோக்கத்துக்காக செயலாற்றப்படும் முறைசார்ந்த, பரிசோதனை ரிதியிலான மற்றும் பரீட்சார்த்த ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பாராமரிப்பு செயற்பாடுகளை தே.நீ.வ.வ.சபையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.		
	2.13	விரிவான ICT அபிவிருத்திச் செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்தலின் மூலம் தனது வியாபாரத்தை மேம்படுத்துவதற்கான அரங்கமாக வெப் தளத்தை பயன்படுத்தி வாடிக்கையாளர் மற்றும் கூட்டிணைந்த உறவை மேம்படுத்துதல் தொடர்பில் மூலதனமிடலுக்கு தே.நீ.வ.வ.ச. தயாராக உள்ளது.		

3. உயர் பொறுப்புடைமை மற்றும் பகிரங்கத்தன்மையை உறுதி செய்தல்		மனித வள அபிவிருத்தி, முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் வியாபாரத் திட்டம் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் வியாபாரக் கருவிகளின் ஒட்டுமொத்த விடயப் பரப்பினையும் அபிவிருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.		
4. கிராமிய மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல்	■	நிதி ரீதியான அதிகார ஒப்படைப்பு		
	■	வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சி		
	■	சொத்துக்களின் மதிப்பிடல்		
	■	முகாமைத்துவத் தகவல்கள் மற்றும் இணைப்பாக்க மேம்பாடு		
	■	வர்த்தக தொழிற்பாடுகள் மீதான கணக்காய்வு	25	25
	■	பண்டகசாலை மற்றும் வழங்கல்கள் மீதான கணக்காய்வு	15	23
	■	காசு.்.காசோலைக் கொடுப்பனவுகள் மீதான கணக்காய்வு	25	41
	■	நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் மீதான கணக்காய்வு	25	16
	■	மொத்தம் 14 துறைகளில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது	190	224


	4.1	தே.நீ.வ.வ.ச. தொழில்நுட்ப உதவியுடன் சமுதாய அடிப்படை அமைப்புகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனையோர்களால் பேணிவரப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் %	10.3%	10.3%

* 2018 இன் இறுதியில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இலக்குகள் திருத்தியமைக்கப்பட்டன.


நீர் வழங்கல் மற்றும் சாக்கடையில் பிரதானமான செயலாற்றுகை

"ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் மூலம் வழங்கப்பட்ட புதிய நீர் வழங்கல் இணைப்புகளைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் மொத்தமாக சனத்தொகையில் 51.8% குழாய்வழி குடிநீர் வழங்கல் சேவையை பெறுகின்றனர்."

பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்குள்ள இயலுமை



சுகாதார மேவுகை



தே.நீ.வ.வ.ச.யின் செயலெல்லையின் கீழ் 348 பாரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர் வழங்கல் திட்டங்கள் இயங்குகின்றன.

ஆண்டினுள் 108,850 புதிய சேவை இணைப்புகள் வழங்கப்பட்டதன் மூலம், சனத்தொகையில் 41.5% வீதமானவர்கள் தே.நீ.வ.வ.ச.யினால் மாத்திரம் வழங்கப்படுகின்ற குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் மூலம் புதிய நீர் வழங்கல் இணைப்புகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் மொத்தமாக சனத்தொகையில் 51.8% ஆனவர்கள் குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்றனர்.

ஆண்டினுள் திறைசேரியினால் கடன் பெறப்பட்ட, வெளிநாட்டு நிதியளிப்பிலான 15 பாரிய அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் நடைமுறையிலிருந்த அதேவேளை, வெளிநாட்டு/ உள்நாட்டு வங்கிகளிலிருந்து தே.நீ.வ.வ.ச.யினால் நேரடியாகக் கடன் பெறப்பட்ட ஏனைய 8 பாரிய அளவிலான வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களும் நடைமுறையிலிருந்தன. இதற்கு மேலதிகமாக, நாட்டின் குழாய் நீர் வழங்கல் மேவுகையை அதிகரிக்கச் செய்வதற்காக 14 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் 02 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் 06 நீர் துறை சார்ந்த சமுதாய வசதியேற்பாட்டு கருத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 03 உள்நாட்டு வங்கி நிதியளிப்பு நீர் வழங்கல் கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதன் மூலம் புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கு அல்லது இருக்கின்ற வாடிக்கையாளர்களின் சேவை மட்டங்களை மேம்படுத்துவதற்கு இயலுமாயிருந்தது.

மேலும், குழாய்வழி சாக்கடை மேவுகையை அதிகரிக்கச் செய்வதற்காகவும், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் ஆண்டினுள் 04 வெளிநாட்டு நிதியளிப்பு சாக்கடைக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, இதில் ஒன்று ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டது.

நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மத்திய ஆய்வுகூடம் தே.நீ.வ.வ.ச.யின் பிராந்திய ஆய்வுகூடங்களுடன் கூட்டிணைந்து தொழிற்படுத்தல் கண்காணிப்பையும் உறுதிப்படுத்தல் கண்காணிப்பையும் மேற்கொண்டது. 2019 ஆம் ஆண்டில் மொத்த பரிசோதனை மாதிரிகளின் பகுப்பாய்வுத் தரவுகள், நுண்உயிரியல் பரிசோதனைகளில் 99.3% திருப்திகரத்தன்மையையும் பௌதீக மற்றும் இரசாயன பரிசோதனைகளில் 87.8% திருப்திகரத்தன்மையையும் வெளிப்படுத்தின.

ஆண்டினுள் வருவாயற்ற நீர் குறைப்பு நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்பட்டன. மூடப்பட்ட எல்லைகள் தாபிக்கப்பட்டதன் பின்னர், கொழும்பு நகரத்தினுள் முக்கியமான பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு, பிரதேச உட்பாய்ச்சல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்புலனாகின்ற நீர்க் கசிவுகளை இனங்காண்பதற்காக இரவு கால ஆய்வு, பாதாள நீர்க் குழாய்களின் ஆய்வு மற்றும் வீட்டுக்கு வீடு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கிணங்க ஆண்டின் இறுதியில் மேல் மாகாணத்திலும் நாடளாவிய ரீதியிலும் வருவாயற்ற நீர் முறையே 26.14% மற்றும் 24.95% ஆக குறைக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாட்டுச் செலவினங்கள் அதிகரித்ததற்கு ஏற்புடையவாறு அறவீட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே அண்மிய ஆண்டுகளினுள் காசுப் பாய்ச்சலை முகாமைத்துவம் செய்வதில் சபை கஷ்டமான நிலைமைகளை எதிர்நோக்கியது. சபையின் ஐந்தொகையை வலுப்படுத்துவதற்காக மொத்த வெளிநின்ற கடன்களை பங்குகளாக மாற்றுவதற்கான கொள்கைத் தீர்மானமொன்று 2014 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், புதிய கடன்களின் கடன் கடப்பாடுகளின் காரணமாக அது வெற்றியளிக்கவில்லை.

2017 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. ரூபா 1,816,772 தொகை இலாபத்தை பதிவு செய்தது. எவ்வாறாயினும், பிரதானமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து அறவீட்டுத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையினால் அதனைத் தொடர்ந்து வந்த 2018 மற்றும் 2019 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் முறையே ரூபா 568,695,429 மற்றும் 1,176,834,646 நட்டத்தைப் பதிவு செய்தது.

முக்கியமான புள்ளிவிபரங்கள்: நீர் வழங்கல்

		2018	2019	வேறுபாடு(%)
முக்கியமான புள்ளிவிபரங்கள்: நீர் வழங்கல்				
நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை		348	**348**	-
குழாய் நீர் உற்பத்தி (மில்லியன் க.மீ.)		707	**746**	5.52
குழாய் நீர் நுகர்வு (மில்லியன் க.மீ.)		531	**560**	5.46
வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	936,927	**967,594**	3.27
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	1,206,349	**1,273,049**	5.53
மொத்த வீட்டு நீர் வழங்கல் இணைப்புகள்		2,143,276	**2,240,643**	4.54
பொது நீர்க் குழாய்கள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	483	**480**	0.63
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	1,057	**865**	2.22
மொத்த பொது நீர்க் குழாய்கள்		1,540	**1,345**	14.5
வீடல்லாத நீர் இணைப்புகள் (எண்ணிக்கை)				
	(அ) மேல் மாகாணம்	89,925	**94,895**	5.53
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	95,453	**101,966**	6.82
மொத்த வீடல்லாத நீர் இணைப்புகள்		185,378	**196,861**	6.19
(பொது நீர்க் குழாய்கள் உள்ளடங்கலாக)				
மொத்த நீர் வழங்கல் சேவை இணைப்புகள்		2,328,654	**2,437,504**	4.67
குடும்பமொன்றின் மாதாந்த சராசரி நீர் நுகர்வு				
(வீட்டு இணைப்பு/க.மீற்றர்)	(அ) மேல் மாகாணம்	17.62	**17.63**	-
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	13.30	**13.60**	-
நீர் உற்பத்திக்கான சராசரி மீண்டுவரும் செலவு (ரூபா/ க.மீ.)		39.60	**41.20**	(3.88)
சராசரி மொத்த செலவு/ விற்பனை அலகு (ரூபா/க.மீ.)		50.54	**51.52**	(1.90)
சராசரி அலகு வருவாய் (கட்டண பட்டியல்/நுகர்வு) (ரூபா/க.மீ.)		42.88	**42.86**	(0.05)
மாதாந்த சராசரி வீட்டு கட்டண பட்டியல் பெறுமதி (ரூபா)				
	(அ) மேல் மாகாணம்	804.37	**801.57**	(0.35)
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	468.38	**491.32**	4.90
சேகரிப்பு வினைத்திறன்		1.05	**1.10**	4.76
ஆழ் கிணறுகள் (எண்ணிக்கை)	(அ) துளையிடப்பட்டவை	335	**201**	-
	(ஆ) வெற்றியளித்தவை	282	**178**	-
வருவாயற்ற நீர் (%)				
	(அ) மேல் மாகாணம்	26.16	**26.14**	0.08
	(ஆ) ஏனைய மாகாணங்கள்	23.50	**23.62**	(0.51)
	(இ) நாடளாவிய	24.93	**24.95**	(0.08)
முக்கியமான புள்ளிவிபரங்கள்: சாக்கடை				
வீட்டு இணைப்புகள்				
	மேல் மாகாணம்	16,531	**16,849**	1.92
	ஏனைய மாகாணங்கள்	660	**2,168**	228.48
வீடல்லாத இணைப்புகள்				
	மேல் மாகாணம்	1,365	**1,401**	2.6
	ஏனைய மாகாணங்கள்	225	**410**	8.22
வீட்டுத் திட்ட இணைப்புகள் (மொத்த)				
	மேல் மாகாணம்	3,666	**3,666**	-
	ஏனைய மாகாணங்கள்	-	**-**	-
மொத்த சாக்கடை இணைப்புகள்	நாடளாவிய	22,447	**24,494**	9.12
	மேல் மாகாணம்	21,562	**21,916**	1.64
	ஏனைய மாகாணங்கள்	885	**2,578**	191

குறிப்பு: "*" வெற் இன்றி

+ (Ve) மாற்றங்கள் சாதகமான பெறுபேறுகளை காட்டுகின்றன.

	2018	2019	மாற்றங்கள் (%)
ஏனைய முக்கியமான புள்ளிவிபரங்கள்			
மொத்த வருமானம் (ரூபா மில்லியன் - வெற் வரியின்றி)	22,79	**24,002**	5.42
மொத்த மீண்டுவரும் செலவினம் (ரூபா மில்லியன்)	28,012	**30,909**	(9.37)
தொ.ப.பதவியினர்/1000 இணைப்புகள்	3.61	**3.36**	7.44
மொத்த பதவியினர்/1000 இணைப்புகள்	4.31	**3.99**	8.02
அபிவிருத்திச் செலவினம் (ரூபா மில்லியன்)	66.54	**77.44**	16.38

குறிப்பு: "*" – வெற் இன்றி

+ (Ve) மாற்றங்கள் சாதகமான பெறுபேறுகளை காட்டுகின்றன.


"2018 ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்றபோது, 5.52% இனால் உற்பத்தி அதிகரித்துள்ளதுடன், 2019 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த குடிநீர் உற்பத்தியின் அளவு 746 மில்லியன் க.மீ. களாக காணப்பட்டது."

நீர் வழங்கல்


குடிநீர் உற்பத்தி

2018 ஆம் ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகின்றபோது, 5.52% இனால் உற்பத்தி அதிகரித்துள்ளதுடன், 2019 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.சபையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த குடிநீர் உற்பத்தியின் அளவு 746 மில்லியன் க.மீ. களாக காணப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் குடிநீர் உற்பத்தியின் போக்கு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 52.85% வீதமான பெரும் பகுதி மேல் மாகாணத்தின் நீர் வழங்கல் முறைமைகளான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ, பியகம, பம்புகுழிய மற்றும் கந்தான, களுத்துறையின் கெத்ஹேன ஆகிய நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

மில்லியன் கன மீற்றர்



2019 காலத்தினுள் மாகாண ரீதியில் நீர் உற்பத்தி



உற்பத்திச் செலவு

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்கின்ற வகையில் மொத்த உற்பத்திச் செலவு (ரூபா. மில்லியன்) பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.


உற்பத்திச் செலவு ரூபா/கன மீற்றர்

2018	2019
50.54	51.52

உற்பத்திச் செலவு = மொத்தச் செலவு/ விற்பனை செய்யப்பட்ட அலகுகள்

உற்பத்திச் செலவு

ரூபா மில்லியன்




சேவை இணைப்புகள் பற்றிய ஒப்பீடு


மாகாணம்/ பி.சே.நி	மாகாண/ பி.சே.நி. ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை			தே.நீ.வ.வ.ச. பிரதேசம்	தேநீவவச பிரதேச ரீதியில் சேவை இணைப்புகளின் எண்ணிக்கை		
	2018 திசெம்பர் இறுதியில்	**2019 திசெம்பர் இறுதியில்**	மாற்றம் %		2018 திசெம்பர் இறுதியில்	**2019 திசெம்பர் இறுதியில்**	மாற்றம் %
மேல் - மத்திய	478,438	**494,037**	3.26	முன்னுரிமை**	**1,874**	**1,879**	0.27
				கொழும்பு நகரம்	**144,712**	**145,607**	0.62
				கோட்டே	**171,952**	**177,054**	2.97
				மஹரகம	**159,900**	**169,497**	6.00
மேல் - வடக்கு	284,106	**293,704**	3.38	களனிய	**203,924**	**210,942**	3.44
				கம்பஹா	**80,182**	**82,762**	3.22
மேல் - தெற்கு	264,308	**274,748**	3.95	தெஹிவல	**109,321**	**111,302**	1.81
				களுத்துறை	**70,074**	**72,903**	4.04
				பாணந்துறை	**84,913**	**90,543**	6.63
மத்திய	272,559	**282,214**	3.54	கண்டி வடக்கு	**104,222**	**108,741**	4.34
				கண்டி தெற்கு	**88,838**	**91,498**	2.99
				கண்டி கிழக்கு	**79,499**	**81,975**	3.11
வட மேல்	82,548	**87,855**	6.43	குருணாகல்	**82,548**	**87,855**	6.43
வட மத்திய	121,541	**131,995**	8.60	அனுராதபுரம்	**121,541**	**131,995**	8.60
சப்பிரகமுவ	112,466	**118,854**	5.68	இரத்தினபுரி	**55,264**	**59,182**	7.09
				கேகாலை	**57,202**	**59,672**	4.32
தென்	320,351	**330,915**	3.30	அம்பாந்தோட்டை	**109,766**	**113,066**	3.01
				மாத்தறை	**99,446**	**101,954**	2.52
				காலி	**111,139**	**115,895**	4.28
ஊவா	103,307	**109,115**	5.62	பண்டாரவளை	**59,316**	**63,010**	6.23
				மொனறாகலை	**43,991**	**46,105**	4.81
வடக்கு	24,199	**28,064**	15.97	யாழ்ப்பாணம்			
				மன்னார்	**24,199**	**28,064**	15.97
கிழக்கு	264,831	**286,003**	7.99	வவுனியா			
				அம்பாறை	**62,744**	**67,459**	7.51
				திருகோணமலை	**73,018**	**81,560**	11.70
				அக்கரைப்பற்று	**78,271**	**81,752**	4.45
				மட்டக்களப்பு	**50,798**	**55,232**	8.73
மொத்தம்	2,328,654	**2,437,504**	**4.67**	**மொத்தம்**	**2,328,654**	**2,437,504**	**4.67**

** 2019 ஆம் ஆண்டில் கொழும்பு நகரப் பிரதேசத்தின் முன்னுரிமை இணைப்புகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டன.


இணைப்புக்களின் அதிகரிப்பு




ஆண்டுக்கான விலைப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு ஒப்பீடு



குடும்பமொன்றுக்கான சராசரி மாதாந்த நீர் பாவனை (தலா இணைப்புக்கான க.மீ.)



குடும்பமொன்றின் சராசரி மாதாந்த விலைப்பட்டியல்



பட்டியலிடலுக்குரிய புள்ளிவிபரங்கள்

விபரம்	2018 (ரூ. மில்)	2019 (ரூ. மில்)
பட்டியல் இலக்கு (வற் வரியின்றி)	23,189	23,830
உண்மை பட்டியல் (வற் வரியின்றி)	22,769	24,002
காசு அறவிடல் இலக்கு (வற் வரியுடன்)	27,809	28,437
உண்மைச் சேகரிப்பு (வற் வரியுடன்)	27,385	28,397


பாவனையாளர் வகுதிவாரியாக விற்பனையாகிய நீரின் அளவும் வருமானமும் (2019)

நுகர்வோரின் வகுதி	விற்பனையின் அளவு		வருமானம்	
	கன மீற்றர் 000	%	ரூபா மில்லியன	%
நேரடி கட்டண அறவீடு #	410,628	73.04	16,721	60.99
பாடசாலைகள்	6,320	1.12	148	0.54
தோட்டக் குடியிருப்புகள்	2,181	0.39	89	0.32
பொது நீர்க் குழாய்கள் மூலமான நீர் வழங்கல்	455	0.08	7	0.03
அரசாங்க நிறுவனங்கள், தே.நீ.வ.வ.ச. வளவுகள்	35,994	6.40	2,542	9.27
வர்த்தக மற்றும் கைத்தொழில்	63,107	11.23	6,313	23.03
சுற்றுலா ஹோட்டல்கள்	3,321	0.59	314	1.15
கப்பல்துறை	120	0.02	67	0.24
முதலீட்டுச் சபை	9,574	1.70	680	2.48
மத வழிபாட்டுத் தலங்கள்	7,206	1.28	153	0.56
உப மொத்தம்	**538,906**	**95.86**	**27,035**	**98.61**
மொத்த வழங்கலுக்கான விலைப்பட்டியல்	19,421	3.45	362	1.32
ஏனையவை *	3,861	0.69	19	0.07
முழு மொத்தம்	**562,188**	**100.00**	**27,416**	**100.00**


வீடுகள், தே.நீ.வ.வ.ச. விடுதிகள், அரச விடுதிகள், கூட்டாட்சி ஆதனங்கள், வரியற்ற வீடுகள், சமூர்த்தி வீடுகள், சமூர்த்தி தோட்ட வீடுகள்

* "நேரடி கட்டண அறவீடின்" கீழ் அல்லது மேலே குறித்துரைக்கப்படாதுள்ள ஏனைய அனைத்து கட்டண அறவிடல் வகுதிகளும் "ஏனையவை" என்ற வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதி ஏற்பாடுகளை பதிலீடு செய்தலும் இவ்வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் வகுதிவாரியாக உபயோகிக்கப்பட்ட நீரின் நூற்றுவீத அளவு



நுகர்வோர் வகுதிவாரியாக வருமான நூற்றுவீதம்



முதலீடுகள் பற்றிய பொழிப்பு

" மேற்படி நிதியியல் மூலோபாயங்களுடன் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை பொறுத்தவரை ரூபா 77.44 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது."

நிதியியல் மூலங்கள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதனிடமுள்ள பல்வேறு விதத்திலான நிதியங்களை முதலீடு செய்து 2019 ஆம் ஆண்டு முழுவதிலும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் அதன் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது.

தே.நீ.வ.வ.ச. 2019 ஆம் ஆண்டுக்காக பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களின் வெளிநாட்டுக் கடன் நிதி அளிப்புகளுக்காக ரூபா 538 மில்லியன் குறைநிரப்பு ஒதுக்கீட்டுடன் கூடியதாக ரூபா 28.04 பில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்தது. இக்கருத்திட்டங்களுக்கான உள்நாட்டு பங்களிப்பு நிதியாக, வற் மற்றும் சுங்கத் தீர்வை தொடர்பிலான செலவினங்களுக்காக ரூபா 4,268 மில்லியன் நிதி ஒதுக்கீடும், திறைசேரியின் மூலம் மக்கள் வங்கிக் கடன் பணியுடனான (ரூபா 2.57 பில்லியன்) மீதி உள்நாட்டு ஆக்கக்கூறும் தே.நீ.வ.வ.ச.யின் சொந்த நிதியாக ரூபா 1,229.86 மில்லியனும் ஒதுக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட 2 பாரிய அளவிலான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களுக்காக உள்நாட்டு திரண்ட நிதியத்திலிருந்து ரூபா 138.6 மில்லியன் வழங்கப்பட்ட அதேவேளை தெரிவு செய்யப்பட்ட இரண்டு பாரிய அளவிலான சாக்கடைக் கருத்திட்டத்துக்காக ரூபா 93.4 மில்லியன் வெளிநாட்டு நிதி அளிப்பு அல்லது மீளளிப்பு வெளிநாட்டு நிதி அளிப்பும் ஒதுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நீர் வழங்கல் கருத்திட்டங்களின் கடன் பணிக் கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் மூலம் ரூபா 9,183.38 மில்லியன் வழங்கப்பட்டது.

தோற்றம்பெற்றுவரும் சிறிய நகர்சார்ந்த (சிறிய மற்றும் நடுத்தர) நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கருத்திட்டங்களுக்காக, மூன்று சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்காக மற்றும் நாடு முழுவதிலுமான பயன்பாட்டு இடம்பெயர்த்தல் வேலைகளுக்காக ரூபா 590 மில்லியன் உள்நாட்டு நிதி வழங்கப்பட்ட அதேவேளை காணி கொள்ளல் நடவடிக்கைகளுக்காக ரூபா 170 மில்லியன் ஒதுக்கப்பட்டது. மேலும், நீர் வழங்கல் துறை சமுதாய வசதியேற்பாடுகளின் கீழான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 915 மில்லியன் உள்நாட்டு நிதியும் ரூபா 50.0 மில்லியன் வெளிநாட்டு அளிப்புகளும் வழங்கப்பட்டது.


மேலும், இலங்கை அரசாங்கத்தின் (GOSL) நேரடி நிதி ஒதுக்கீட்டின் மூலம், தே.நீ.வ.வ.ச.யினால் இலங்கை அரசாங்க உத்தரவாதத்துடன் கூடியதாக வெளிநாட்டு.'. உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடனிலிருந்து பெறப்பட்ட நிதியின் ஊடாக நீர் வழங்கல் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூபா 25.09 பில்லியன் செலவிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2019 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு வங்கிகளிலிருந்து கடனாக பெறப்பட்ட ரூபா 3.06 பில்லியன் தொகையின் மூலம் 14 உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களையும் 2019 இல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு புதிய கருத்திட்டங்களையும் தே.நீ.வ.வ.சபை நடைமுறைப்படுத்தியது.

மேற்படி நிதியியல் மூலோபாயங்களுடன் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளை பொறுத்தவரை ரூபா 77.44 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.சபைக்கு இயலுமாயிருந்தது.

2015 - 2019 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறை தொடர்பிலான மொத்த முதலீடு

ரூபா மில்லியன்


2015 - 2019



2018:.2019 பிரதான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மூலதன நிதியங்களின் பயன்பாடு

விபரம்	2018		2019	
வெளிநாட்டு நிதித் தொகை (ரூபா மில்லியன்)	30,619	154%	31,551	112%
வெளிநாட்டு உதவியுடன் தொடர்புடைய உள்நாட்டு நிதியத் தொகை (ரூபா மில்லியன்)	6,157	100%	3,962	90%
உள்நாட்டுக் கருத்திட்டங்களுக்கான திரண்ட நிதியங்கள் (ரூபா மில்லியன்)	1,003	69%	795	46%
கடன் பணிக் கொடுப்பனவு			9,183	100%
மொத்தம்	37,779	137%	45,491	104%

நன்கொடை வழங்குனர்களால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் ஏற்புடைய நிதியங்கள்



2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

பிராந்திய உதவி நிலையம்	கருத்திட்டத்தின் பெயர்	முகவர்	மொ.ம.செ. ரூபா மில்லியன்	நலன்பெறுனர்
மேல்	பெறுபேறு அடிப்படையிலான உதவிக் கருத்திட்டங்கள் தொடர்பிலான உலகளாவிய பங்காண்மை	உலக வங்கி	1,876.00	44,000
	அவிசாவலை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	இலங்கை வங்கி	1,382.00	21,650
கிழக்கு	அம்பாறை விநியோக வலையமைப்பு	NDB,BOC,DFCC	6,848.00	200,000
வடமேல்	கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம்	DFCC	3,126.00	22,500

ஊழியர்கள்

> “ 2018 இல் ஆயிரம் இணைப்புக்களுக்கு 4.31 ஆக இருந்த பணியாளர் வீதம் 2019 இல் 3.99 ஆக குறைக்கப்பட்டது.. ”

பதவியணியின் பலம்


பதவியணி	2018	2019
(அ) நிரந்தர	9,901	9,564
(ஆ) அமைய	0	0
(இ) ஒப்பந்த	121	137
(ஈ) பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர் மற்றும் பொ.தொ.	24	24
மொத்தம்	**10,046**	**9,725**

2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிரந்தர பதவியினர்கள் 9,564 பேரும், 137 ஒப்பந்த ஊழியர்களும், 24 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர்கள் மற்றும் பட்டதாரி பயிலுனர்களும் காணப்பட்டனர். பெரும்பாலான ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களின் பொருட்டே ஆட்சேர்க்கப்பட்டனர்.


2019 சனவரி முதல் திசெம்பர் வரையிலான காலத்தினுள் பல்வேறான பதவியணியினர் வகைகளின் கீழ் 437 நிரந்தர ஊழியர்களும், 41 ஒப்பந்த ஊழியர்களும் 01 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனரும் ஆட்சேர்க்கப்பட்டனர். இதே காலப்பகுதியில் பணியாளர்களின் பல்வேறு வகைகளிலும் 810 நிரந்தர ஊழியர்கள், 25 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் 01 பொறித்தொகுதி தொழில்நுட்பவியலாளர் பயிலுனர் ஓய்வுபெறுதல், பதவி விலகல், பதவி விட்டு நீங்குதல், மற்றும் இறப்புகள் என்ற வகையில் நீங்கிச் சென்றனர். இதன் பெறுபேறாக மொத்த பதவியணியினர் தொகை 2018 திசெம்பருக்கு ஒப்பீட்டளவில் 321 ஆல் குறைவடைந்தது.

2018 இல் ஆயிரம் இணைப்புக்களுக்கு 4.31 ஆக இருந்த பணியாளர் வீதம் 2019 இல் 3.99 ஆக குறைக்கப்பட்டது.

பிரதானமான தொழில்களின் அடிப்படையிலான பதவியணியினர் பகிர்வு



அமைவிடத்தின்படி பதவியணியினர் பகிர்வு



பதவியணிக்கான நலன்கள்

- ஆண்டினுள் உற்பத்தித் திறன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு உள்ளடங்கலாக வருடாந்த மிகையூதியம் ரூபா 42,000.00 செலுத்தப்பட்டது.
- முன்னைய ஆண்டுகளைப் போன்று உபயோகிக்கப்படாத மருத்துவ லீவுக்கான பணக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட்டது.
- 2019 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்ட உலக நீர் தின வைபவத்தில் ஊழியர்கள் தே.நீ.வ.வ.ச.க்கு வழங்கிய களங்கமற்ற சேவையின் பொருட்டு பாராட்டப்பட்டனர்.
- சலுகைக் கட்டணத்தின் கீழ் அலுவலர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.
- சேவையில் ஈடுபட்டிருந்தபோது மரணமடைந்த நிரந்த ஊழியர்களின் சார்பில் மரண உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கான தேனீர் கொடுப்பனவாக ஆளொருவருக்கு ரூபா 650.00 வழங்கப்பட்டது.
- அரசாங்க வங்கிகள் ஊடாக கடன் (வீடமைப்புக் கடன் மற்றும் வாகனக் கடன் முறையே மக்கள் வங்கியிலிருந்தும் இலங்கை வங்கியிலிருந்தும்) வசதிகள் வழங்கப்பட்டன.
- இதற்கு மேலதிகமாக தே.நீ.வ.வ.சபையின் மூலம் பத்து மாதக் கடன் மற்றும் ஓராண்டுக் கடன் வசதிகள் (வட்டி 4.2%) வழங்கப்பட்டன.
- ஊழியர்களுக்கு தலா ரூபா 10,000/- பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் 99 ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 50,601,721.00 பன்னிரண்டு மாதக் கடனாகவும், ஊழியர்களுக்கு மத்தியில் ரூபா 8,665,105,188.00 பத்து மாதக் கடனாகவும் சலுகை வீதத்தின் கீழ் வழங்கப்பட்டது.
- ஊழியர்களின் (குடும்ப அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக) மருத்துவச் செலவுகளின் மீளளிப்புக்காக (ஏறத்தாழ) ரூபா 95 மில்லியன் உறப்பட்டதோடு, இதற்கு மேலதிகமாக, தீவிர நோய்களுக்கான மருத்துவ செலவுகளும் உறப்பட்டன.

பதவியணியினர் ஊதியமும் நன்மைகளும்

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான பதவியணியினர் ஊதிய ஒப்பீடு

விபரம்	2018 ரூபா மில்லியன்	2019 ரூபா மில்லியன்
சம்பளங்கள்	11,976	11,985
ஊழியர் சேம நிதியத்துக்கான பங்களிப்பு	1014	994
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு	254	248
மொத்தம்	**13,244**	**13,227**

மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி

2019 பயிற்சித் தேவைப்பாட்டுப் பகுப்பாய்வு மற்றும் கிடைக்கப்பெற்ற விஷேட பயிற்சித் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு வகுதிகளையும் சார்ந்த ஊழியர்களுக்காக ஆண்டினுள் மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு 293 உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதோடு, மொத்த ஊழிர் பங்கேற்பு 11,560 (முகாமைத்துவம் - 1,015, ஏனைய நிறைவேற்றுத்தரம் - 3,757, மேற்பார்வைத்தரம் 2,692, எழுதுவினைஞர் மற்றும் சமாந்திர தரம் - 3,096, தொழிற்பாட்டு 1,000) ஆக காணப்பட்டது.


மொத்தம் 5,450 பயிற்சி நாட்களை உள்ளடக்கியதாக நாட்டிலுள்ள ஏனைய பயிற்சி நிறுவனங்களின் ஊடாக 247 ஊழியர்களுக்கு மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் (MD&T) பிரிவினால் வெளிவாரிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் உள்நாட்டு பல்கலைக் கழகங்களின் மூலம் நடத்தப்பட்ட முதுமாணி மற்றும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் NIBM, CIPM, CETRAC, ICTAD, IESL, CHPB மற்றும் SLIDA ஆகிய அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களால் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளும் உள்ளடங்குகின்றன.

வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் உத்தியோபூர்வ விஜயங்களின் கீழ், சபையின் 88 ஊழியர்களுக்கு ADB மற்றும் JICA, OKP, ITEC, சீனா அரசாங்கம் மற்றும் கருத்திட்ட மானிய நிதி உதவியோடு குறுகிய கால இருதரப்பு நட்புறவு புலமைப்பரிசிலின் கீழ் குறுகியகால வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களின் ஊடாக 152 அலுவலர்களுக்கு கப்பலேற்றலுக்கு முன்னரான பரிசீலனை விஜயங்கள், தொழிற்சாலை ஒப்பந்த பேச்சுவார்த்தைகள், இரட்டை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களுக்கு மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு வசதிசெய்து கொடுத்தது. மேலும், ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் 07 பொறியியலாளர்கள் வெளிநாட்டு முழு நேர கற்கைகளுக்கான 07 **நீண்டகால நட்புறவும் புலமைப் பரிசில்களைப் பெற்றனர்.**


இதற்கு மேலதிகமாக, நாட்டிலுள்ள பல்வேறான நிறுவனங்களிலிருந்து 288 பட்டப்படிப்பு மாணவர்கள், 167 தொழில்நுட்ப பயிலுனர்கள் மற்றும் 92 கணக்கீட்டு/ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பயிலுனர்கள் உள்ளடங்கிய 547 தொழில பயிலுனர்களுக்கு கைத்தொழில் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், வெளிவாரி நிறுவனங்களின் மூலம் நடத்தப்பட்ட வேலைக்களங்கள்/ தொழில்நுட்ப சமர்ப்பணங்கள் ஊடாக 198 ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதோடு, 146 பொறியியல் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஒரு அறிமுக நிகழ்ச்சித்திட்டமும் நடத்தப்பட்டது.

2019 முன்னேற்றம் - பங்குபற்றியோர் எண்ணிக்கை



மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் (MD&T) **பிரிவினால் வழங்கப்பட்ட பயிற்சிகள் பற்றிய சுருக்கம்**



பயிற்சிகளில் பங்குபற்றியோர் பற்றிய ஒப்பீடு (2018 மற்றும் 2019)

	2018	2019
உள்வாரிப் பயிற்சி	11259	11,560
வெளிவாரிப் பயிற்சி	220	247
வெளிநாட்டுப் பயிற்சி	62	88
தொழில்நுட்ப சமர்ப்பணங்கள்	551	198
கைத்தொழில் பயிற்சி	305	547



“ஆயிரக்கணக்கானோர் அன்பின்றி வாழ்கிறார்கள், ஒருவர்கூட நீர் இன்றி வாழ்வதில்லை.”

அநாமதேயம்

நிலையான அபிவிருத்தி



சிலாபம் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

சேவைத் திறன் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள்

தகவல் தொழில்நுட்பம் - வெற்றிக்கும் எதிர்கால வளர்ச்சிக்குமான திறவுகோல்

எதிர்காலப் பயணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் (ICT) முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, நிறுவனத்தின் ICT நிலவரத்தை மேம்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. முக்கியமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு, தொழிற்பாட்டு நடைமுறையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தீர்வுகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. தற்போதைய செயல் நடைமுறைகளை மேம்படுத்தும் பொருட்டு, தன்னியக்கமாக்கல் தொடர்பில் நிறுவனம் முக்கியமாக அக்கறை செலுத்தி வருகின்றது. அத்துடன் சேவை மட்டம் மற்றும் பாவனையாளர் திருப்தியை மேம்படுத்துவதற்காக பல புதிய தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமை

வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமையானது நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மிக முக்கியமான மென்பொருள் தீர்வாகும் என்பதோடு, இம்முறைமையானது அதன் இணைய தொழிற்பாட்டினை 2016 சனவரி தொடக்கம் ஆரம்பித்தது. வர்த்தக தொழிற்பாட்டுடன் தொடர்புடைய மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) செயற்பாட்டுடன் தொடர்புடைய பின்வரும் முக்கியமான செயல் பரப்புகளை உள்ளடக்கக்கூடியவாறு முறைமை மேம்படுத்தப்பட்டது.

- முறைப்பாடு முகாமைத்துவம்
- புதிய இணைப்பு நடவடிக்கைகள்
- பவுசர் மூலமான நீர் வழங்கல் கட்டணங்கள்
- வருவாயற்ற நீர் குறைப்பு நடவடிக்கைகள்
- வேலைக் கட்டளைகளை கையாளுதல்
- கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளைக் கையாளுதல்
- சேகரிப்பு முகவர்களுடனான ஒருங்கிணைப்பு (இணைய, அதேநேர கொடுப்பனவுத் தரவுகள் மாற்றல்)

மத்திய முறைமையின் விடயப் பரப்பு மற்றும் அணுகுதலை மேம்படுத்துவதற்கும் விஸ்தரிப்பதற்குமாக பல செல்லிடத் தொலைபேசி பிரயோக முறைகள் விருத்தி செய்யப்பட்டன. கள உத்தியோகத்தர்களுக்கான வர்த்தக தொழிற்பாட்டு முறைமையை நீட்டிப்பதற்காக கள சேவைகள் செல்லிடத் தொலைபேசி பிரயோகம் வடிவமைக்கப்பட்டதோடு, மானி வாசிப்பவர்களால் களத்தில் மானி வாசிப்புகள் சேகரிக்கப்படுகின்றபோது பாவனையாளர்களுக்கான கட்டணப் பட்டியல்களைத் தயாரிப்பதற்கு வசதி செய்வதற்காக மானி வாசிப்புப் பிரயோகமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஏனைய மென்பொருள் முறைமைகள்

மாற்றமடைகின்ற வியாபார தேவைகளுடன் இணங்கிச் செல்வதற்கு பல்வேறான மேம்படுத்தல்கள்/ திருத்தங்கள் மென்பொருள் முறைமைக்குத் தேவைப்படுகின்றதோடு, இது மென்பொருள் முறைமையின் வாழ்க்கை வட்டத்தின் பராமரிப்புக் கட்டத்தில் முக்கியமானதொரு பகுதியாகக் காணப்படுகின்றது. பயன்படுத்துனர்களின் வேண்டுகோள்களுக்கமைய அத்தகைய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஈடுபட்டது. வர்த்தக தொழிற்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்பப் பிரிவானது முன்னுரிமைச் செயற்பாடுகளாக மனித வள முகாமைத்துவம்/ கொடுப்பனவுப் பட்டியல், பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை போன்ற மென்பொருள் முறைமைகளின் பராமரிப்பிலும் ஈடுபட்டது. தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பாவனையாளர்களுக்கு முக்கியமான இணையத்தள சேவைகளை வழங்குவதற்காக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினையும் வலைத்தளத்தினையும் பேணிவருகின்றது.

வன்பொருள் மற்றும் உட்கட்டமைப்பு பராமரிப்பு

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பிரதானமான பணிகளில் ஒன்றாக பிரதான தரவு நிலையம், வழங்ககம், கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் இணைப்புத் தீர்வுகள் உள்ளடங்கிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளையும் பேணிவருகின்றது. வசதிகளை மேம்படுத்துவதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, கடவத்தை பிராந்திய சேவை நிலையத்தில் அனர்த்த மீட்பு வசதியை தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தே.நீ.வ.வ.சபை பிராந்திய அலுவலகங்களை தலைமை அலுவலகத்துடன் இணைப்பதற்காக பிரத்தியேக இணைய வலையமைப்பை (VPN) பயன்படுத்துவதோடு தற்போது IPVPN இணைப்புகளின் எண்ணிக்கை 150 ஐ தாண்டியுள்ளது. அர்ப்பணிப்புமிக்க இணைப்புகளுக்கு மேலதிகமாக பெரும் தொகையான பயன்பாட்டாளர்களுக்கு தே.நீ.வ.வ.ச. உள்ளக முறைமையுடன் இணைவதற்காக தொலைவிலிருந்து இயக்கக்கூடிய VPN வசதியை வழங்கியுள்ளது. வலையமைப்புக் குழுவினரின் பிரதானமான செயற்பாடுகளில் ஒன்றாக IP VPN தொடர்புகளைப் பேணிவருதல் காணப்படுகின்றது.


2019 ஆம் ஆண்டின் குறிப்பிடத்தக்க அடைவுகள்

நிறுவனத்தில் GIS, வருவாயற்ற நீர் குறைப்பு, SMART மானி வாசிப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ தொழிற்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய புதிய தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு உதவுவதற்காக தரவுத் தளத்தை மேம்படுத்துவதற்கான பெறுகைகள் நடைமுறையையும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு முன்னெடுத்துள்ளதோடு, கடவத்தையில் அனர்த்த மீட்பு நிறையமொன்றையும் தாபித்துள்ளது. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பாரிய செயற்பாடுகளுக்கு மத்தியில் இத்தீர்வுகளின் அபிவிருத்தி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. தே.நீ.வ.வ.ச. அதன் பாவனையாளர் கவனிப்பு மற்றும் களச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டினுள் ஒருசில செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்களையும் சேர்த்துள்ளது.

வர்த்தக நடவடிக்கைகள்

மானி வாசிப்பின் ஊடாக பாவனையாளர்கள் நுகர்வு செய்துள்ள நீரை அளவிடுதல், அதேநேர அடிப்படையில் மாதாந்த கட்டணப் பட்டியல்களை விநியோகித்தல் மற்றும் நீர் விற்பனையிலிருந்து வருமானத்தை சேகரித்தல் ஆகியன வர்த்தகப் பிரிவினால் கையாளப்படுகின்றன. இவ்வாண்டு வெற்றியின் ஆண்டாக பதியப்பட்டுள்ளது. கட்டணப் பட்டியலிடல் இலக்கைத் தாண்டியுள்ளதோடு, வருமான சேகரிப்பும் அதற்கேற்ற வகையில் அமைந்துள்ளது. உரிய நேரத்தில் மாதாந்த கட்டணப் பட்டியல்களை விநியோகித்தல் வற்புறுத்தப்பட்டதோடு, இது நடைமுறை தொடர்பில் பாவனையாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கு காரணமாக அமைந்தது. பாவனையாளர்கள் மாதாந்த கட்டணப் பட்டியல்களை குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் பெறுதல் 2019 ஆம் ஆண்டில் அண்ணளவாக 83% ஐ அடைந்துள்ளது. பாவனையாளரின் தலையீட்டுடன் மானிகளை அணுக வேண்டியிருந்த இடங்கள் முன்கூட்டியே பாவனையாளர்களின் இணைப்பாக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதால், வளவுகள் மூடப்பட்டிருப்பதன் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டுக் கட்டணப் பட்டியல்களை முடியுமானவரை தவிர்க்கக் கூடியதாக இருந்தது. இந்த அணுகுமுறைகூட பாவனையாளர் திருப்தியை மேம்படுத்துவதற்குக் காரணமாக அமைந்தது.


பாவனையாளர்கள் கட்டணப் பட்டியல்களை உரிய நேரத்தில் பெறுதல்



கட்டணப் பட்டியலிடல் மற்றும் சேகரிப்பு

பாவனையாளர் வசதிக்கேற்ப மாதாந்த கட்டணப் பட்டியல்களைச் செலுத்தித் தீர்ப்பதற்கு பல வசதியான முறைகள் முன்னெடுக்கப்பட்டதோடு, பாவனையாளர்கள் அத்தகைய வசதிகளின்பால் மாறுதல் அவதானிக்கப்பட்டது. இதன் பெறுபேறாக பாவனையாளர்கள் மாதாந்தக் கட்டணப் பட்டியல்களை செலுத்தித் தீர்க்கின்ற எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. பாவனையாளர்கள் அவர்களது மாதாந்த கட்டணப் பட்டியல்களை உரிய நேரத்தில் செலுத்துவதற்காக பல்வேறு அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. நாளாந்த துண்டிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு மூலோபாயமாக இருந்தது. பாவனையாளர்கள் 14 நாட்களுக்குள் அவர்கள் செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்தித் தீர்ப்பதன் மூலம் கிடைக்கின்ற நலன்கள் பற்றியும் 30 நாட்களைத் தாண்டி கொடுப்பனவை மேற்கொள்வதன் மூலம் விதிக்கப்படும் அபராதத் தொகை தொடர்பிலும் அறிவூட்டப்பட்டனர். நிலுவைத் தொகைகளை சேகரிப்பதில் மேம்பாடு காணப்பட்டது.


நிலுவைத் தொகைகள்



கடன் காலத்தைக் குறைத்தல்

மாதாந்தக் கட்டணப் பட்டியல்கள் தொடர்பான கடனை அளவிடுகின்ற கடன் காலம் 2016 இல் காணப்பட்ட 0.67 இல் இருந்து 2019 இல் 0.40 ஆக குறைவடைந்துள்ளது.

கடன் காலம்



உள்ளக மற்றும் வெளிவாரிப் பாவனையாளர் திருப்தி

சிறந்த சேவை விநியோகத்தின் பொருட்டு பாவனையாளர்களின் தேவைகள் பற்றி தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டது. பாவனையாளர்களை மகிழ்வூட்டுவதற்கான தயாரிப்புகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. சுய கவனிப்புப் பிரயோகம், SMS ஊடான தொடர்பாடல், உரிய நேரத்தில் மாதாந்த கட்டணப் பட்டியலை விநியோகித்தல், பணியாளர்களின் இயலுமை அபிவிருத்தி, பாவனையாளர்களுக்கான சிறந்த சேவை விநியோகத்தின் பொருட்டு அனைத்து மட்டங்களிலுமுள்ள பணியாளர்கள் தொடர்பில் விழிப்புணர்வை உருவாக்கல் ஆகிய செல்லிடத் தொலைபேசிப் பிரயோகங்கள் முன்னெடுக்கப்பட்டன. உள்ளக மற்றும் வெளிவாரி பாவனையாளர் திருப்தியின் தொடர்ச்சியான மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு நாளாந்தம் செயலாற்றுகை மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராமிய நீர் மற்றும் சுகாதாரம்

சிறிய நகரங்கள் மற்றும் கிராமிய நீர் வழங்கல் பிரிவானது முதன்மையாக கிராமிய மற்றும் கீழ் மட்டத்திலுள்ள சமுதாயங்களுக்கான பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் வசதிகள் தொடர்பில் செயலாற்றுகின்றது. காலநிலை நெகிழ்திறன் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (CRIWMP) ஆக்கக்கூறு 2 இன் கீழ், புத்தளம், அனுராதபுரம், வவுனியா மற்றும் குருணாகல் மாவட்டங்களில் நிலநீர் வள ஆய்வின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு, வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்புப் பணிகள் ஆகியவற்றுடன் கூடியதாக சமுதாய அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் (CBO) உருவாக்கம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. குருணாகல் மற்றும் புத்தளத்தில் நீர் வழங்கல் திட்டங்களுக்கான சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் முறைமைகளைத் தெரிவு செய்வதற்காக வள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, 2,000 வீடுகளுக்கு மழை நீர் தாங்கிகளும் பொருத்தப்பட்டன.

தரப்பினர்களுக்கான பயிற்சியளிப்பு மற்றும் இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய இறுதி முடிவெடுக்கும் பொருட்டு ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது. குருணாகலில் CRIWMP இன் கீழ் கிரபமிய பங்கேற்புத் திட்டமிடல் (VPP) தொடர்பில் பயிற்றுனர்களுக்கு பயிற்சியளிக்கின்ற (TOT) ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. CRIWMP இன் உப கருத்திட்டப் பிரதேசங்களில் முன்னேற்றம் பற்றிய கூட்டங்கள், CBOs களுக்கான நிதியளிப்பு பற்றிய பயிற்சிகள், சமுதாய செயற்பாட்டுத் திட்டம் 1 மற்றும் 2 ஆகியன நடத்தப்பட்டன. 5S எண்ணக்கரு மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

கருத்திட்ட விபரங்களைத் திரட்டுதல் மற்றும் உள்ளடக்க வரைபடங்களை அபிவிருத்தி செய்கின்ற அதேவேளை வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் (RIDEP) இணைப்பாக்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிக நிதியளிப்பின் கீழ் உலக வங்கிக் கருத்திட்ட முன்மொழிவுக்கான னேு வடிவம் தயாரிக்கப்பட்டது.

குருணாகல் தலகொலவெவவில் ஒரு 'மாதிரிக் கிராமத்தை' அமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 'மாதிரிக் கிராமத்தின்' ஒரு ஆக்கக்கூறாக சிறுவர் நூலகம் திறந்து வைக்கப்பட்டதோடு, மர நடுகை நிகழ்ச்சித்திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

நடைமுறையிலுள்ள செயற்பாடுகள் அடையாளம்காணப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டதன் மூலம் கிராமிய நீர் வழங்கல் பிரிவு மீள்ஒழுங்கமைக்கப்பட்டதோடு பிரிவினுள் அடையாளம்காணும் முறைமை தாபிக்கப்பட்டது. புதிய நூல்கள் சேர்க்கப்பட்டு நூலகமும் மீள்ஒழுங்கமைக்கப்பட்டது. தற்போதுள்ள கிராமிய நீர் வழங்கல் இணையத்தளத்தின் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் மேற்கொள்ளப்பட்டது. 5S சான்றிதழைப் பெறுவதற்காக தரப்படுத்தலின் 5S கைநூலைத் தயாரிப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச நீர் மாநாட்டுடன் (IWA) தொடர்புடைய செயற்பாடுகள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன.

பொதுசன விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் குழுக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் நுகர்வோர் சங்கங்களை இலக்காகக் கொண்டு பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுசனத் தொடர்பு அலகினால் மேற்கொள்ளப்பட்டது. நீர் பாதுகாப்பு, சுற்றாடல் விடயங்கள் மற்றும் நீர் நிலைகளைப் பாதுகாத்தல் ஆகியன தொடர்பில் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. இது நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டது. பாடசாலைகளில் 40 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்ட அதேவேளை அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

உலக நீர் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கான நாடகம், ஓவியம் மற்றும் கட்டுரை போட்டிகள் ஆகியன அத்தகைய நிகழ்ச்சிகளில் சில ஆகும்.

நீர் சேவையுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலக்குக் குழுக்களை அறிவூட்டுவதற்காக, நீர் சஞ்சிகையான "ஜலய" 2019 மார்ச், ஜூன் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக வெளியிடப்பட்டது.

பொதுசன தொடர்பு அலகு (PRU) பொதுசன ஊடக விளம்பரப் பணிகளிலும் ஈடுபட்டது. நீர் வெட்டு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திறப்பு விழாக்கள் பற்றிய விசேட அறிக்கைகள் ஆகிய செய்திகள் போன்ற தகவல்கள் ஊடகத்தின் ஊடாக வழங்கப்பட்டன. மேலும், தே.நீ.வ.வ.ச. பிரதிமைக்கு பாதிப்பு ஏற்படுகின்றதான ஊடக கட்டுரைகள் தொடர்பில் திருத்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.



நாடகப் போட்டி - உலக நீர் தினம் 2019

வலுசக்தி முகாமைத்துவம்

பிரதேச உதவி நிலையங்களின் குறித்த பணியாளர்களின் ஒத்துழைப்புடன் வலுசக்தி வினைத்திறனை (குறிப்பிட்ட சக்தி நுகர்வைக் குறைப்பதன் மூலம்) மேம்படுத்துவதற்காக M&E பிரிவின் மூலம் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. யின் சக்திப் பயன்பாட்டுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2019 இல் தே.நீ.வ.வ.ச. யின் மின்சார நுகர்வுக்கான வருடாந்த செலவு அண்ணளவாக ரூபா 4,506 மில்லியனாகும் என்பதோடு, இதில் ரூபா 4,296 மில்லியனான 95.37% நீர் உற்பத்தி மற்றும் நீர் இறைத்தலுக்காக செலவிடப்பட்டுள்ளது. சாக்கடை சுத்திகரிப்பு மற்றும் இறைத்தலுக்காக ரூபா 70 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதேவேளை ரூபா 141 மில்லியன் அலுவலக இடவசதிக்காக செலவிடப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் சக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு அது படிப்படியாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கடந்த தசாப்தங்களில் தர ரீதியிலும் அளவு ரீதியிலும் உயர் மட்டத்திற்கு செயற்பாடுகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. 2004 தொடக்கம் 2019 வரையில் நிறைவு செய்யப்பட்ட அறவீட்டு வகை திருத்தங்கள், மின்னியல் மற்றும் இயந்திரவியல் மேம்பாட்டு வேலைகள் மற்றும் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறாக உயர் வலுசக்தி மற்றும் செலவுச் சேமிப்பு நடைபெற்றுள்ளது.

2019 ஆம் ஆண்டினுள் RSCs க்களின் M&E பிரிவுகளின் உதவியோடு பத்து வலுசக்திக் கணக்காய்வுகள் மற்றும் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 இல் 21 கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நிறைவு செய்யப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள மேற்படி கருத்திட்டங்களின் 2019 ஆம் ஆண்டுக்கான செலவு ஏறத்தாழ ரூபா 190 மில்லியனாகும். இக்கருத்திட்டங்களின் மூலமான செலவின சேமிப்பு ரூபா 41 மில்லியனாகும். 2020 ஆம் ஆண்டில் ரூபா 400 மில்லியன் முதலீட்டுச் செலவில் நடைமுறையிலுள்ள மற்றும் புதிய 49 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2019 இல் நடைமுறையில் உள்ள கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக).

நீர் வழங்கல் திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட முழுமொத்த வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை பேணிவரும் பொருட்டு, பிராந்தியங்களிலுள்ள அனைத்து M&E கருவிகளினதும் திட்டத் தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை M&E பிரிவு கண்காணித்த போதிலும் ஒவ்வொரு RSC யினதும் M&E பணியாளர்கள் எவ்வித தவறுகளும் இன்றித் தொழிற்படுவதை உறுதிசெய்தனர்.

இருக்கின்ற பணியாளர்களைக் கொண்டு மட்டக் கண்காணிப்பு மற்றும் தொலைவிலிருந்து இயக்குகின்ற முறைமை (SCADA) உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதோடு, RSCs க்களின் M&E பணியாளர்களின் ஒத்துழைப்புடன் தெரிவு செய்யப்பட்ட நீர் வழங்கல் திட்டங்களுக்கு பொருத்தப்பட்டது.

வாகனங்கள், நீர் மானிகள் மற்றும் ஏனைய M&E கருவிகளுக்கான M&E கேள்விப்பத்திரங்கள் மற்றும் தனிக் குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. தேவை ஏற்படும் பட்சத்தில் RSCக்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு M&E கருவிகளின் வடிவமைப்பு, நிர்மாணிப்பு, பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பிலான அனைத்து உதவி ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன.

மேலே உள்ளவற்றுக்கு மேலதிகமாக, போக்குவரத்துப் பிரிவு, மத்திய பணிமனை மற்றும் கட்டடப் பராமரிப்பு பிரிவு ஆகியன M&E பிரிவின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

போக்குவரத்துப் பிரிவு M&E பிரிவின் மூலம் மேற்பார்வை செய்யப்படுவதோடு, தே.நீ.வ.வ.ச. யின் அனைத்து வாகனங்களுக்குமான அனுமதிப் பத்திரங்கள், காப்புறுதி, புதிய பதிவுகளின் தயார்படுத்தல்கள், அலுவலகப் பணியாளர் போக்குவரத்துக்கான வாகனங்களை ஏற்பாடு செய்தல், நலன்புரிச் செயற்பாடுகள், அவசர வாகன வழங்கல், தரவுத் தளத்தை பேணிவருதல், செலவு விபரங்கள், விபத்துகள் பற்றிய விபரங்கள் போன்ற அறிக்கைகளை பேணிவருதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

கட்டடப் பராமரிப்புப் பிரிவு பிரதி பொது முகாமையாளர் (DGM) (M&E) யின் கீழ் செயலாற்றுவதோடு, தே.நீ.வ.வ.ச. தலைமை அலுவலகத் தொகுதி மற்றும் சொய்சாபுர, படோவிட்ட மற்றும் ராவதாவத்தை ஆகிய இடங்களிலுள்ள சபை விடுதிகளின் அனைத்து பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்கின்றது.

மத்திய பணிமனையானது தே.நீ.வ.வ.ச. யின் பிரதானமான பணிமனையாகும் என்பதோடு RSCs களின் நீர் மற்றும் சாக்கடை சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளிலுள்ள பம்பிகள் மற்றும் துணைப்பாகங்கள் உள்ளடங்கிய அனைத்து M&E கருவிகளினதும் O&M செயற்பாடுகளுக்கான உதவிகளை வழங்குகின்றது.

மத்திய ஆய்வுகூடம்

2019 ஆம் ஆண்டின் பகுப்பாய்வுத் தரவுகள், நுண் உயிரியல் பரிசோதனையில் 99.3% திருப்திகரத்தன்மையையும் பௌதீக மற்றும் இரசாயன பகுப்பாய்வில் 87.8% திருப்திகரத் தன்மையையும் வெளிப்படுத்தின.

மத்திய ஆய்வுகூடத்திற்கு 2017 ஆம் ஆண்டிலும், பிரதேச ஆய்வுகூடங்கள், மேற்கு உற்பத்தி, அம்பதலேக்கு (அலுமீனியம் சல்பேட் மற்றும் நீரேற்றிய சுண்ணாம்பு) நீர் சுத்திகரிப்பின் வேதியல் பரிசோதனைக்காக 2014 ஆம் ஆண்டிலும் ISO/IES 17025:2005 வழங்கப்பட்டதோடு, 2019 ஆம் ஆண்டு காலத்தினுள் ISO தரம் வெற்றிகரமாகப் பேணிவரப்பட்டது. மேலும், மேல் தெற்குபிரதேச ஆய்வுகூடத்திற்கு (தெஹிவளை மற்றும் பாணந்துறை) பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பரிசோதனைகள் தொடர்பிலும், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆய்வுகூடங்களுக்கு நீரின் பௌதீக மற்றும் இரசாயன அளவுகோள்கள் தொடர்பிலும் 2019 ஆம் ஆண்டில் ISO/IES 17025 வழங்கப்பட்டது. அதேவேளை மேற்படி ஆய்வுகூடங்கள் ISO/IES 17025:2018 தராதர புதிய மீளாய்வைப் பெறுவதற்கு தயாராகி வருகின்றன.

கந்தான மற்றும் பியகம ஆய்வுகூடங்கள் நீர் தர அளவுகோள் தராதரத்திற்கு முன்னேற்றம் கண்டு வருகின்றன. நீர் தர உறுதிப்படுத்தல் கண்காணிப்புக்காக மேல் மத்திய பிராந்தியத்திற்காக இரண்டு ஆய்வுகூடங்கள் தாபிக்கப்பட்டன.

அல்கீக்களின் கணக்கெடுப்புகள் மற்றும் அல்கீ நச்சுப் பகுப்பாய்வு, உயிரினத்தொகுதி உருக்கணக்கிடல், இயக்க உறுப்புகளின் கூட்டுப்பொருட்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு இரசாயனங்கள் - கரிம செயற்பாட்டைக் கொண்ட தூள்கள் (PAC) கண்டுபிடித்தல் ஆகியவற்றுக்கான பகுப்பாய்வுப் பரப்பெல்லையை மத்திய ஆய்வுகூடம் அபிவிருத்தி செய்துள்ளது. SLS 614 மற்றும் SLS 1461 இல் கொடுக்கப்பட்டுள்ள முறைகளுடன் தொடர்புடையதாக நீர் மற்றும் கழிவுநீர் பகுப்பாய்வுக்காக நுண்ணுயிரியல் பிரிவு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

வருவாயற்ற நீரைக் குறைத்தல்

RSC (WC) யின் வருவாயற்ற நீர் (NRW) குறைப்புப் பிரிவானது 2019 ஆம் ஆண்டில் பிராந்தியத்தினுள் மட்டுமன்றி பிராந்தியத்திற்கு வெளியிலும் கசிவுகளைக் கண்டு பிடித்தல், வால்வுகளைக் கண்டறிதல், குழாய்வழிகளைக் கண்டறிதல், நீரோட்ட மற்றும் அழுத்த அளவீடுகளைப் பெறுதல், சட்ட விரோத பயன்பாடுகளைக் கண்டுபிடித்தல், கசிவு கண்டுபிடிப்புகள், உள்ளக கசிவுகளைக் கண்டறிதல், பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், கசிவுத் திருத்தங்கள் மற்றும் DMA வலயங்களைத் தனிமைப்படுத்தல் ஆகிய வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக கொழும்பு நகர பிரதேசத்தில் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் (GCWWMIIP) மேற்கொள்ளப்பட்ட வருவாயற்ற நீர் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவ செற்பாடுகளின் இணைப்பாக்கத்தினையும் இப்பிரிவு மேற்கொண்டது. இச் சூழ்நிலையின் கீழ் கொழும்பு நகரத்தின் வருவாயற்ற நீரை 40.2% ஆக குறைக்க முடிந்ததோடு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 1.0% குறைப்பாகும். மேல் மத்திய பிராந்தியத்தின் வருவாயற்ற நீரின் அளவு 30.7% ஆகுமென்பதோடு இது கடந்த ஆண்டிலிருந்ததை விட 0.9% குறைப்பாகும். வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாட்டிற்கு மேலதிகமாக, வருவாயற்ற நீர் தொடர்பில் தே.நீ.வ.வ.ச.யின் பணியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் நடத்தப்பட்டது.

நிலக்கீழ் நீர்

நகர, நகர்சார் மற்றும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்குவதற்கான நிலக்கீழ் நீர் செயற்பாடுகளில் நிலக்கீழ் நீர் பிரிவு பிரதானமாக ஈடுபட்டது. 2019 ஆம் ஆண்டில் நிலக்கீழ் நீர் பிரிவின் மூலம் பல நிலக்கீழ் நீர் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நீர் புவிச்சரிதவியல் பரிசோதனை, ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடப்பட்ட கிணறுகளை நிர்மாணித்தல், நீண்ட கால நிலக்கீழ் நீர் பெறுகைக்காக கிணறுகள் மற்றும் நீரோட்டங்கள் பற்றிய மதிப்பீடு ஆகியன உள்ளடங்கிய நிலக்கீழ் நீர் அபிவிருத்திச் செயற்பாடுகள் தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் பிரிவின் மூலம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

மேலும், தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் திட்டங்களிலுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற குழாய்க் கிணறுகளின் அபிவிருத்தி, கிணறுகளின் பிரதான பகுதியைப் பாதுகாத்தல், நிலக்கீழ் நீர் மீள்செறிவுக் கற்கைகள், யுனுசுயு மற்றும் ஊமுனுர நிதியத்தின் கீழ் கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளை திருத்துதல் மற்றும் புனரமைத்தல், நிலக்கீழ் நீர் பற்றிய பிரச்சினைகள் தொடர்பில் கற்கைகளை மேற்கொள்ளல் ஆகியன வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும், ஆண்டினுள் மொத்தமாக, 441 நீர்புவிச்சரிதவியல் பரிசோதனைகள், 201 ஆழமான மற்றும் ஆழமற்ற துளையிடல் கிணறுகளை நிர்மாணித்தல், 190 நீர் பாய்ச்சி சுத்தம் செய்தல் மற்றும் கிணறு அபிவிருத்திகள், 34 புதிய கைப்பம்பி பொருத்தல்கள், 48 கைப்பம்பிக் குழாய் கிணறுத் திருத்தங்கள் மற்றும் புனரமைத்தல்கள், 16 பம்பிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி செயற்பாடுகளின் கீழ் நாளொன்றுக்கு 8,000 கன மீற்றர்களால் தற்போதுள்ள மற்றும் புதிதாக நீ.வ.வ.ச.யினால் பராமரிக்கப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் மூலவளக் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது.

நிலக்கீழ் நீர் பிரிவின் இயலளவைக் கட்டியெப்புகின்ற வகையில், நிலக்கீழ் நீர் பிரிவின் பணியாளர்கள் மற்றும் ஏனையோருக்கு நிலக்கீழ் நீர் மூலவள அபிவிருத்தி, துளையிடல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. கிணறுகள் பெருக்கெடுத்தல், அத்தனகலு ஓயா நீரேந்து பிரதேசத்துக்கான மாதிரியாக்கல், கிணறுகளின் பிரதான பாகங்களை பாதுகாத்தல், நிலக்கீழ் நீர் மாசடைதல், நிலக்கீழ் நீர் வரைபடமாக்கல், நிலக்கீழ் நீர் இயக்கத்துக்கான ஓரகத்தனிமக் கற்கை ஆகியன இப்பிரிவினால் கவனம் செலுத்தப்படுகின்ற புதிய விடயங்களாகும்.

வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

தே.நீ.வ.வ.சபையின் தொழிற்பாட்டுக்குத் தேவையான பொருட்கள் தயார் நிலையில் இருத்தல் அவசியமென்பதோடு பொருட்களின் பெறுகைகள் மற்றும் களஞ்சியப்படுத்தலைப் பொருத்தவரை சரியான கொள்வனவுக் கொள்கைகளும் நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பிரிவானது எவ்விதத் தடையுமின்றி தேவையான இரசாயனங்களை ஆண்டு முழுவதிலும் மிக வெற்றிகரமாக விநியோகித்ததோடு ஆண்டினுள் அனைத்து புதிய இணைப்புகளையும் மிருதுவாக வழங்கிய அதேவேளை, எந்தவொரு தீவிர நிலைமைக்கும் முகம் கொடுக்கக் கூடியவாறு மேலதிக கையிருப்பையும் பேணிவந்தது.

கப்பல் தாமதக் கட்டணங்கள் செலுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக வினைத்திறன்மிக்க கப்பற் சரக்குக் கையாளலை உறுதி செய்வதற்கு நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு, அரச திறைசேரி, இலங்கை சுங்கம், வங்கிகள், இலங்கை துறைமுக அதிகாரசபை, கப்பல் சேவைகள், காப்புறுதிக் கம்பனிகள், தீர்ப்பனவு முகவர்களின் நடைமுறைகள், ஏற்புடைய தொழிற்பாட்டு, பராமரிப்பு ஆகியன 650 க்கும் அதிகமான கப்பல் சரக்குக் கையாளல்களை இணைப்பாக்கம் செய்ததன் மூலம் உயர் மட்டத்திலான கப்பல் சரக்குக் கையாளல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக, ரூபா 264 மில்லியன் பெறுமதியுடன்கூடிய உள்ளூர் கொள்வனவுக்கான 983 கொள்வனவுக் கட்டளைகளும் 100 அளிப்புக் கடிதங்களும் வழங்கப்பட்டன. சுங்கத் தீர்வைக் கொடுப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றாக்குறையின் காரணமாக கருத்திட்ட கப்பற் சரக்குகளுக்கு தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளன.

கையிருப்புகளைக் குறைப்பதற்காக இப்பிரிவு பல முறைமைகளைத் தாபித்தது. இவ்வாண்டினுள் புதிய பொருள்களை

கொள்வனவு செய்யாது நாடளாவிய ரீதியிலான பிராந்திய உதவி நிலையங்களில் மேலதிகமாக காணப்பட்ட பொருட்கள் விநியோகிக்கப்பட்டதன் மூலம் ரூபா 125 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையை சேமிக்க முடியுமாயிருந்தது.

பொருட்பட்டியல் முகாமைத்துவ மென்பொருளின் மூலம் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து 342 களஞ்சியங்களையும் தொடர்புபடுத்துவதற்கான நடவடிக்கையொன்று நடைபெற்று வருவதோடு, அது படிப்படியாக அமுலாக்கப்படவுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள களஞ்சியங்களுக்கு 143 கணினிகளை வழங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு தற்போது இது அநேகமாக நிறைவடைந்துள்ளது. முழுமையாக தொழிற்படும் வரை, மேலதிக கையிருப்புகள் மற்றும் பயன்படுத்தப்படாத பண்டங்களை கண்டுபிடித்து தேவைப்படும் RSC க்களுக்கு வழங்கும் பொருட்டு மொத்த SMS முறைமை பயன்படுத்தப்பட்டது. கணினி மென்பொருள் ஊடாக உத்தரவாத காலத்தின் கீழ் பழுதடைகின்ற நீர் மானிகளுக்கு கோரிக்கை விடுத்தல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தே.நீ.வ.வ.ச. அலுவலகங்கள் மற்றும் நாடளாவிய ரீதியிலுள்ள களஞ்சியங்களுக்கு ரூபா 300 மில்லியன் பெறுமதியான மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது.

ஆண்டினுள் ரூபா 1,108.47 மில்லியன் பெறுமதியான 18 ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதோடு, ஆண்டின் இறுதியாகின்றபோது தேவைக்கு அதிகமான மற்றும் பயன்பெறப்படாத பொருட்கள் தொடர்பில் ஏறத்தாழ 42 மில்லியன் பெறுமதியான விலைக் கேள்விகள் கோரப்பட்டது. வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினுள் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பிரிவினால் இயலுமாயிருந்ததோடு, வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் காணப்பட்டது.

நாட்பட்ட சிறுநீரக நோய் (CKDu) நிகழ்ச்சித்திட்டம்

காரணம் அறியப்படாத குணப்படுத்த முடியாத சிறுநீரக நோய் (CKDu) இலங்கையில் பாரியதொரு சுகாதாரப் பிரச்சினையாக உருவாகியுள்ளது. ஆரம்ப கட்டத்தில் இது வட மத்திய மற்றும் ஊவா மாகாணத்திற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிருந்தது. தற்போது இது வடமேற்கு, வடக்கு, மத்திய, கிழக்கு, சப்பிரமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதற்கிணங்க, உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் மருத்துவ தொழில்வாண்மையாளர்களால் விதந்துரைக்கப்பட்டவாறு CKDu பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (தே.நீ.வ.வ.ச.) குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகால மூலோபாயங்களையும் செயற்திட்டத்தையும் அபிவிருத்தி செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டினுள் ரூபா 173.47 மில்லியன் நிதி முதலீடு செய்யப்பட்டு பல CKDu தடுப்புச் செயற்பாடுகள் தே.நீ.வ.வ.ச. யினால் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்பட்டது. நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளை வழங்கிப் பொருத்துதல், நீர்க் குழாய் நீடிப்புகள், புதிய கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் அல்லது அவற்றின் மேம்பாடு, குழிக் கிணறுகளை நிர்மாணித்தல், சிறிய RO பொறித் தொகுதிகளை வழங்கிப் பொருத்துதல், மழை நீர் சேகரிப்புத் தாங்கிகளை பொருத்துதல், பவுசர்களின் மூலம் நீர் வழங்குதல், நீர் தரப் பரிசோதனை, RO பொறித் தொகுதிகள் மற்றும் கைப்பம்பிகளின் திருத்தம் மற்றும் 2018 ஆம் ஆண்டின் பொறுப்புகளைச் செலுத்துதல் ஆகியன பிரதானமாக இந் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

அபிவிருத்தி

2019 ஆம் ஆண்டினுள் அபிவிருத்திப் பிரிவானது பிரதானமாக நீர் பாதுகாப்புத் திட்டமிடல் செயற்பாடுகள் மற்றும் நீர் வளமூலத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

ஏழு பிராந்திய சேவை நிலையங்களில் (RSCs) நீர் பாதுகாப்புத் திட்ட அமுலாக்கத்துக்கான வழிகாட்டல்களை வழங்கல், நீர் பாதுகாப்புத் திட்ட அமுலாக்கத்தின் முன்னேற்றத்தை கண்காணித்தல், நீர் பாதுகாப்புத் திட்ட ஆலோசனைப் பிரிவுடன் சேர்ந்து பிரச்சினைத் தீர்வுக்கான திடீர் யோசனைகளைத் தெரிவிக்கும் செயலமர்வுகளை நடத்துதல், குறித்த பிராந்தியங்களுக்கான உள்ளக முறைசாராக் கணக்காய்வு மற்றும் உள்ளக முறைசார் கணக்காய்வுகள் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்ட பயிற்சித் திட்டங்களை நடத்துதல் ஆகியன அபிவிருத்திப் பிரிவின் கீழ் நீர் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

நீர் உள்ளீர்ப்பு தொடர்பில் எதிர்நோக்கிய மற்றும் அனுபவிக்க நேரிட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் அதேபோன்று குறித்த நிறுவனங்களிலிருந்து நீர் உள்ளீர்ப்பு உரிமையைப் பெறாது புதிய நீர் கருத்திட்டங்களை அமுலாக்குகின்றபோது எழுகின்ற சிரமங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடுவதற்கு தரப்பினர்களுக்கு மத்தியில் நீரை பகிர்ந்துகொள்வதற்கான உயர் மட்ட வழிப்படுத்தல் குழு 2019 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன்படி, நிறுவனங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசத் திணைக்களத்துடன் மேற்படி பிரச்சினைகளை இணைப்பாக்கம் செய்வதன் முக்கியத்துவத்தையும், தரப்பினர்களுக்கு மத்தியில் பரஸ்பர உறவைத் தாபிப்பதன் முக்கியத்துவத்தையும் தே.நீ.வ.வ.ச. இனங்கண்டது.

மேலும், காலநிலை மாற்றத்தின் பெறுபேறாக குறிப்பாக வீட்டு மற்றும் கைத்தொழில் துறையில் நீர் பயன்படுத்தப்படுதல் படிப்படியாக அதிகரித்து வருவதன் காரணமாக ஆண்டு முழுவதிலும் அண்மிய எதிர்காலத்தில் நீர் பற்றாக்குறை மேலும் தீவிரமடையலாம் என்பதை தே.நீ.வ.வ.ச. புரிந்துகொண்டுள்ளது. எனவே, குடிநீர் நோக்கத்திற்காக நீர்த் தேக்கங்களை அறிமுகப்படுத்தும் தீர்வை தே.நீ.வ.வ.ச. கொண்டுள்ளதோடு, யட்டிமஹன, வீஓயா மற்றும் வந்துராபீனுவலவுக்கான சாத்தியவளக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ஆண்டினுள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் மூலம் பல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நீர்க் குழாய்கள் மற்றும் பொருத்துகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மற்றும் சான்றிதழ்பெற்ற குழாய்ப் பணியாளர்களை அறிமுகம் செயதற்காகவும் மொறட்டுவை பிரதேச பொறியியலாளர் பிரிவில் பாவனையாளர்கள் தரப்பிலுள்ள நீர்க் கசிவுகளை மதிப்பிடுதல் மேற்கொள்ளப்பட்டது. அமில-காரத்தன்மையுடனான புளோரைட் நீக்கத்தின் வினைத்திறனை அதிகப்படுத்துவதற்கும் புளோரைட்டின் ஆரம்ப செறிவின் பொருட்டும் செயற்படு கரிமப் பொருள் மற்றும் அலுமினிய உயிரகையைப் பயன்படுத்தி உள்ளீர்ப்புடன் கூடிய புளோரைட் நீக்க நடைமுறையை மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. ஐந்து வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்ட மரக்கசிவுப் பிசின் பொருட்களைப் பரிசோதனை (மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டது) செய்வதன் மூலம் முன்னோடிக் கற்கை ஒன்றின் ஊடாக விளிம்புப் பாதுகாப்பு மரக்கசிவுப் பிசின் தொடர்பிலான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும், நுண் பாசிகளை பயன்படுத்தி நிலைப்படுத்தல் நீர்த் தேக்கத்திலுள்ள கழிவு நீரின் CO_2 உயிர்பொருத்தம் பற்றிய ஆராய்ச்சி, பாதுகாப்பான நீர் வழங்கப்படாத பிரதேசங்களுக்கு சமையல் மற்றும் குடிநீர் நோக்கத்திற்காக நீர் வழங்குவதற்கான முன்மொழிவு, மற்றும் நிலக்கீழ் நீர், தன்னியக்க முறைமை, நீர் சுத்திகரிப்பு ஆகியன தொடர்பிலான ஏனைய சில ஆராய்ச்சிகள் ஆகியன தே.நீ.வ.வ.ச. ஊழியர்களால் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.

தே.நீ.வ.வ.ச.யின் எதிர்கால உயர்மட்ட நீர் சுத்திகரிப்பு தொடர்பில் சீன இலங்கை ஆராய்ச்சி நன்கொடைக் கருத்திட்டத்தின் கீழ் அன்பளிப்பின் ஊடாக மேலும் பொறித்தொகுதிக் கண்காணிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதோடு, இரண்டு நாள் செயலமர்வும் நடத்தப்பட்டதுடன் நில நீர் சுத்திகரிப்பு தொடர்பில் லோன் எக்ஸ்சேன்ஜ் இந்தியா நிறுவனத்துடன் ஒன்றிணைந்த கற்கையை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. வருடாந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆரய்ச்சிப் பத்திரமொன்றின் பெறுபேறின் அடிப்படையிலான அமுலாக்கல் என்ற வகையில் M&E பிரிவுடன் இணைந்து கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான வலுசக்தி முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல் நடைபெற்று வருகின்றது.

ஐந்தாவது வருடாந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்தரங்கு சர்வதேச நீர் கழகம் (IWA) – நீர் அபிவிருத்தி மாநாடு மற்றும் கண்காட்சி (WDCE) 2019, ஒத்துழைப்புடன் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம், மகாவலி அதிகாரசபை மற்றும் சப்பிரகமுவ பல்கலைக் கழகத்தின் 3 வெளிவாரி எழுத்தாளர்களின் பத்திரங்கள் உட்பட 9 பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 02 ஆம் திகதி நடத்தப்பட்டது. அத்துடன் அங்கு 4 சுவரொட்டி சமர்ப்பணங்களும் செய்யப்பட்டது. IWA யின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பேராசிரியர் கலாநிதி வைரவமூர்த்தி பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார். பல்வேறு பிரிவுகளினது பணியாளர்களின் ஈடுபாடு மற்றும் கட்டுரை வரைதலை மேம்படுத்துதல், பெறுபேறுகளின் பகுப்பாய்வு மற்றும் சமர்ப்பணத் திறன்கள் தொடர்பில் எழுத்தாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டதன் ஊடாக வைபவம் வெற்றிகரமாக நடந்தேறியது.



பேராசிரியர் கலாநிதி வைரவமூர்த்தி அவர்கள் பிரதான உரை நிகழ்த்துதல்

புவித் தகவல் முறைமை (GIS) மற்றும் வரைபடமாக்கல்

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு நிகழ்த்திட்டம் (GCWWMIIP) இணையத்தள அடிப்படையிலான GIS ஐ தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதோடு, இதன் பெறுபேறாக GIS அடிப்படையிலான ஆதன முகாமைத்துவத்தின் ஊடாக வருவாயற்ற நீர் முகாமைத்துவத்தின் ஒழுங்குமுறையாக்கல் நடைபெறுகின்றது. இதன் பெறுபேறாக வரைபடக் காட்சிப்படுத்துதலுடன் கூடியதாக தே.நீ.வ.வ.ச. யினுள் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கும், தற்போதுள்ள MIS உடன் GIS ஐ ஒருங்கிணைத்தல், ஆதன நிலைமைகள், இடம்பெறச் செய்தல் மற்றும் அமைவிடம் தொடர்பிலான கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கும் வசதி ஏற்பாட்டினைச் செய்யும்.

GIS மற்றும் வரைபடமாக்கல் பிரிவானது மேற்படி இணையத்தள அடிப்படையிலான GIS இன் அமுலாக்கத்தில் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளதோடு, இது தலைமை அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள பிரதான சேர்வருடன் இணைக்கப்பட்டுள்ளது. அனைத்து புவி-இடஞ்சார் செயற்பாடுகளும் இந்த சேர்வரில் பதிவு செயப்படும். இப்பிரிவானது தெரிவு செய்யபட்ட வலய அலுவலகங்களின் VPN இணைப்பைத் தாபிப்பதில் ஈடுபட்டுள்ளதோடு, பிரதானமான கண்காணிப்பு மற்றும் இணைப்புப் பிரிவாகவும் செயற்படுகின்ற அதேவேளை, அவை வெற்றிகரமாகவும் அட்டவணைப்படுத்தப்பட்ட விதத்திலும் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை இம்முறைமையை ஆரம்பித்து வைப்பதற்கான டிஜிடல் தகவல்களையும் வழங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு காலத்தினுள் GIS மற்றும் வரைபடமாக்கல் பிரிவானது இணையத்தள GIS க்கு தேவையான Arc GIS பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை அட்டவணைப்படுத்துவதிலும் இணைப்பாக்கம் செய்வதிலும் ஈடுபட்டதோடு, 165 ஊழியர்களுக்கு ஆரம்ப GIS பயிற்சி அடிப்படையிலான வரைபடம் தயாரித்தல் மற்றும் ஒவ்வொரு RSC/முகாமையாளர் அலுவலகத்திலிருந்தும் இரண்டு பங்குபற்றுனர்கள் என்றவாறு பெயர் நியமனங்கள் கோரப்பட்டு இணையத்தள GIS பயிற்சி (உயர் பயிற்சி) வழங்குவதில் ஈடுபட்டது.

இதற்கு மேலதிகமாக, நீர் பயன்பாட்டு டிஜிடல் தரவுகளை பூர்த்தி செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல், தரவுகள் பற்றிய வேண்டுகோள்கள் தொடர்பில் செயலாற்றுதல், தரவுகளின் டிஜிடல்மயப்படுத்தலின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், RSCs க்களில் GIS செயற்பாடுகளுக்கு உதவியளித்தல் ஆகியனவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

நீர் பாதுகாப்புத் திட்டங்கள் (WSPs)

தொடர்ச்சியாக பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதிசெய்வதற்கான மிகவும் பயனுள்ள வழிமுறையாக நீர் பாதுகாப்புத் திட்டத்தை (WSP) உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) குடிநீர் தரத்துக்கான வழிகாட்டல்கள் சிபாரிசு செய்கின்றன.

இதற்கிணங்க, தே.நீ.வ.வ.சபையின் மனித வலு அபிவிருத்திப் பிரிவின் கீழ் அனைத்து பிராந்திய சேவை நிலைய பிதேசங்களுக்குமாக பதினொரு நகர நீர் பாதுகாப்புத் திட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. தே.நீ.வ.வ.சபையின் அர்ப்பணிப்புடன் 264 (2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு) நகர நீர் வழங்கல் திட்டங்களில் நீர் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலுமாயிருந்ததோடு, இது தே.நீ.வ.வ.சபையினால் பராமரிக்கப்படுகின்ற மொத்த நீர் வழங்கல் திட்டங்களில் அண்ணளவாக 77% ஆகும் என்பதோடு, இது நாட்டிலுள்ள பிரதானமான அனைத்து நகர நீர் வழங்கல் திட்டங்களையும் உள்ளடக்குகின்றது.

மேலும், கண்டியிலுள்ள நீர் வழங்கல் கருத்திட்ட (WSP) ஆலோசனை அலகின் மூலம் இற்றைவரை 17 உள்ளக முறைசார்ந்த கணக்காய்வுகளும் 17 உள்ளக முறைசாரா கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, தே.நீ.வ.வ.சபையானது இலங்கை பொறியியலாளர் நிறுவனம் (IESL), மற்றும் WHO உள்நாட்டு அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து முதற் தடவையாக தென் கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் 14 வெளிவாரியான முறைசார்ந்த கணக்காய்வை மேற்கொண்டது.

அத்துடன், ஏழு மாவட்டங்களில் உள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்களின் அமுலாக்கல் நடவடிக்கைகளை பலப்படுத்தும் பொருட்டு உலக வங்கி உதவியுடனான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (WaSSIP) கைகொடுத்துள்ளது.

இலங்கையின் நீர் வழங்கல் கருத்திட்ட சூழமைவின் முக்கியமானதொரு திருப்புமுனையாக, WaSSIP மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்துடன் (DoNCWS) ஒன்றிணைந்து கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை அமுலாக்குவதற்கான முன்னெடுப்பைக் குறிப்பிடலாம். மேலும், WaSSIP மற்றும் வர்ல்ட் விஷன் போன்ற அரச சார்பற்ற அமைப்புக்களின் (NGOs) பங்களிப்புடன் பெருந்தோட்டத் துறையில் நீர் வழங்கல் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கலிகமுவ நகர நீர் வழங்கல் திட்டத்தின் வடிவமைப்புக் கட்டத்தில் நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதோடு சில மேம்பாடுகள் நடைபெற்றுள்ளன. இதே விதத்தில் அனைத்து நகர நீர் வழங்கல் திட்டங்களினதும் தெரிவு செய்யப்பட்ட கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் திட்டங்களினதும் நீர் வழங்கல் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் WaSSIP இன் கீழ் நடைபெற்று வருகின்றது. நீர் வழங்கல் கருத்திட்டங்களின் அமுலாக்கல் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக அத்தகைய நீர் வழங்கல் திட்டங்களில் ஆலொசனை மற்றும் ஒத்துழைப்பு விஜயங்களை காலத்திற்குக் காலம் WSPAU மேற்கொள்கின்றது. எனவே, தே.நீ.வ.வ.சபையின் நீர் வழங்கல் கருத்திட்டக் குழுவின் தொலைநோக்கான "சுபீட்சமான வாழ்க்கைக்கு பாதுகாப்பான நீர்" என்பதற்கமைய நாட்டின் அனைத்து பிரசைகளுக்கும் பாதுகாப்பான அணுகுதலை உறுதிப்படுத்துவதற்கான முழுநிறைவான அணுகுமுறை என்ற வகையில் நீர் வழங்கல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் WSP மூலோபாய திட்டம் - 2020 இன் இலக்குகளை அடையப்பெறுவது தொடர்பில் சரியான பாதையில் தே.நீ.வ.வ.ச. செல்கின்றது.



“நீர் இன்றி உயிர்வாழ முடியாது”

அநாமதேய




உட்கட்டமைப்பு அபிவிருத்தி

யாழ்ப்பாணம் உள்வாங்கு நிலையம்

பிராந்திய உதவி நிலையங்கள்

மாகாணம்:.பி.உ.நி.	இணைப்புகள்
மத்திய	282,214
கிழக்கு	286,003
வட மத்திய	131,995
வடமேல்	87,855
வடக்கு	28,064
சப்பிரகமுவ	118,854
தென்	330,915
ஊவா	109,115
மேல் - மத்திய	494,037
மேல் - வடக்கு	293,704
மேல் - தெற்கு	274,748
மொத்தம்	2,437,504



பிராந்திய உதவி நிலையங்கள்

மேல் - மத்திய

மேல் மத்திய பிரதேச உதவி நிலையமானது (RSC-WC) கொழும்பு நகரம் வடக்கு (CCN), கொழும்பு நகரம் தெற்கு (CCS), கோட்டே மற்றும் மஹரகம முகாமையாளர் பிராந்தியங்களை உள்ளடக்குகின்றது. முகாமையாளர் கொழும்பு நகர – வடக்கு (CCN) அலுவலகத்தினால் 2018 தேசிய உற்பத்தித்திறன் விருதை பெறுவதற்கு இயலுமாயிருந்தது.

RSC (WC) யின் வருவாயற்ற நீர் (NRW) பிரிவானது கசிவு கண்டுபிடிப்பு, சட்டவிரோத பயன்பாடுகளைக் கண்டுபிடித்தல், பழுதடைந்த மானிகளை மாற்றீடு செய்தல், கசிவுத் திருத்தங்கள், DMA வலயங்களைத் தனிமைப்படுத்தல் ஆகிய பல NRW குறைப்புச் செயற்பாடுகளை மேற்கொண்டது. அத்துடன் (GCWWMIIP) மூலம் NRW கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.கொழும்பு நகரத்தின் NRW ஐ 40.2% ஆக குறைக்க முடியுமாயிருந்ததோடு இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 1.0% குறைப்பாகும். NRW (WC) 30.7% ஆகும். இது கடந்த ஆண்டை விட 0.9% வீதம் குறைவாகும்.

வருவாயற்ற நீர் குறைப்பின் காரணமாக உருவாகின்ற வலுசக்திச் சேமிப்பானது முறைமை வினைத்திறனுக்கு இட்டுச் செல்கின்றது. DMA எண்ணக்கருவைப் பயன்படுத்தி விநியோக வலையமைப்பை GCWWMIIP வடிவமைத்தது (நீர் இறைப்பு மணித்தியாலங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்ள்ளது). தனியக்க பம்பி முறைமையை பிரயோகித்தல், உச்ச நேரமல்லாத நேரங்களை நோக்கியதாக பம்பி நிலையத்தில் நீர் இறைக்கும் மணித்தியாலங்களை மாற்றுதல், அனைத்து வலுசக்தி நுகர்வுத் தலங்களிலும் தகுந்த தடுப்புப் பராமரிப்புகள் மற்றும் சூரியசக்தி மின் கலங்களைப் பொருத்துதல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஏனைய வலுசக்தி சேமிப்பு நடவடிக்கைகளாகும். மேலும், பம்பி நிலையங்களுக்கு ISO50001 வலுசக்தி முகாமைத்துவ முறைமையின் அமுலாக்கலை E&M பிரிவு ஆரம்பித்துள்ளது.

RSC க்களில் கையிருப்பு மட்டத்தைப் பேணும் பொருட்டு, களஞ்சிய மொடியுல் முழுமையாக அமுலாக்கப்பட்டதோடு தற்போதுள்ள கையிருப்பைக் கருத்திற்கொண்டு பொருட்களுக்கான வேண்டுகோள்கள் தயார் செய்யப்பட்டதுடன் மேலதிக பொருட்கள் ஏனைய பிராந்தியங்களுக்கு மாற்றப்பட்டன.

நிறுவன ரீதியிலான அபிவிருத்திச் செயற்பாடுகள் என்ற வகையில், மாளிகாகந்தையில் ஒரு பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மட்டக்குளிய, கொட்டாஞ்சேனை மற்றும் கலகெதரவில் மூன்று OIC அலுவலகங்கள், மாளிகாகந்த மற்றும் கலகெதர அலுவலகங்களில் இரண்டு பிராந்திய ஆய்வுகூடங்கள் ஆகியன புதிதாக தாபிக்கப்பட்டன. தனியார் நீர் மாதிரிகளைப் பரிசோதித்தலின் மூலம் பெறப்பட்ட மாதாந்த வருமானம் ஏறத்தாழ ரூபா 200,000.00 ஆகும்.

மாளிகாகந்த நீர்த்தேக்கப் பகுதியில் LED மின் குமிழிகள் மற்றும் CCTV கெமராக்கள் பொருத்தப்பட்தன் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதோடு, பாமன்கட மற்றும் திம்பிரிகஸ்யாய OIC அலுவலகங்களில் அனுமதியற்ற ஆட்கள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக CCTV கெமராக்கள் பொருத்தப்பட்டன. பாவனையாளர் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக மஹரகம மற்றும் கெஸ்பாவவில் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன. கோட்டே, மஹரகம மற்றும் கொழும்பு நகரத்தில் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

CCS பிராந்தியத்தில் செல்லிடத் தொலைபேசிப் பிரயோக மென்பொருள் மானி வாசிப்பவர்களுக்கு மத்தியில் அமுலாக்கப்பட்டதோடு புதிய இணைப்புகளின் மதிப்பீடுகளை வழங்குவதற்கான மென்பொருள் பயன்படுத்தப்பட்டது.

பிராந்தியத்தினுள் 63 மி.மீ. இல் 55.3 கி.மீ., 90 மி.மீ. இல் 6.98 கி.மீ., 110 மி.மீ. இல் 2.81 கி.மீ. விநியோக நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டினுள், ரூபா 170.229 மில்லியன் கொண்ட சுர் வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 138.42 மில்லியன் தொகையை செலவிட்டு புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டினுள் RSC (WC) மூலம் மொத்தம் 15,666 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டதோடு இது இலக்கிடப்பட்ட 16,580 க்கு எதிராக 95% அடைவாகும். கட்டணப் பட்டியலிடல் இலக்கு ரூபா 8,822 மில்லியன் ஆகும் என்பதோடு, உண்மையான கட்டணப் பட்டியல் ரூபா 8,861 மில்லியனாகும் என்பதோடு இது 100% அடைவாகும். அத்துடன், சேகரிப்பு இல்கிடல் ரூபா 9,164 மில்லியனாகும் என்பதோடு உண்மையான சேகரிப்பு 98% அடைவுடன் ரூபா 8,968 மில்லியனாகும். மொத்த RSC (WC) க்கான சேகரிப்பு வினைத்திறன் 101% ஆகுமென்பதோடு கடன் வயது 0.6 மாதமாகும்.

கொழும்பு, கோட்டே - கொலொன்னாவ பிரதேங்களில் வெள்ளப் பெருக்கு மற்றும் எதிர்பாரா நிலைமைகள் போன்ற அனர்த்த நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் பொருட்டு அவசர பதில்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. நீர் வழங்கல் மற்றும் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கொலொன்னாவ, கொத்தட்டுவ, கோட்டே மற்றும் பத்தரமுல்ல நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்தல், கலல்கொட வீதி மற்றும் வானகுரு மாவத்தை நெடுகிலும் குழாய்களை பதிலீடு செய்தல், RSC(WC) யில் GIS தரவுத் தளத்தை மேம்படுத்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்ட ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளாகும். பாடசாலை மாணவர்கள், அரச அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேல் - தெற்கு

RSC (WS) அலுவலகம் மற்றும் முகாமையாளர் (தெஹிவலை) பிராந்தியம், முகாமையாளர் (பாணந்துறை-ஹொரனை) பிராந்தியம், முகாமையாளர் (களுத்துறை) பிராந்தியம் ஆகிய 03 பிராந்திய முகாமையாளர் அலுவலகங்களை பிராந்திய உதவி நிலையம் (மேல் தெற்கு)உள்ளடக்குகின்றது.

சாதகமான சிந்தனை, மனப்பாங்கு மாற்றம், உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான தர வட்டக் கருவிகள், ஆகிய விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள் RSC (WS) அலுவலகம் மற்றும் மூன்று முகாமையாளர் அலுவலகங்களால் அவற்றின் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக ஏற்பாடு செய்யப்பட்டன. RSC (WC) அலுவலகமானது தேசிய உற்பத்தித்திறன் போட்டி - 2020 இல் பங்குபற்றுவதற்காக மேலும் அவர்களது உற்பத்தித்திறனை அட்டவணைப்படுத்தி மேம்படுத்தியதோடு, பிராந்திய அலுவலகங்களும் அவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக சில பயிற்சிகள் மற்றும் அறிமுக நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தன.

விசேடமானதொரு சாதனையாக, பிராந்திய (தெஹிவளை-பாணந்துறை) ஆய்வுகூடத்திற்கு இலங்கை தராதரச் சபையின் மூலம் தராதரச் சான்றிதழ் (ISO/IEC 17025 : 2005 இரசாயன மற்றும் உயிரியல் பரிசோதனைக்கான ஆய்வுகூட தராதரம்) வழங்கப்பட்டது.

பிராந்தியத்தினுள் வருவாயற்ற நீர் அளவைக் குறைக்கும் முகமாக RSC (WS) இனுள் பேருவளை மற்றும் வாத்துவ பிரதேசங்களில் முறையே விசேட 2.2 கி.மீ. AC குழாய்களை பதிலீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. பாணந்துறையின் தெரிவு செய்யப்பட்ட முன்னோடி வலயங்களில் தீவிர கசிவுக் கட்டுப்பாடு தொடர்பில் கவனம் செலுத்தி பாணந்துறை பிரதேசத்தில் "தே. நீ.வ.வ.ச., RSC (WS) இன் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆதன முகாமைத்துவத்துவ மேம்பாடு" தொடர்பில் விசேட JICA நிதியளிப்புக் கருத்திட்டம் நடைபெற்று வருகின்றது.

சில கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் (RWS) உள்ளிட்ட பல பிரதேசங்களில் நீர் தர கண்காணிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பிராந்தியத்தினுள் 64,865 நலன்பெறுனர்களுக்கு 12,839 இணைப்புகள் வழங்கப்பட்டு 120 கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பிராந்தியத்தின் 12 நீர் பாதுகாப்புத் திட்டங்களில் ஒன்பது பூர்த்தி செய்யப்பட்ட அதேவேளை மீதி மூன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், இரசாயன அனர்த்தங்கள், வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஆகியவற்றுக்கான அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பிராந்தியத்துக்கான ஒன்பது சம்பவ முகாமைத்துத் திட்டங்களில் ஆறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

இவற்றிற்கு மேலதிகமாக, மொத்தம் 89.25 கி.மீ. நீளத்திற்கான குழாய் நீடிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு இதில் களுத்துறை பிராந்தியத்தில் 16.1 கி.மீ., பாணந்துறை-ஹொரண பிராந்தியத்தில் 65.6 கி.மீ., தெஹிவளை பிராந்தியத்தில் 7.5 கி.மீ. உள்ளடங்ககின்றது. ஆண்டு முழுவதிலும் அனைத்து பிராந்தியங்களிலும் பல மீள்செறிவூட்டல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வரட்சிக் காலநிலைமையின் காரணமாக களுத்துறை முகாமையாளர் பிரதேசம் உவர் நீர் ஊடுருவுகின்ற தீவிர பிரச்சினையை எதிர்நோக்கியது. தற்காலிக தீர்வாக, முழு (களுத்துறை) முகாமையாளர் பிரதேசத்தையும் உள்ளடக்குகின்றவாறு பவுசர் மூலம் நீர் வழங்கல் ஏற்பாடு செய்யப்பட்டது. களுத்துறையில் உவர் நீர் ஊடுருவலுக்கான நடுத்தரகாலத் தீர்வாக வரட்சிக் காலத்தில் கெத்ஹேன சுத்திரிப்புப் பொறித்தொகுதிக்கு மூல நீர் அனுப்பப்படுவதை இலக்காகக் கொண்டு கொலமோதரவில் உள்வாங்கு நிலையமொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, களுகங்கையின் நதி முகத்துவாரத்திற்கு அண்மித்ததாக ஒரு உவர்ப்பு நீர்த் தடையை அமைப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மக்கொன நீர் கோபுரம் மற்றும் பேருவளை நீர்த் தேக்கத்தில் நீர் இழப்புகள் இனங்காணப்பட்டு வருவாயற்ற நீர் நிதியத்தைப் பயன்படுத்தி சீர்செய்யப்பட்டது. ஆறு முன்னுரிமைக் கருத்திட்டங்கள் அடையாளம்காணப்பட்டு அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவை, கந்தானை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவு மேம்பாடு, இங்கிரிய-ஹந்தபான்கொட நீர் வழங்கல் கருத்திட்டம், கெத்ஹேன மேம்பாடு மற்றும் விஸ்தரிப்புக் கருத்திட்டம், இங்கிரிய நீர் வழங்கல் கருத்திட்டம், தெபுவன (கெத்ஹேன) உள்வாங்கு நிலையத்திற்கு உவர் நீர் உட்பிரவேசிப்பதைத் தடுப்பதற்கான உவர் நீர்த் தடையை நிர்மாணித்தல் மற்றும் களுகங்கை நீரேந்து பிரதேச பாதுகாப்புக்கான பல்தரப்பு பங்காண்மை அணுகுமுறைக் கருத்திட்டம் ஆகியனவாகும்.

அனைத்து மூன்று பிராந்தியங்களும் மானி வாசிப்புப் பிரயோக மென்பொருளைப் பயன்படுத்தி அவர்களது மானி வாசிப்பை 100% மேற்கொள்கின்றன. பாணந்துறை - ஹொரணை பிராந்தியத்தில் ஸ்மார்ட் வலயத் தீர்வு முறையொன்று நிர்மாணிக்கப்பட்டு 24 மணித்தியால இலகு பணச் செலுத்துகை முறைமை ஆரம்பிக்கப்பட்டது.



ஸ்மார்ட் வலயம் - பாணந்துறை-ஹொரணை (Smart Zone Solution)

இதற்கு மேலதிமாக, RSC (WS) வளவில் வாகனத்தைச் ஓட்டிச் செல்கின்றபோதே கட்டணப் பட்டியல்களைச் செலுத்துகின்ற முறைமையை நிர்மாணித்தல் 97% முன்னேற்றத்துடன் அனேகமாக பூர்த்தியடைந்துள்ளது.

தே.நீ.வ.வ.ச. யின் விசேட புலனாய்வுப் பிரிவு 1,562 சட்ட விரோத இணைப்புகளை பரிசோதித்ததோடு, அதில் 102 சட்ட விரோத இணைப்புகளை உறுதிசெய்துகொள்ள முடியுமாயிருந்ததோடு, இதில் 57 இணைப்புகள் RSC (WS) பிராந்தியத்தினுள் உள்ளன.

மேல் - வடக்கு

பிராந்திய உதவி நிலையமானது (மேல் - வடக்கு) முகாமையாளர் (களனி) மற்றும் முகாமையாளர் (கம்பஹா) அலுவலகங்களை உள்ளடக்கியுள்ளது.

RSC (WN) இன் பயிற்சியளிப்புப் பிரிவு சில வகுதிகளை உள்ளடக்கியவாறு 21 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்து நடத்தியது.

பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், கசிவுத் திருத்தங்கள், குழாய் இடுதல் மற்றும் தற்போதுள்ள குழாய்களை இடம்மாற்றுதல், அதிவேக நீரோட்ட மானிகள், வால்வுகள் மற்றும் இணைப்புகளைப் பொருத்துதல் தொடர்பில் ரூபா 60.02 மில்லியன் தொகையான வருவாயற்ற நீர் நிதி ஒதுக்கீட்டில் 98% செலவிடப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் RSC (WN) பிராந்தியத்துக்கான NRW பெறுமதி 19.27% ஆகும். ஒருசில O&M செயற்பாடுகள், விநியோக மேம்பாடு, நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் புதுப்பித்தல் வேலைகளுக்காக ரூபா 98.14 மில்லியன் தொகையான புனமைப்பு நிதி ஒதுக்கீட்டில் 93% செலவிடப்பட்டது.

மீரிகம நீர் வழங்கல் திட்டத்துக்கு கிடையான பிளவுடைய வார்க்கப்பட்ட மாதிரியிலான விரிமையப்போக்குடைய இரு முனை உரிஞ்சுதல் பம்பித் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் முகாமையாளர் அலுவலகம் (களனிய) வுக்கு 30 கி.வொ. சூரிய சக்தி தேறிய மானி முறைமையை வழங்குதல் ஆகியன 2019 ஆம் ஆண்டில் சக்தி சேமிப்புச் செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

கடவத்தை மற்றும் நீர்கொழும்பில் உள்ள இரண்டு ஆய்வுகூடங்களிலும் பௌதீக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் தரத்துக்காக மாதாந்தம் 250 நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, THM மற்றும் கன உலோகப் பகுப்பாய்வுகளும் தவணை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அரசதுறை, சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியார் கிணறுகளுக்கு நீர் தரப் பரிசோதனைச் சேவைகள் மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பிராந்தியத்தினுள் அனைத்துத் திட்டங்களிலும் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் தாபிகப்பட்டுள்ளதோடு, ஜாஎல, ரத்தொழுகம மற்றும் களனிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான முறைசார் கணக்காய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அத்தனுகலு ஓயா, மாஓயா, களனி கங்கை மற்றும் தண்டுகம் ஓயா ஆகியவற்றுக்கான நீரேந்து பிரதேசப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கம்பஹா பிரதேச செயலாளர் அலுவலகம், பிரதேச சபை மற்றும் மாகாண சபையின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன.

கிராமிய நீர் வழங்கல் செயற்பாடுகள் என்ற வகையில், குழாய் இடல், இரும்பக சீமெந்து நீர்க் கோபுரம், பம்பி நிலையங்கள், குழிக் கிணறுகளை நிர்மாணித்தல், பம்பிகள், குளோரீனிடல் சாதனங்கள், விசைப் பலகைகளைப் பொருத்துதல் மற்றும் மின்சாரம் வழங்குதல் ஆகியன நடைபெற்றன.



குழாய் இடம்பெயர்வு

2019 ஆம் ஆண்டினுள் பல ஆதன முகாமைத்துவச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. நிலையான ஆதனங்கள் மற்றும் பொருட்பட்டியல் சரிபார்த்தல்கள் நிறைவு செய்யப்பட்டு அரச கணக்காய்வுக்கு கையளிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்படவுள்ள ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன, பேரேட்டுக்கு இணங்க ஆதனப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டது, கைவிடப்பட்ட ஆதனங்கள் ஆதனப் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டன.

P&D பிரிவானது நீர் வழங்கல் திட்டங்கள், நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுகள் மற்றும் உள்வாங்கு நிலையங்களின் விரிவாக்கத்துக்கான வடிவமைப்பு, வரைதல்கள், மதிப்பீடு மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்களை தயாரித்தல், உருக்கு தூலப்பாலங்கள் மற்றும் குழாய் இடம்பெயர்வுகள் (படத்தைப் பார்க்கவும்), நீர்கொழும்பில் ஆய்வுகூடத்துக்கான இரண்டு மாடிக் கட்டடம், கட்டுநாயக்கவில் கட்டான தெற்குக்கான நில நீர்த் தேக்கம் மற்றும் பம்பி நிலையத்தை நிர்மாணித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டது. அத்துடன் தொம்பே பிரதேச செயலாளர் பிரிவில் சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கு குழாய் நீர் விஸ்தரிப்புக்கான மொத்த செலவின மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் முன் சாத்தியவளக் கற்கையிலும் ஈடுபட்டது. மேலும், P&D பிரிவானது 2018 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து பொறியியலாளர்களின் தொழில்வாண்மை மீளாய்வுப் பரீட்சையில் வடிவமைப்பு அனுபவத்திற்கான IESL அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

நிர்மாணிப்புப் பிரிவின் மூலம் பல வீதிப் பிரிவுகள் நெடுகிலும் uPVC, PE மற்றும் DI குழாய் இடுதல்கள், ஒருசில பாலங்கள் மற்றும் வீதி மேம்பாட்டுத் தலங்களில் தற்காலிக மற்றும் நிரந்த குழாய் மீள்இடம்பெறச் செய்தல்கள் மற்றும் பியகம BOI க்கான நீர் வழங்கல் வசதிகளின் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

களனி வலது கரை உற்பத்திக் கொள்ளளவை நாளொன்றுக்கு 185,000 க.மீ. இல் இருந்து 193,000 க.மீ. வரை அதிகரிக்கச் செய்துள்ளதோடு லுகம கலட்டுவாவவிலிருந்து RSC (WN) க்கான நீர் வழங்கல் நாளொன்றுக்கு 10,000 க.மீ. இல் இருந்து 12,000 க.மீ. வரை அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது.

ஆண்டினுள் வழங்கப்பட்ட 9,598 புதிய நீர் வழங்கல் இணைப்புகள் RSC (WN) இன் மொத்த இணைப்புகளின் எண்ணிக்கையை 293,704 ஆக அதிகரிக்கச் செய்துள்ளது. இரண்டு பிராந்தியங்களிலும் போதியளவு நீர் இன்மையின் காரணமாக உருவாகியுள்ள தீவிர பிரச்சினைக்கு மத்தியில் இது இலக்கில் 64.1% அடைவாகும். கேள்வியை நிறைவு செய்வதற்குப் போதுமான நீர் உற்பத்தி இன்மையானது பிரதானமான பிரச்சினையாகும்.

தெற்கு

தென் மாகாண முகாமைத்துவம் அதன் பணியாளர்களுடன் சேர்ந்து வரையறுக்கப்பட்ட வளங்களுடன் நுகர்வோருக்கு பாதுகாப்பான நீரை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றியது. அதன் பெறுபேறாக உள்ளக முறைசார் கணக்காய்வில் காலி பெரும்பாக நீர் பாதுகாப்புத் திட்டம் "மிகச் சிறந்த" இடத்தைப் பெற்ற அதேவேளை அம்பலாங்கொடை மற்றும் ஹபுகல நீர் பாதுகாப்புத் திட்டங்கள் "சிறந்த" இடத்தைப் பெற்றன. இதற்கு மேலதிகமாக தங்காலை நீர் வழங்கல் திட்டம், கிரிந்த – புஹுல்வெல்ல நீர் வழங்கல் திட்டம், மாத்தறை குழும நீர் வழங்கல் திட்டம், பிட்டிகல நீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றின் நீர் பாதுகாப்புத் திட்டங்கள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. அம்பாந்தோட்டை முகாமையாளர் அலுவலகம் நடுத்தர அளவிலான சேவைத் துறையில் தேசிய உற்பத்தித்திறனுக்கான விசேட விருதைப் பெற்றது.

வலுசக்தி சேமிப்பு நிதியத்தின் கீழ், வலஸ்முல்ல நீர் வழங்கல் திட்டத்துக்கான விரிமையப் போக்குடைய பம்பித் தொகுதி, பத்தேகமவுக்கான செங்குத்தான டர்பைன் பம்பி மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் RSC அலுவலகத்துக்கான 65 கி.வொ. சூரிய சக்தி தேறிய மனுவிடல் முறைமை ஆகியன பொருத்தப்பட்டன.

புனரமைப்பு நிதியின் கீழ் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் நீர் கோபுரத்தின் புனரமைப்பு, விடுதிகளின் புனரமைப்பு, இரசாயன அளவு இடும் பம்பிகளைக் கொள்வனவு செய்தல், குழாய் இடல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. வருவாயற்ற நீர் (NRW) நிதி ஒதுக்கின் கீழ் பழுதடைந்த வால்வுகள் மற்றும் குழாய்களை பதிலீடு செய்தல், வலயங்களுக்கான குழாய்கள் மற்றும் வால்வு அறைகளை அமைத்தல் மேற்கொள்ளப்பட்டன. 2019 ஆம் ஆண்டு காலத்தினுள் புனரமைப்பு மற்றும் வருவாயற்ற நீருக்கான மொத்த நிதி ஒதுக்கீடும் பயன்படுத்தப்பட்டது.

விநியோக மேம்பாடுகள், சட்டவிரோத இணைப்புகளைப் பரிசோதித்தல், பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், பூச்சிய கட்டணப் பட்டியல்கள் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணப் பட்டியல்களைப் பரிசோதித்தல், தடுப்புப் பராமரிப்புச் செயற்பாடுகள் மற்றும் NRW குறைப்புச் செயற்பாடுகள் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டன. அனைத்து மூன்று பிராந்தியங்களிலும் குழாய் நீடிப்புகள் மொத்தமாக 33 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. தற்போதைய உற்பத்தி வரையறுக்கப்பட்டுள்ளதால் சில திட்டங்களில் குழாய் நீடிப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் மொத்தம் 10,564 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன.

பாதுகாப்பான நீர் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு நீரின் தரம் தொடர்பில் மாத்தறையில் மொத்தம் 7,702 நீர் மாதிரிகளும் அம்பாந்தோட்டையில் மொத்தம் 5,703 நீர் மாதிரிகளும் காலியில் 4,114 நீர் மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன. உள்வாங்கு நிலையங்களில் மற்றும் நீர் மூலங்களில் நீர் தரக் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது. GIS வரைபடங்களில் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை பிராந்தியங்களில் 100% மற்றும் காலி பிராந்தியத்தில் 70% இற்றைப்படுத்தப்பட்டது.

ஆண்டினுள், PE குழாய்கள் வர்த்தக நடவடிக்கைகள், குளோரினை பாதுகாப்பாக கையாளுதல், கண்காணிப்பு மற்றும் அளவீட்டுக் கருவிகளின் அளவுத் திருத்தங்கள், மின்னல் மற்றும் திடீர்செயற் பாதுகாப்பு, நேர்மறைச் சிந்தனை, மானி வாசிப்பவர்களுக்கான செல்லிடத் தொலைபேசிப் பிரயோகத்தின் புதிய பதிப்பு, கனணி மற்றும் MS ஒபீஸ் திறன்கள் தொடர்பிலான பயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. காலி வர்த்தகப் பிரிவு, அம்பலாங்கொடை AE அலுவலகம் மற்றும் வக்வெல்ல பிராந்திய ஆய்வுகூடத்தின் புதுப்பித்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

2019 ஆம் ஆண்டினுள் இமதுவ, அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் மற்றும் மொரவக்க நீர் வழங்கல் கருத்திட்டத்தின்

சாத்தியவளக் கற்கைகளும் அதேபோன்று கதிர்காமம் நீண்டகால முன்மொழிவும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஆண்டினுள் லுனுகம்வெஹர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்ட மற்றும் கதிர்காமம் குறுகியகால முன்மொழிவுக்கான வடிவமைப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஹல்லால நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி – கட்டம் 1 (ரூபா 177 மில்லியன்) மற்றும் தெனியாய நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மேம்பாட்டுக்கான பெறுகைகள் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டன.



பண்டாகிரியவில் அதிவேக நெருஞ்சாலைக்குக் கீழான குழாய் இடல்

ஆண்டினுள் கிரம கட்டுவன நீர் வழங்கல் கருத்திட்டம், காலி பெரும்பாக கட்டம் 111, மாத்தறை குறுகியகால மேம்பாட்டுக் கருத்திட்டம், அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கான நீர் வழங்கல் மற்றும் லுனுகம்வெஹர குறுகியகால முன்மொழிவு நடைமுறைப்படுத்தலின் கீழ் உள்ளன.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மீள் செறிவூட்டல் நிதியின் கீழ் அங்குனுகொலபெலஸ்ஸ பிரதான விநியோக குழாய்க்கான குழாய் இடும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

2019 ஆம் ஆண்டின் இறுதியாகின்றபோது 36% நிதியியல் முன்னேற்றத்துடன் DI குழாய்கள் மற்றும் பொருத்துக்கள் வழங்கலில் 85%, குழாய் இடுதலில் 45% நிறைவடைந்துள்ளது.

வட மத்திய

2019 ஆம் ஆண்டினுள் ரூபா 222,732.00 செலவிடப்பட்டு ஊழியர்களுக்கு மொத்தம் 30 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

அனுராதபுரம் மற்றும் பொலனறுவையில் உத்தேச கருத்திட்டத்துக்கான காணி (65 காணித் துண்டுகள்) கொள்ளல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. RSC (வடமத்திய) வின் மொத்த ஆதனங்களின் பெறுமதி ரூபா 14,052 மில்லியன் ஆகும். ஆதனங்களின் வருடாந்த சரிபார்த்தல் நிறைவடைந்தது. தயட்ட கிருள, மின்னேரிய, மெதிரிகிரிய, கலாவெவ மற்றும் ரணவிருகம நீர் வழங்கல் திட்டங்களுக்கான மூலதனமிடுதல் நிறைவடைந்துள்ளது. மொத்த மூலதனமிடப்பட்ட தொகை ரூபா 1,113 மில்லியனாகும்.

அனுராதபுரம் பிராந்தியத்தில் 90,636 நீர் வழங்கல் இணைப்புகள் வழங்கப்பட்டு 19 நீர் வழங்கல் திட்டங்கள் தொழிற்பட்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டினுள் மொத்தம் 5,409 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2019 இறுதியில் கட்டணப் பட்டியலிடல் இலக்கு மற்றும் அடைவு முறையே ரூபா 784.64 மில்லியன் மற்றும் 891.59 ஆகுமென்பதோடு இது 114% அடைவாகும். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் சேகரிப்பு இலக்கு மற்றும் அடைவு முறையே ரூபா 834.26 மில்லியன் மற்றும் ரூபா 933.33 மில்லியனாகும் என்பதோடு இது 112% அடைவாகும்.

பொலனறுவை பிராந்தியத்தில் மொத்தம் 9 நீர் வழங்கல் திட்டங்கள் தொழிற்பட்டு வருகின்றதோடு, இது 41,359 இணைப்புகளை உள்ளடக்குகின்ற அதேவேளை 2019 ஆம் ஆண்டினுள் 5,004 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2019 இறுதியில் கட்டணப் பட்டியலிடல் இலக்கு மற்றும் அடைவு முறையே ரூபா 361.99 மில்லியன் மற்றும் 425.68 ஆகுமென்பதோடு இது 117.6% அடைவாகும் என்பதோடு சேகரிப்பு இலக்கு ரூபா 388.70 மில்லியன் மற்றும் அடைவு ரூபா 443.29 மில்லியனாகும் என்பதோடு இது 114% முன்னேற்றமாகும்.

பத்து நீர் வழங்கல் திட்டங்கள் நீர் பாதுகாப்புத் திட்டங்களை பூர்த்தி செய்துள்ளன. இரண்டு முறைசாரா உள்ளக நீர் பாதுகாப்புத் திட்ட கணக்காய்வுகள் நிறைவு செய்யப்பட்டன. அராதபுரம் திஸ்ஸவெவ குளத்திற்கான நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இறுபத்தைந்து விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டதோடு, 50 CBO க்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. கிராமிய நீர் வழங்கல் (RWS) பிரிவின் மூலம் நான்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன.

RH நிதி ஒதுக்கீடு, NRW நிதி ஒதுக்கீடு, CKD நிதி ஒதுக்கீடு மற்றும் நீரேந்து பிரதேச பாதுகாப்பில் முறையே 69%, 65%, 91% மற்றும் 88% நிதிசார் முன்னேற்றம் காணப்பட்டது. 'பிபிதெமு பொலனறுவை' அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 90% ஆக காணப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் CKD நிதியத்தின் கீழ் மொத்தம் 203 கைப்பம்பி குழாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டதோடு, 5.075 குடும்பங்களுக்கு நில நீர் வசதிகள் வழங்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் நான்கு புதிய உற்பத்திக் கிணறுகள் துளையிடப்பட்டதோடு தே.நீ.வ.வ.ச. நீர் வழங்கல் திட்டத்தில் 28 உற்பத்திக் கிணறுகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

'பிபிதெமு பொலனறுவை', பயன்பாடுகளின் இடம்பெயர்வு, CKD, புனரமைப்பு, மீள்செறிவூட்டல், தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்பு, NRW, RWS மற்றும் உள்நாட்டு வங்கி நிதி ஆகிய நிதியங்களைப் பயன்படுத்தி மொத்தச் செலவினம் ரூபா 144.44 மில்லியன் தொகையில் முப்பத்திரண்டு ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

எப்பாவல, ராஜாங்கனய, நொச்சியாகம மற்றும் கிரிபாவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டங்களின் தொழில்நுட்ப மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, நிதியியல் மதிப்பீடு ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அனுராதபுரம் பெரும்பாகம் மற்றும் திருகோணமலை பெரும்பாகம் ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டங்களின் தொழில்நுட்ப மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, நிதியியல் மதிப்பீடு நடைபெற்று வருகின்றது.

ISO-17025 ஐ பெறுவதற்காக ஆய்வுகூட வசதிகள் மற்றும் நீர் தர செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன. தேவையான பயிற்சிகள் Physikalisch Technische Bundesansdalt (PTB) கருத்திட்டத்திலிருந்து கிடைத்தன.

நீர் வழங்கல் திட்டங்களில், நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளில் மற்றும் உள்வாங்கு நிலையங்களில் உற்பத்தித்திறன் மேம்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 4,646 கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டதன் பெறுபேறாக வருவாயற்ற நீரை 23.15% கக்கு குறைப்பதற்கு இயலுமாயிருந்தது. மொத்தம் 5,606 பழுதடைந்த மானிகள் கண்டுபிடிக்கப்பட்டு 5,396 மானிகள் திருத்தப்பட்டன.

வடமேல்

RSC (NW) மற்றும் முகாமையாளர் (O&M) அலுவலகத்தினால் 2019.11.01 ஆம் திகதி தொடக்கம் 2022.10.30 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக ISO 9001:2015 முறைமைச் சான்றிதழைப் பெற முடியுமாயிருந்தது.

NRW நிதி ஒதுக்கீட்டுத் தொகையில் 60% ஆன ரூபா 41.94 மில்லியன் தொகை குருநாகல், புத்தளம், கிரிஉல்ல மற்றும் இப்பாகமுவ திட்டங்களில் மின்காந்த நீரோட்ட மானிகளைப் பொருத்துதல், வால்வு அறைகளை நிர்மாணித்தல் மற்றும் விநியோக முறைமை மேம்பாட்டுக்காக செலவிடப்பட்டது. புனரமைப்பு நிதி ஒதுக்கீட்டுத் தொகையில் 73% ஆன ரூபா 79.58 மில்லியன் தொகை வாரியபொல மற்றும் தங்கொட்டுவவில் தற்போதுள்ள திட்டங்களின் அளவு மற்றும் தரத்தை விஸ்தரிப்பதற்காகவும் மற்றும் இரண்டு OIC அலுவலகங்களின் நவீனமயப்படுத்தல் மற்றும் களஞ்சியங்களின் புனரமைப்புக்காக செலவிடப்பட்டது.

பிராந்தியத்திலுள்ள மொத்தக் களஞ்சியங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன் IMS உடன் கூடியதாக 6 பிராந்திய களஞ்சியங்களுடன் வெற்றிகரமாகத் தாபிக்கப்பட்ட புதிய களஞ்சிய முறைமை ஒழுங்காகச் செயற்பட்டு வருகின்றது. அசையாத மற்றும் பயன்படுத்தப்படாத ரூபா 11.27 மில்லியன் பெறுமதியான கையிருப்புப் பொருட்கள் ஏலவிற்பனைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி சேமிப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து வாரியபொலவில் பம்பிகளைப் பதிலீடு செய்தல் மற்றும் ரம்படகலவில் நீர் மட்டக் கண்காணிப்புக் கருத்திட்டத்திற்காக ரூபா 32.5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதோடு இது வருடாந்தம் ரூபா 7 மில்லியன் தொகையை சேகரிக்கும். 6 இடங்களுக்காக செயற்படுத்தப்பட்ட CEB அறவீட்டு வகுதித் திருத்தத்தின் மூலம் வருடாந்தம் ரூபா 21 மில்லியன் சேமிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. AIWSP நிதியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழிற்சாலைக் கட்டடம் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

CKD நிதி ஒதுக்கீட்டின் கீழ் அபுக்ககம (ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது), ஹெட்டிஆரச்சிகம (50% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது) மற்றும் நீர் தரப் பரிசோதனைச் செயற்பாடுகளுக்கு ரூபா 24.24 மில்லியன் செலவிடப்பட்டது. மாரகம, தித்தெனியவத்த மற்றும் மடவக்குளம் நீர் வழங்கல் கருத்திட்டங்களில் 90% நிறைவை அடையப்பெறுகின்ற வகையில் கிராமிய நீர் வழங்கல் திட்ட நிதி ஒதுக்கீட்டில் ரூபா 26.44 மில்லியன் செலவிடப்பட்டது.

துறைசார் திட்டமிடல் பிரிவின் மூலம் திட்டமிடப்பட்ட ஒருசில கருத்திட்டங்கள் பெறுகைகள் செயற்பாட்டின் கீழ் உள்ளன: அவை, பிங்கிரிய உடுபத்தாவ நீர் வழங்கல் திட்டம் (ஹங்கேரி நிதியம்), கலாஓய நீர் சமநிலைக் கற்கை (ADB நிதியம்), கட்டுபொத்த பம்முனுகொட்டுவ (கொரிய நிதியம்), மற்றும் குருநாகல் வடக்கு நகர நீர் வழங்கல் திட்ட சாத்தியவளக் கற்கை (டாட்டா உலகளாவிய நிதியம்).

இரசாயன, பௌதீக, மற்றும் நுண்ணுயிரியல் தரத்தின் பொருட்டு விநியோக முறைமையிலிருந்த மாதாந்தம் 250 நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. மொத்த பிராந்தியத்தையும் உள்ளடக்குகின்றவாறு 11 நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. அலவ்வ, நெலும்பொக்குன மற்றும் வாரியபொலவுக்கான அனைத்து நீர் பாதுகாப்புத் திட்ட மொடியுல்களும் நிறைவு செய்யப்பட்டதோடு, ஏனையவை பகுதியளவு நிறைவு செய்யப்பட்டன.

வடமேல் அபிவிருத்தி நிதியத்தின் உதவியோடு நிர்மாணிக்கப்பட்ட 20 கிராமமிய நீர் திட்டங்களில் 13 திட்டங்கள் மற்றும் பிரதேச செயலக நிதியத்தின் உதவியோடு நிர்மாணிக்கப்பட்ட 6 கிராமிய நீர் திட்டங்களில் 2 திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டன.

பிராந்தியத்தினுள் 63 மி.மீ. இல் 19.89 கி.மீ., 90 மி.மீ. இல் 490 மீ., 160 மி.மீ. இல் 320 மீ. உள்ளிட்ட 20.7 கி.மீ. விநியோக நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது GIS அடிப்படையிலான ஆதன முகாமைத்துவத்தின் கீழ் கிரிஉல்ல, புத்தளம், வாரியபொலவில் 52 இருப்பிலுள்ள/உத்தேச உள்வாங்கு அமைவிடங்களும், மூல நீர் பிரதான குழாய்களும், 16 சுத்திகரிப்புப் பொறித்தொகுதி அமைவிடங்களும், 43 களஞ்சியத் தாங்கிகளும், 2,300 கி.மீ. நீளமான விநியோக முறைமையும், மொத்த மானிகளும், வால்வு அமைவிடங்களும் மற்றும் ஆணமடுவ பாவனையாளர் இணைப்புகளும் பதியப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் என்ற வகையில், மொத்தம் ரூபா 150,000.00 செலவில் மூல நீர் தரத்தை கண்காணிப்பதற்காக அனைத்து நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளிலும் மீன் தடாகங்கள் தாபிக்கப்பட்டன. கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிராதேசங்களுக் சேவையாற்றும் பொருட்டு 3 மாத காலத்திற்காக ரூபா 500,000.00 செலவிடப்பட்டு பவுசர் மூலமான நீர் வழங்கலுக்கு ஏற்பாடு செய்ப்பட்டது.

தற்போதுள்ள உள்வாங்கு நிலையங்களில் நீரின் அளவு போதியதாயில்லாமை மற்றும் உயர் அளவிலான இரும்புத் தாது, கனிமம் மற்றும் வன்தன்மைப் பிரச்சினைகள், அநேகமான சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகள் கொள்ளளவை விடக் கூடுதலாக இயக்கப்படுகின்றமை, குழாய் இடுதல் தொடர்பில் RDA அங்கீகாரத்தைப் பெறுவதில் காணப்படுகின்ற சிரமங்கள், உரிய தொடர்பாடல்களின்றி வீதி நிர்மாணிப்புகள் நடைபெறுவதால் குழாய்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் மற்றும் சாக்கடை வாயிற்புழைகள் மறைக்கப்படுகின்றமை போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

நிலநீர் மீள்செறிவூட்டல் கற்கையின் பொருட்டு வாரியபொல நிலநீர் பிரிவின் மூலம் முன்னோடி நிலநீர் மீள்செறிவூட்டல் வலயமொன்று நிர்மாணிக்கப்பட்டது.



மங்கள விளக்கேற்றல் - ISO வாழ்த்துத் தெரிவிக்கும் வைபவம்

மத்திய

சனத்தொகையில் 42% வீதமான 1.3 மில்லியன் நலன்பெறுனர்களை உள்ளடக்கியதாக RSC (மத்திய) வின் நீர் இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 282,214 ஆக கொண்டுவரப்பட்டுள்ளமை 2019 ஆம் ஆண்டினுள் RSC (மத்திய) அடைந்துள்ள ஒரு சாதனையாகும். 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 1985 மில்லியன் சேரிப்புடன் கூடியதாகவும் 100% இலக்குகளை அடைகின்ற விதத்திலும் குறிப்பிடத்தக்க 7 நாள் கடன் வயதைக் கொண்டதாகவும் 60 மில்லியன் கன மீற்றர் நீர் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

2019 வருவாற்ற நீர் நிதி ஒதுக்கீட்டின் கீழான ரூபா 80 மில்லியனில் ரூபா 73 மில்லியனை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்ப்பட்டன. இரவு கால கசிவு ஆய்வுகள் 78.4 கி.மீ. நீளத்துக்கான விநியோக குழாய்களில் மேற்கொள்ளப்பட்டது. மத்திய - கிழக்கு பிராந்தியத்தின் நீர் வழங்கல் திட்டங்களின் மேம்பாடுகளில் ரூபா 120 மில்லியன் செலவில் சேவை மட்டத்திலான மேம்பாடு மேற்கொள்ளப்பட்டது. அரத்தன நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் அலுவலக மற்றும் ஆய்வுகூடக் கட்டடங்களில் சூரியசக்தி முறைமை தாபிக்கப்பட்டது. ஹிப்பொலவில் 5.3 கி.மீ. நீளமான குழாய் நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய தெற்கு பிரதேசத்தில் நாவலபிட்டிய, பாரதெக, ரிகில்லகஸ்கட, மற்றும் கொழும்பு பெரும்பாக நீர் வழங்கல் திட்டங்களில் நீர் பாதுகாப்பு திட்டங்களின் அனைத்து மொடியுல்களும் நிறைவு செய்யப்பட்டன. RSC மத்திய ஆய்வுகூடம் தே.நீ.வ.வ.ச.க்கான 6,178 நீர் மாதிரிகளுக்கும் வெளித் தரப்பினர்களுக்கான 4,150 மாதிரிகளுக்குமான இரசாயன பகுப்பாய்வுகளை மேற்கொண்டது. RSC மத்திய ஆ்வுகூடத்தின் மூலம் நீர் வழங்கல் சபைக்கான 5,465 மாதிரிகளுக்கும் வெளித் தரப்பினர்களுக்கான 5,213 மாதிரிகளுக்குமான நுண்ணுயிரியல் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக CBOs க்களுக்கான 404 மாதிரிகள் தொடர்பில் கட்டணம் அறவிடாது நுண்ணுயிரியல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மத்திய வடக்கில் சேறு நிதியத்தின் கீழ் ரூபா 14.38 மில்லியனுக்கு குழாய் பதிலீடுகள் மற்றும் 52 புதிய வால்வு அறைகளை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டது. வில்கமுவ மற்றும் தம்புள்ள நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் 10 CBO திட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டன.

மீள்செறிவூட்டல் செயற்பாடுகளின் கீழ் மத்திய தெற்கு பிரதேசத்தில் 20.63 கி.மீ. நீளத்துக்கு (63 – 225மி.மீ.) குழாய் நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் ரூபா 7.93 மில்லியன் செலவிடப்பட்டு புனரமைப்பு செயற்பாடுகளும் ரூபா 7.09 மில்லியன் செலவிடப்பட்டு வேறு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

தற்போதுள்ள உள்ளடக்கத்தை கண்டி மாவட்டத்தில் 63% தொடக்கம் 75% வரையிலும், மாத்தளை மாவட்டத்தில் 30% தொடக்கம் 85% வரையிலும், நுவரெலியாவில் 10% தொடக்கம் 14% வரையிலும் மேம்படுத்தும் பொருட்டு RSC மத்தியின் அபிவிருத்திப் பிரிவின் மூலம் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலுள்ளதை இலக்காகக் கொண்டு நானுஓயா மற்றும் தெல்தோட்ட நீர் வழங்கல் கருத்திட்டங்கள் கையளிக்கப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளன. ஆறு கருத்திட்ட முன்மொழிவுகள் சபை அங்கீகாரத்துடன் NPD அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டதோடு ஏனைய மூன்று கருத்திட்ட முன்மொழிவுகள் PAC அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தயார் நிலையில் உள்ளன. நீரியல் பிரிவின் மூலம் 36 நீரியல் சார்ந்த பரிசோதனைகள், 18 துளைக் கிணறுகளுக்கான துளையிடல்கள், 9 தடவைகள் துளைக் கிணறுகளை நீர் பாய்ச்சி துப்புரவு செய்தல், 7 தடவைகள் குழாய்க் கிணறுகளின் திருத்தம்/ புனரமைப்புப் பணிகள், 21 புதிய கைப்பம்பிகளைப் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டதோடு, ரூபா 13.77 மில்லியன் திரட்டப்பட்டது. P&D பிரிவு நீர் வழங்கல் திட்டங்களின் விரிவாக்கம் மற்றும் புனரமைப்பின் கீழ் கண்டி - கிரிமெட்டியா வீதியில் 1,100 இணைப்புகளின் மாற்றங்களோடு 21 கி.மீ. நீளத்துக்கான குழாய் இடல் வேலைகளை மேற்கொண்டது.

ஆண்டினுள், இலக்கில் 72% ஐ அடைகின்ற வகையில் 7,962 புதிய இணைப்புகள் வழங்கப்பட்ட அதேவேளை இலக்கின் 100% ஐ அடைகின்ற வகையில் 60 மில்லியன் கியு.மீ. நீர் விற்பனை நடைபெற்றுள்ளது. மத்திய – கிழக்கில் ரூபா 32.93 மில்லியன், மத்திய தெற்கில் ரூபா 47.05 மில்லியன், மத்திய வடக்கில் ரூபா 36.29 மில்லியன் பெறுமதியான ஆதனங்கள் தொடர்பில் ஆதன மூலதனமிடல் நடைபெற்றுள்ளது. கண்டி பெரும்பாக கட்டம் 11 கருத்திட்ட மூலதனமிடல் நிறைவடைந்துள்ளது. தம்புள்ள பெரும்பாக மூலதனமிடலில் 90%, RSC மத்திய பிராந்தியத்தில் ரூபா 3.5 பில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழான – LBF கருத்திட்டங்களின் மூலதனமிடலில் 50% நிறைவடைந்துள்ளது.

இருபத்து நான்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதோடு 5S அமுலாக்கல் நடைபெற்று வருகின்றது. பல சமூக, சமய மற்றும் நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது: அத்துடன் ஜனசது சேவா தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பி.ஜீ.ஈ. தனசேன, வை.எச்.எல்.பீரிஸ் மற்றும் டீ.எஸ்.கே. குமார ஆகியோர் பல விருதுகளைப் பெற்றனர்.

சப்ரகமுவ

RSC (சப்பிரகமுவ) 100,000 க்கு மேற்பட்ட நீர் இணைப்புகளின் ஊடாக சப்பிரகமுவ மாகாணத்தின் சமுதாயத்தினருக்கு குழாய் நீரை வழங்குவதோடு, மேலும், சேவை உள்ளடக்கத்தை மேம்படுத்தவும் செலவுக் குறைப்பை முன்னிட்டும் அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

2019 ஆம் ஆண்டுக்காக பிராந்தியத்தினுள் வருவாயற்ற நீர் (NRW) குறைப்பு செயற்பாடுகள் RSC யில் மேற்கொள்ளப்பட்டதோடு NRW புதிய செயற்பாடுகளுக்காக ரூபா 12.10 மில்லியன் ஒதுக்கப்பட்ட அதேவேளை நடைமுறையிலுள்ள சேறு செயற்பாடுகளுக்காக ரூபா 31.5 மில்லியன் செலவிடப்பட்டது.

மீள் குடியமர்த்துகை மற்றும் பயன்பாட்டு இடம்பெயர்வுகள் நிதியத்தின் கீழ் கேகாலை பிராந்தியத்தில் நிர்மாணிப்புச் செயற்பாடுகளை RSC நடைமுறைப்படுத்தியது. RSC சப்பிரகமவ பிராந்தியத்தில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் (WaSSIP) கருத்திட்டத்தின் கீழ் கருத்திட்ட பணியாளர்களினால் 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிவாறு 6,312 மக்களுக்கும் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்திற்கும் சேவையாற்றுகின்ற வகையில் பல நிர்மாணிப்புப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

WaSSIP கருத்திட்டம் மற்றும் CKD நிதியத்தின் கீழ் எம்பிலிபிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து பதலங்கல பிரதேசத்திற்கு நாளொன்றுக்கு 5,000 க.மீ. குடிநீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூபா 92.97 மில்லியனான CKD நிதியத்தின் கீழ் 4.5 கி.மீ. நீளத்தைக் கொண்டதான பிரதான பம்பிக் குழாயை வழங்குதல் மற்றும் இடுதல் தே.நீ.வ.வ.ச. யினால் நிறைவு செய்யப்பட்டது. ரூபா 35 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் CKDu நிதியத்தின் கீழ் RSC யின் மூலம் பதலங்கல பிரதான பம்பிக் குழாய்களுக்கு நீர் அனுப்புவதற்காக எம்பிலிபிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி வளவில் சுத்திகரிக்கப்பட்ட நீர் பம்பி நிலையத்தை நிர்மாணித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

புனரமைப்பு நிதியத்தின் கீழ் உடவலவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. கருத்திட்டத்துக்கான மதிப்பீட்டுச் செலவு ரூபா 9.0 மில்லியனாகும் என்பதோடு தற்போது கருத்திட்டம் கேள்விப்பத்திரம் கோரும் கட்டத்தில் உள்ளது.

மீள்செறிவூட்டல் நிதியத்தின் கீழ் பெல்மடுல்லவில் படலந்த சந்தி வரை கஹவத்த நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து 280 மி.மீ. விட்டத்தைக் கொண்ட பிரதான PVC அனுப்பல் குழாயை இடும் நோக்கத்துடனான கஹவத்த – பெல்மடுல்ல பிரதான அனுப்பல் குழாய் கருத்திட்டம் ஆண்டினுள் நடைபெற்று வருகின்றது. குழாயின் நீளம் 7 கி.மீ. ஆகுமென்பதோடு கருத்திட்டச் செலவு அண்ணளவாக ரூபா 160 மில்லியனாகும்.

RSC சப்பிரகமுவ மூலம் மூலதன நிதி ஒதுக்கீட்டிலிருந்தான RWS நிதியத்தின் கீழ் ரூபா 19.0 மில்லியன் செலவில் எஹலியகொட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி வளவில் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிப் பொதியை பொருத்துதல் 2019 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இரத்தினபுரி மற்றும் கேகாலை பிராந்தியங்களில் நீர் பாதுகாப்புத் திட்டம் 2019 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதோடு, அதற்கிணங்க பல்தரப்பினர் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு பிராந்தியங்களிலும் நடத்தப்பட்டன. நீர் பாதுகாப்புத் திட்ட மொடியுல்களின் பூர்த்திநிலை இரத்தினபுரி பிராந்தியத்தில் 50% ஆகின்ற அதேவேளை கேகாலை பிராந்தியத்தில் இது ஏறத்தாழ 40% ஆகும். இரத்தினபுரி பிராந்தியத்தில் 06 பாடசாலை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும், கேகாலை பிராந்தியத்தில் 12 பாடசாலை விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும், இரண்டு பிராந்தியங்களிலும் தே.நீ.வ.வ.ச. மற்றும் CBOs களின் பொறித்தொகுதி இயக்குபவர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் ஆண்டினுள் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, ஏறத்தாழ ரூபா 3 மில்லியன் செலவிடப்பட்டு உடவளவ உள்வாங்கு நிலைத்தில் சங்லித் தொடர் வேலி நிர்மாணிக்கப்பட்டதோடு, பலாங்கொட நீர் வழங்கல் திட்டத்தில் 04 அழுத்தக் குறைப்புத் தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டு காலத்தினுள் பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக கேகாலை மாவட்டத்தில் ஏறத்தாழ 7,500 கன்றுகள் விநியோகிக்கப்பட்டதோடு, இரத்தினபுரி மாவட்டத்தில் 10,000 க்கு மேற்பட்ட கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. CBOs களின் நீரேந்து பிரதேசங்களில் தே.நீ.வ.வ.ச. மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் சேர்ந்து மேலும் 1,000 மரக் கன்றுகளை நட்டது.

ஊவா

வருடாந்த பசுமைக் கட்டட விருது – 2019 இல் GREENSL தரப்படுத்தல் முறையின் கீழ் GOLD தரப்படுத்தல் சான்றிதழ் பதுளையிலுள்ள ஊவா பிராந்திய உதவி நிலையத்துக்கு (RSC) வழங்கப்பட்டது. இதைத் தவிர பண்டாரவளை பிராந்திய ஆய்வுகூடம் 2019 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்திலிருந்து 5S சான்றிதழைப் பெற்றது.

NRW பிரிவு பண்டாரவளை மற்றும் மொனறாகல ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் NRW கண்காணிப்பு மற்றும் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை பொறுப்பேற்கும் பொருட்டு உருவாக்கப்பட்டது. இப்பிரிவின் மூலம் இரவுகால கசிவு ஆய்வு மற்றும் கண்காணிப்பு, இணைப்புத் துண்டிப்புகள் மற்றும் சட்டவிரோத இணைப்புகள் தொடர்பில் செயலாற்றப்பட்டது. தற்போதுள்ள சேவை இணைப்புகளை திருத்தியமைத்தல், குறைந்த அழுத்த வீதத்தைக் கொண்ட குழாய்கள் மற்றும் பழைய குழாய்களை பதிலீடு செய்தல், புத்தள, வெல்லவாய, திவுதொட்டவெல, வெலிமட நீர் வழங்கல் திட்டங்களுக்கு SCADA முறைமையை அறிமுகப்படுத்தல் ஆகியன 2019 ஆம் ஆண்டினுள் NRW நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் ஆண்டினுள் 28% இல் இருந்து 27% வரை வருவாயற்ற நீரைக் குறைக்க இயலுமாயிருந்தது.

வினைத்திறனற்ற பம்பிகளை மாற்றீடு செய்தல் மற்றும் உச்சக்கட்ட நேரங்களில் பம்பிகள் இயக்கப்படுவதைத் தவிர்த்தல் ஆகியன ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சில சக்தி சேமிப்புச் செயற்பாடுகளாகும். மின்சாரச் செலவைக் குறைப்பதற்கு மேலதிகமாக அனைத்து பம்பி நிலையங்களிலும் தடுப்புப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பம்பித் திருத்தங்கள் மூலம் பராமரிப்புச் செலவுகள் குறைக்கப்பட்டன. மேலும், பண்டாரவளை மற்றும் மொனறாகல பிராந்திய முகாமையாளர் கட்டடங்களில் சூரியசக்தி பலகைகளும் பொருத்தப்பட்டன.

RSC க்களிலுள்ள கையிருப்பு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு, RSC க்களில் கிடைக்கப்பெற்ற குழாய்கள் மற்றும் பொருத்துகளைப் பயன்படுத்தி ஏறத்தாழ 21 கி.மீ. நீளத்துக்கு குழாய்கள் இடப்பட்டன. பிராந்தியத்தில் கிடைக்கத்தக்கதாயிருந்த குழாய்கள் மற்றும் பொருத்துகளைப் பயன்படுத்தி தெமோதர நீர் வழங்கல் திட்டத்தில் எல்ல மற்றும் ஹல்பே பிரதேசங்களில் சமுதாய குழாய் இடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டினுள், 39 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பயிற்சி நிதி ஒதுக்கீடு அதேபோன்று வேறு சில அணுசரணைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதோடு, இதில் அலுவலர்களுக்கான 23, ஏனைய வகுதியினருக்கான 11, அனைத்து பணியாளர்களுக்கான 3 மற்றும் CBO பயிற்சியளிப்புகள் 2 நடாத்தப்பட்டன.

நீர் மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீரேந்து பிரதேசப் பாதுகாப்புச் செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்டு மாகாண நீர் குழு (ஊவா) மீள்ஆரம்பிக்கப்பட்டதோடு முதலாவது தரப்பினர்கள் கூட்டமும் நடத்தப்பட்டது. போமுருஎல்ல நீரேந்து பிரதேசம், பதுளை நீர் வழங்கல் திட்டம், தியதலாவ நீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றுக்கு நீரேந்து பிரதேச பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அநேகமாக அனைத்துத் திட்டங்களுக்குமான நீர் பாதுகாப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, மாகாணத்தின் ஒன்பது திட்டங்களிலும் அனைத்து மொடியுல்களும் நிறைவு செய்யப்பட்டன. 2019 செம்தெம்பரில் வெல்லவாய நீர் வழங்கல் திட்டத்தில் வெளிவாரிக் கணக்காய்வு நிறைவு செய்யப்பட்டது.

பதுளையில் மஹயங்கன மற்றும் தெமோதர நீர் வழங்கல் திட்டங்களில் 18 கி.மீ. நீளத்துக்கு மற்றும் மொனறாகலயில் புத்தள நீர் வழங்கல் திட்டத்தில் 25 கி.மீ. நீளத்திற்கு குழாய் நீடிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

மீள்சுழற்சி நிதி ஒதுக்கீட்டின் கீழ் A5 வீதியில் 43 கி.மீ. நீளத்துக்கான குழாய் இடலில் ஏறத்தாழ 25 கி.மீ. பூர்த்தி செய்யப்பட்டது. ஊவா மாகாண சபை நிதியத்தின் கீழ் மொனறாகலை மாவட்டத்தில் தொடில்லகெட்டிய கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்புகள் நிறைவு செய்யப்பட்டதோடு, கங்கொடகம கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு இறுதிக் கட்டத்தில் காணப்பட்டது. பதுளை மாவட்டத்தில் CKD நிதி ஒதுக்கீட்டின் கீழ் அகலஓய நீடிப்புக் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டதோடு, பலகொல்ல நீர் வழங்கல் திட்டம், ரிதீமாலியத்த பிரதேசத்துக்கான பிரதான பம்பிக் குழாயின் நீடிப்பு நடைபெற்று வருகின்றது.

புனரமைப்பு வேலைகளின் கீழ் நீர் வழங்கல் திட்டங்கள், OIC அலுவலகம் மற்றும் விடுதிகளின் புனரமைப்பு, அனுப்பல் மற்றும் விநியோக முறைமை, M&E மேம்பாடுகள் உட்பட ரூபா 450 மில்லியன் தொகையில் பண்டாரவளையில் 71 ஒப்பந்தங்களினதும் மொனறாகலையில் 41 ஒப்பந்தங்களினதும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டினுள் தல்தென, மீகஹகிவுல, யஹலஅராவ – உலுகல நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் பண்டாரவளை தியதலாவ அப்புத்தளை, ஹம்பெகமுவ திருத்தப்பட்ட முன்மொழிவுகளுக்கு PAC அங்கீகாரம் பெறப்பட்டது.

RSC – ஊவாவின் RWS பிரிவின் கீழ் முன்னைய ஆண்டுகளின் மீதியிருந்த வேலைகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டன. பொரகஸ் நீர் வழங்கல் கருத்திட்டம் - ரூபா 46.39 மில்லியன்

மற்றும் ராஹுபொல நீர் வழங்கல் கருத்திட்டம் - ரூபா 17.8 மில்லியன் கருத்திட்டங்களின் திறப்பு விழா 2019 இல் நடைபெற்றதோடு பல்கஹதென்ன, பலகொல்ல கருத்திட்டங்கள் அவற்றின் இறுதிக் கட்டத்தில் காணப்பட்டன.

வடக்கு

தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புச் (O&M) செயற்பாடுகளின் பொருட்டு யாழ்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்குகின்றவாறு RSC (வடக்கு) இன் கீழ் பிராந்திய முகாமையாளர் (யாழ்பாணம்) மற்றும் பிராந்திய முகாமையாளர் (வவுனியா) என இரண்டு பிராந்தியங்களாக காணப்படுகின்றன. மாகாணத்தின் மொத்த சனத்தொகை 1.24 மில்லியனாகும்.

2019 ஆம் ஆண்டின் இறுதியளவில், சனத்தொகையில் 7.38% ஐ உள்ளடக்குகின்றவாறு தே.நீ.வ.வ.சபையினால் பராமரிக்கப்படுகின்ற குழாய்வழி நீர் வழங்கல் இணைப்புக்களின் எண்ணிக்கை 28,064 ஆகின்ற அதேவேளை, கிராமிய நீர் வழங்கல் உள்ளடக்கம் ஏறத்தாழ 0.54% ஆக காணப்படுகின்றது. RSC – வடக்கில் சேவையாற்றுகின்ற மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 220 ஆகும்.

ஆண்டினுள், வருவாயற்ற நீரைக் குறைக்கும் நடவடிக்கையாக 56 கி.மீ. குழாய் நீடிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, 13.5 கி.மீ. நீளத்திற்கு AC குழாய்கள், 16 வால்வுகள், 1,961 பழுதடைந்த மானிகளை பதிலீடு செய்தல் உள்ளடங்கிய விநியோக மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 27 புதிய வால்வுகள் பொருத்தப்பட்டன. தேவையான வால்வு அறைகள் நிர்மாணிக்கப்பட்டதோடு சில நடைபெற்று வருகின்றன. 3,907 புதிய இணைப்புகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிராந்திய ஆய்வுகூடங்கள் ISO 17025 தொடர்பிலான முகாமைத்துவ தேவைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை நிறைவுசெய்யப்பெற்றுள்ளதோடு, pH, கலங்கல்நிலை, மின் கடத்தல், மொத்த வன்மைத்தன்மை மற்றும் குளோரைட் ஆகிய 5 அளவுகோல்கள் தொடர்பில் ISO 17025 தராதரம் வழங்கப்பட்டதோடு, நுண்ணுயிரியல் பரிசோதனைக்கான தராதரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாண பிராந்தியத்தில் பல்வேறு தரப்பினர்களுக்கும் ஆய்வுகூடச் சேவைகள் வழங்கப்பட்ட அதேவேளை, ரூபா 4.0 மில்லியன் அதிலிருந்து ஈட்டப்பட்டது. வட மாகாணத்தின் பாடசாலைகளில் நீர் தரத்தைப் பரிசோதிப்பதற்கான சனாதிபதி செயலகத்தின் விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதோடு ரூபா 2 மில்லியன் ஈட்டப்பட்டது. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு ஆய்வுகூட சேவைகளை வழங்குவதற்கு கிளிநொச்சி சுத்திகரிப்புப் பொறித்தொகுதி அமைந்துள்ள தலத்தில் சிறிய ஆய்வுகூடமொன்று தாபிக்கப்பட்டது. சேரிப்பு வினைத்திறனை மேம்படுத்துகின்ற வகையில் யாழ்ப்பாணம் RM அலுவலகத்தில் நீர் கட்டணப் பட்டியல் அச்சிடுதல் ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் களஞ்சியம் மற்றும் பம்பி நிலையத்தை நிர்மாணித்தல், பிராந்திய ஆய்வுகூடத்திற்கு RO பொறித்தொகுதியை பொருத்துதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பிராந்தியத்தில் ஆறு நீர் வழங்கல் திட்டங்கள், பேராறு நீர்த் தேக்கம், வவுனியாவின் நிலநீர் வளங்கள் உள்ளிட்ட விநியோக முறைமை ஆகியவற்றுக்கான நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. ஊர்காவற்றுறை நீர் வழங்கல் திட்டங்களுக்கான நீர் பாதுாப்புத் திட்டங்களுக்கான முறைசார் வெளிவாரிக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, பெறப்பட்ட மொத்த புள்ளிகள் 90 (“சராசரி”) ஆகும். ரூபா 125.85 மில்லியன் செலவில் பம்பிகள் மற்றும் சூரிய சக்திப் பலகைகளைப் பொருத்துதல் மற்றும் பம்பிகளைப் பதிலீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டன.

விநியோக நீடிப்பு மற்றும் புதிய இணைப்புகள் வழங்கப்படுவதன் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களின் ஒன்பது கிராமிய நீர் வழங்கல் திட்டங்களில் புனரமைப்பு மற்றும் M&E வேலைகள் (ரூபா 5.92 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டன.

கீழ் மல்வத்துஓயா நீர்த் தேக்கத்திலிருந்து உத்தேச வவுனியா பெரும்பாக நீர் வழங்கல் திட்டத்திற்கு (GVWSP) நாளொன்றுக்கு 32,000 க.மீ. நீரைப் பகிர்ந்து கொள்வதற்காக நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எழுத்து மூலமான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. மன்னார் பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான (GMWSP) சாத்தியவளக் கற்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. PAC மற்றும் சபை அங்கீகாரம் பெறப்பட்டது. GVWSP, GMWSP மற்றும் மாங்குளம் WSP க்களுக்கான நிதியங்களைப் பெறுவதற்காக NPD க்கு கருத்திட்ட எண்ணக்கருப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குழாய் நீர் வழங்கல் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்காக விநியோக முறைமையில், ரூபா 132 மில்லியன் பெறுமதியான குழாய் மற்றும் சிவில் வேலைகளுடன் தொடர்புடையவை உள்ளடங்கிய நிர்மாணிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஒருசில RWS திட்டங்கள் மற்றும் RO பொறித் தொகுதிகள் நிறைவு செய்யப்பட்டு சமுதாயத்திற்கு கையளிக்கப்பட்டன.

ரூபா 220 மில்லியன் பெறுமதியான வடிவமைப்பு வேலைகள் நிறைவு செய்யப்பட்டதோடு, இதில் புனித மடு மாதா தேவாலயத்திற்கான நீர் வழங்கலும் உள்ளடங்குகின்றது.

ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டு 65 நீரியல் பரிசோதனைகள், 32 குழாய்க் கிணறு நிர்மாணிப்புகள் மற்றும் 26 கிணறு அபிவிருத்திச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டன.

கிழக்கு

பிராந்திய உதவி நிலைய (கிழக்கு) தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு (O&M) செயற்பாடுகள் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அக்கரைப்பற்று ஆகிய நான்கு பிராந்திய முகாமையாளர்களால் முகாமை செய்யப்படுகின்றது.

சராசரி கடன் காலம் 0.35 க்கு கீழ் பேணிவரும் பொருட்டு தொடர்ந்து இணைப்புத் துண்டிப்பை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட வர்த்தக அலுவலர் ஒருவரின் கீழ் மூன்று தனித்தனியான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அனைத்து நான்கு பிராந்தியங்களிலும் ஆண்டினுள் ஒருசில வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பழுதடைந்த மானிகளை மாற்றுதல் (3,445), கசிவுகளைத் திருத்துதல் (3,027), சட்டவிரோத இணைப்புகளை கண்டுபிடித்தல் (18) ஆகியன பிராந்தியத்தில் பிரதான செயற்பாடுகளாக மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், பிராந்திய NRW சதவீதம், திருகோணமலை – 25%, மட்டக்களப்பு – 14%, அக்கறைப்பற்று மற்றும் கல்முனை – 12%, அம்பாறை 15% என்றவாறு பேணப்பட்டது.

புனரமைப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 65 மில்லியன் புனரமைப்பு வேலைகளுக்காகவும், ரூபா 60 மில்லியன் NRW செயற்பாடுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இதில் 2019 திசெம்பர் மாதமளவில் மொத்தம் 52.91 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதோடு, ரூபா 45.44 மில்லியன் பெறுமதியான கட்டணப் பட்டியல்கள் கைவசமுள்ளன. மீள்சுழற்சி வேலைகளின் கீழ் திருகோமலை பிராந்தியத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூபா 23.10 மில்லியன் கிடைத்துள்ளதோடு, ரூபா 9.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு பிராந்தியத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூபா 36.00 மில்லியன் கிடைத்துள்ளதோடு, ரூபா 15.00 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. கல்முனை பிராந்தியத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூபா 32.80 மில்லியன் கிடைத்துள்ளதோடு, ரூபா 4.60 மில்லியன்

செலவிடப்பட்டுள்ளது.அக்கறைப்பற்று பிராந்தியத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூபா 37.00 மில்லியன் கிடைத்துள்ளதோடு, ரூபா 15.00 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அம்பாறை பிராந்தியத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்து ரூபா 196.50 மில்லியன் கிடைத்துள்ளதோடு, ரூபா 43.80 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் RSC (கிழக்கு) இல் சேவை இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை 286,003 ஐ அடைந்துள்ளது.

ஆண்டினுள் ரூபா 1,912.68 மில்லியன் கட்டணப் பட்டியல்களுக்கு (வற் உடன்) எதிராக ரூபா 1,938.54 (வற் உடன்) திரட்டப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டினுள் மொத்தம் 69 கேள்விப்பத்திரங்கள் கையாளப்பட்டுள்ளதோடு, ரூபா 119.03 மில்லியன் பெறுமதியான 53 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் அனைத்து பிராந்தியங்களிலும் RSC (கிழக்கு) பல சவால்களை எதிர்கொண்டது. வரட்சியின் போது மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சைக் குளத்தின் அடி மட்டத்திலிருந்து நீரை உள்ளீர்த்து சுத்திகரிக்கின்ற சிரமத்தை எதிர்கொண்டது. மாவடிபள்ளி மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் இரண்டு ஆற்றுக் கடவைகள் உடைந்து வீழ்ந்ததோடு கல்முனையில் கிரீன் பீல்ட் கூட்டாட்சி வீடமைப்புத் திட்டத்தில் அதிக நிலுவைத் தொகைகள் அறவிடப்பட வேண்யுள்ளன. அக்கறைப்பற்று பிராந்தியத்தில் பொத்துவில் பிரதேசத்தில் நில நீர் வளங்களில் நீர் பற்றாக்குறை காணப்பட்டதோடு, வரட்சிக் காலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் நீர் பற்றாக்குறை காணப்பட்டது. திருகோணமலை பிராந்தியத்தில் வரட்சிப் பருவத்தில் மகாவலி ஆற்றில் நீர் பற்றாக்குறை எதிர்நோக்கப்பட்ட அதேவேளை கந்தளாய் நீர்ப்பாசனக் குளத்திலிருந்து நீர் உள்ளீர்க்கப்படுதல் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் வரையறுக்கப்பட்டமை, திருகோணமலை நகர நீர் வழங்கலில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியது. அத்துடன், ஈச்சிலம்பத்து நீர் வழங்கல் திட்டத்தில் வரட்சிப் பருவத்தினுள் வெருகல் உள்வாங்கு நிலையத்தில் உவர் நீர் ஊடுருவல் நடைபெற்றது.

மேற்கு உற்பத்தி

RSC மேற்கு உற்பத்தி (RSC-WP) தற்போது அம்பதலே, லுகம, கலட்டுவாவ, பியகம, பம்புகுளிய, கந்தான, கெத்ஹேன மற்றும் நவகமுவ ஆகிய இடங்களில் 8 குடிநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளை தொழிற்பத்தி பராமரித்து வருவதோடு, இதில் நாளொன்றுக்கு ஏறத்தாழ 550,000 க.மீ. உற்பத்தி செய்கின்ற மிகப் பாரிய வசதியை அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி கொண்டுள்ளது. RSC – WP யின் மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 50% ஐ அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி தனியாக உற்பத்தி செய்கின்றது. RSC – WP யின் மொத்த உற்பத்தி நாளொன்றுக்கு 1.1 மில்லியன் கன மீற்றர் குடிநீராகும் என்பதோடு, மீண்டும் இது நாளொன்றுக்கான தே.நீ.வ.வ.ச. யின் மொத்த உற்பத்தியில் 50% க்கு அதிகமாகும். KRB 11 கருத்திட்டத்தின் ஊடாக நாளொன்றுக்கான உற்பத்தி 180,000 க.மீ. களால் மேலும் அதிகரிக்கப்படும் என்பதோடு, இது 2020 நடுப்பகுதியில் ஆரம்பித்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல் மாகாணத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு அண்மிய எதிர்காலத்தில் அம்பத்தலே கொள்ளளவு மேம்பாட்டை நாளொன்றுக்கு 50,000 க.மீ. மூலமும் வெலிவிட்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவை நாளொன்றுக்கு 180,000 க.மீ. ஆகவும் உற்பத்திக் கொள்ளளவை அதிகரிக்கச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டத்தின் ஒரு பகுதியின் குடிநீர் தேவையை RSC – WP நிறைவு செய்கின்றது. மேற்கு – மத்திய, மேற்கு – வடக்கு மற்றும் மேற்கு – தெற்கு ஆகிய 3 RSCs க்களின் ஊடாக நீர் விநியோகிக்கப்படுகின்றது. பாதுகாப்பானதும் இடையூறுகள் அற்றதுமான நீர் வழங்கலை உறுதி செய்யும் பொருட்டு RSC – WP யின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு நான்கு முகாமையளர்களுக்கு (முகாமையாளர் – தொழிற்பாடு, முகாமையாளர் – கந்தான, முகாமையாளர் – பியகம, முகாமையாளர் – பராமரிப்பு) மத்தியில் பிரிரிக்கப்பட்டுள்ளது.

அம்பத்தலே, பியகம மற்றும் பம்புகுளிய ஆகிய மூன்று நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளும் ISO 9001 – 2015 தர முகாமைத்துவ முறைமைச் சான்றிதழைப் பெற்றுள்ளது. அம்பத்தலே ஆய்வுகூடமானது, pH, கலங்கல் நிலை, மின்கடத்தும் திறன், குளோரைட், வன்தன்மை, காரத்தன்மை, ஆகிய நீர் தர அளவுகோல்கள் மற்றும் படிகத்திலுள்ள காடியம், ஈயம், குரோமியம் மற்றும் மங்கனீசு ஆகிய கன உலோகங்கள் சார்ந்த படிகம் மற்றும் சுண்ணாம்புப் பரிசோதனை தொடர்பில் ISO 17025 – 2005 தராதரத்தைப் பெற்றுள்ளது. நாள் முழுவதிலும் பாதுகாப்பான நீர் வழங்கலைத் தொடர்ச்சியாகப் பேணிவரும் நோக்கத்துடன் 7 சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகளிலும் நீர் பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்டதோடு, நீர் பாதுகாப்புத் திட்டங்கள் 3 திட்டங்கள் 2019 இல் நடத்தப்பட்ட வெளிவாரி முறைசார்ந்த கணக்காய்வின்போது "சிறந்த" தரப்படுத்தலைப் பெற்றது. நடுத்தர அளவிலான கைத்தொழில்களில் 2018 ஆம் ஆண்டில் உற்பத்திறன் தொடர்பில் 2வது இடத்தை பியகம நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி பெற்றது. அனைத்து சுத்திகரிப்புப் பொறித் தொகுதித் தலங்களிலும் "உற்பத்தித்திறன்" மற்றும் "5S" மேம்பாட்டுச் செயற்பாடுகளாக பயிற்சியளிப்புகள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

அம்பத்தலே முறைமையின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுசக்திச் சேமிப்புக் கருத்திட்டம் (AWSSIESP) அதன் பணிகளைத் தொடங்கியுள்ளது. SCADA ஊடாக தொழிற்படுத்தும் பொருட்டு வினைத்திறனை மேம்படுத்தல், சக்தி சேமிப்பு மற்றும் முறைமையின் மேம்பாட்டிற்காக முறைமையில் பல பழைய பம்பிகள் மற்றும் வால்வுகளை இது பதிலீடு செய்யும். இக்கருத்திட்டம் நாளொன்றுக்கு 8,000 க.மீ. கொள்ளளவு கொண்ட சாக்கடை சுத்திகரிப்புப் பொறித் தொகுயையும் ஆரம்பித்து வைக்கும் என்பதோடு, இது சுற்றாடல் பாதுகாப்பை முன்னிட்டான அர்ப்பணிப்பை மேம்படுத்தும்.


மேற்கு உற்பத்தியில் நீர் தரக் கண்காணிப்பு ஒரு வழக்கமான செயற்பாடாகும். SLS 614:2013 தரக்கட்டளைக்கு இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு நுகர்வோர் விநியோக இடம் வரை குழாய் வழியிலான குடிநீர் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

காணப்படுகின்ற கையிருப்புகளில் பாவிக்கப்படாத மற்றும் அசைவற்ற பொருட்களை அடையாளம்காணும் பொருட்டு வருடாந்த கையிருப்பு சரிபார்த்தல் மற்றும் நிலையான சொத்துக்களின் சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டது. கையிருப்பு சரிபார்த்தல்களின் பெறுபேறுகள், கையிருப்பு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டும் ஆதன முகாமைத்துவச் செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

நடைமுறையிலுள்ள வெளிநாட்டு / உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற பாரிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு நிதியளிப்பில் / உள்நாட்டு வங்கி நிதியளிப்பில் நிர்மாணிக்கப்பட்டு. விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்



வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிப்பு நிறுவனம்
1 அனுராதபுரம் வடக்கு நீ.வ. கட்டம் 1	ஐ.சு.கூ.மு
2. அனுராதபுரம் வடக்கு நீ.வ. கட்டம் 11	ஐ.சு.கூ.மு
3 உலர் வலய நீர் மற்றும் துப்புரவேற்பாடு	ஆ.அ.வ.
4. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு	ஆ.அ.வ.
5. கொழும்பு பெரும்பாக நீர், கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீடு	ஆ.அ.வ.
6. அம்பாறை மாவட்டத்தில் சேவை வழங்கப்படாத பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111	ஆ.அ.வ.
7. கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட நீர் வழங்கல்	CDBC - சீனா
8. அம்பதலே நீர் வழங்கல் முறைமையின் மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம்	AFD
9. ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	ICO - ஸ்பெயின்
10. களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11	CACIB - பிரான்ஸ்
11. மாத்தறை கட்டம் IV	NDB - இலங்கை
12. அலுத்கம, மத்துகம, அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	இந்தியா எக்சிம் வங்கி & BOC
13. பொல்கஹவெல, பொத்துஹெர, அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	இந்தியா எக்சிம் வங்கி
14. மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்	CACIB - பிரான்ஸ்
15. கண்டி வடக்கு பாததும்பர நீர் வழங்கல் கருத்திட்டம்	எக்சிம் வங்கி - சீனா
16. தேதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம்	EDCF - கொரியா
17. ஒருகொடவத்தை தொடக்கம் கடுவலை வரையிலான அனுப்பல் மற்றும் விநியோக பிரதான குழாய்களை பதிலீடு செய்தல்	Unicredit Bank ஆஸ்திரியா மற்றும் மக்கள் வங்கி
18. கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம்	EDFC – கொரியா
19. தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம்	சீன அபிவிருத்தி வங்கி
20. கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்	Unicredit Bank ஆஸ்திரியா
21. ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம்	ING வங்கி – நெதர்லாந்து

உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டங்கள்

அ. மெதிரிகிரிய நீ.வ.க.	BOC
ஆ. கலகெதர/மாவத்தகம நீ.வ.க.	DFCC
இ. லக்கல புதிய நகர நீ.வ.க.	HNB
ஈ. வெலிகமுவ நீ.வ.க. கொழும்பு நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம்	NDB
உ. அம்பாறை விநியோக வலையமைப்பு நீ.வ.க.	BOC/DFCC/NDB
ஊ. அவிசாவளை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீ.வ.க.	BOC
எ. கொழும்பு மாவட்ட கிழக்கு நகர நீ.வ.க. – பொதி 1,2,3	BOC
ஏ. காலி கொத்தணி நீ.வ.க.	People's/BOC
ஐ. எட்டம்பிட்டிய நீ.வ.க.	People's bank
ஒ. கிரிதர நீ.வ.க.	People's bank
ஓ. இரத்தினபுரி பெரும்பாக நீ.வ.க.	BOC
ஔ. 3.5 பில்லியன் கருத்திட்டம் (22 கருத்திட்டங்கள்)	BOC

வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

1. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் 1)


அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11, 2013 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதோடு, JICA (யப்பான் யென் 5,166 மில்லியன்) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் (ரூபா 2,789 மில்லியன்) மூலம் நிதியளிக்கப்பட்டது. மொத்த கருத்திட்ட செலவு ரூபா 11,515 மில்லியன் ஆகும்.

2034 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தின் மதவச்சி மற்றும் ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 115,600 சனத்தொகையினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

நாளொன்றுக்கு 39,600 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 9.900 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, மொத்தம் 7,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட 4 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் 3 நில நீர்த் தேக்கங்கள், 89 கி.மீ. நீளமான அனுப்பல் பிரதான குழாய்கள், 520 கி.மீ. நீளமான விநியோக முறைமை மற்றும் தொழிற்படுத்தல் கட்டடம் (OIC அலுவலகம், பொறுப்பாளர் விடுதி, பிரதேச பொறியியலாளர் விடுதிகள்) ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

2019 இறுதியில் கருத்திட்டத்தின் முழுமொத்த பௌதீக முன்னேற்றம் 54% ஆகுமென்பதோடு கருத்திட்டத்தை 2020 திசெம்பரில் பூர்த்தி செய்து இயங்கவைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

.



எத்தாகட உயர்த்தப்பட்ட நீர் கோபுரம்

2. அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் 11)

119 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய அனுராதபுரம் மாவட்டத்தின் ஹொரவப்பொத்தானை, கஹட்டகஸ்திகிலிய, கெப்பித்திகொல்லாவ மற்றும் ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியில் ஏறத்தாழ 193,319 (2040 ஆம் ஆண்டில்) சனத்தொகையினருக்கு பாதுகாப்பான குழாய்வழி குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல் கருத்திட்டத்தின் பிரதானமான விடயப்பரப்பாகும்.

அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11 க்காக யப்பான் யென் 23,498 மில்லியன் தொகைக்கான கடன் உடன்படிக்கையில் யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (JICA) மற்றும் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் ரூபா 4,732 மில்லியனை இக்கருத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

நாளொன்றுக்கு 34,800 க.மீ. கொள்ளளவைக் கொண்ட (யான்ஓயா நீர்த்தேக்கம்) உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 16,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, உள்வாங்கு நிலையம் மற்றும் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான மின்னியல் மற்றும் எந்திரவியல் கருவிகள் மற்றும் தன்னியக்கமாக்கல் முறைமை, 10 நில நீர் தேக்கங்கள், 9 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 147 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய் மற்றும் 1,050 கி.மீ. நீளமான விநியோக வலையமைப்பு ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

2018 மே மாதம் 01 ஆம் திகதி வடிவமைப்பு மற்றும் பெறுகைகளுக்கான ஆலோசனை ஒப்பந்தம் ஆரம்பமாகியதோடு, 2019 இறுதியில் அதன் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 66% மற்றும் 27.3% ஆகும்.

03. உலர் வலய நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டம் (ஆ.அ.வ. 5 வது கருத்திட்டம்)

வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களில் உலர் வலய நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டத்தை (DZUWSP) தே.நீ.வ.வ.ச. நடைமுறைப்படுத்துகின்றது. இக் கருத்திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய நகரங்களின் 452,500 நலன்பெறுனர்களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் வழங்கப்படவுள்ளன. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் அமெரிக்க டொலர் 163.33 மில்லியனாகும். ஒட்டுமொத்தமான பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 99.91% மற்றும் 96.83% ஆகும். இதுவரை 56 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியாவில், நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி (நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர்), 3 நீர்க் கோபுரங்கள், ஒரு நீர்த் தேக்கம், 32 கி.மீ. நீளமான அனுப்பல் மற்றும் 251 கி.மீ. நீளமான விநியோக குழாய்களை பிரதான அம்சங்கள் உள்ளடக்கியுள்ளன. மூன்று விநியோக வலயங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னாரில், அனைத்து ஆரம்ப விடயப்பரப்பின் வேலைகளும் நிறைவு செய்யப்பட்டு தே.நீ.வ.வ.ச. யின் O&M பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அனுப்பல் மற்றும் விநியோக முறைமை பேசாலை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் மற்றும் புத்தளத்தில், அனைத்து நிர்மாணிப்பு வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளதோடு, RSC (NW) திட்டத்தை தொழிற்படுத்தி வருகின்றது. 45 கி.மீ. கொண்ட சிலாபம் விநியோக முறைமை நீடிப்புக்கான மேலதிக விடயப்பரப்பின் வேலைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.



புத்தளம் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி


4. யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டம் (ADB 6 வது)

இக்கருத்திட்டம், நாளொன்றுக்கு ஏறத்தாழ 24,000 க.மீ. நன்நீரை உற்பத்தி செய்வதற்கான கடல் நீர் மீள் சுத்திகரிப்பு (SWRO) பொறித் தொகுதியின் அபிவிருத்தியின் ஊடாக யாழ்ப்பாண தீபகற்பத்தினுள் யாழ்ப்பாண நகரம், சுற்றயல் மற்றும் ஒருசில நகரங்களிலுள்ள ஏறத்தாழ 300,000 மக்களின் குடிநீர் வழங்கல் வசதியை மேம்படுத்துவதற்காகும். உத்தேச மீள்கட்டமைப்புடன் திருத்தப்பட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபா 23,256.00 மில்லியன் மேலதிக நிதியிடல் உள்ளடங்கியதாக ரூபா 35,881.49 மில்லியன் ஆகும்.

15 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் ஊர்காவற்றுறை, வேலணை மற்றும் மண்டத்தீவுக்கான விநியோக முறைமை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட பிரதான அனுப்பல் பம்பிக் குழாய் 1 மற்றும் 2 இன் வேலைகள் முறையே 95% மற்றும் 98% நிறைவடைந்துள்ளன. பொதி 2 இன் மீதி 5 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் விநியோக முறைமையின் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

SWRO பொதி மற்றும் யாழ்ப்பாண விநியோகப் பொதிக்கான நிதிசார் மதிப்பீடு நிறைவடைந்துள்ளதோடு, ஒப்பந்தத்தை வழங்குதல் நடைபெற்று வருகின்றது.

2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் மேலதிக நிதியிடல் உள்ளடங்கியதாக பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 43.36% மற்றும் 41.95% ஐ அடைந்திருந்தது.



பூர்த்திசெய்யப்பட்ட நீர் கோபுரம்

5. கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம் (GCWWMIIP) - கருத்திட்டம் 01 மற்றும் கருத்திட்டம் 02

GCWWMIP கருத்திட்டமானது பிரதானமாக கொழும்பின் கொழும்பு மாநகர சபை (CMC) பிரதேசத்தை உள்ளடக்குவதோடு, இது 78 பிரதி முகாமையாளர் பிரிவுகளாக (DMAs) பிரிக்கப்பட்டு, தாபித்தல் நான்கு பிரதானமான ஒப்பந்தப் பொதிகளின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. கருத்திட்டத்தின் பிரதானமான விடயப்பரப்பாக, 720 கி.மீ. நீளமான குழாய்களை பதிலீடு செய்தல், 17 முறைமை உள்ளீட்டு மானிகளை பொருத்துதல், நீர் மானிகளை மீளப்பொருத்துதல் மற்றும் பழுதடைந்த நீர் மானிகளை பதிலீடு செய்தல், GIS வலையமைப்பை அளவீடு செய்தல் மற்றும் நாளதுவரையாக்கல் அத்துடன் ஒத்துழைப்புச் செயற்பாடுகளுக்காக கட்டடங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களை நிர்மாணித்தல் ஆகியன காணப்படுகின்றன.

கருத்திட்டம் 01 மற்றும் கருத்திட்டம் 02 இன் முழுமொத்த பௌதீக முன்னேற்றம் முறையே 75% மற்றும் 46% ஆகின்ற அதேவேளை நிதிசார் முன்னேற்றம் முறையே 70% மற்றும் 42% ஆகும்.

ஏறத்தாழ 510 கி.மீ. நீளமான குமாய் இடல் நிறைவடைந்துள்ளது. 53 DMA க்களில் குழாய் இடுதல் வேலைகள் நடைபெற்று வருவதோடு, 16 DMA க்களில் நிர்மாணிப்புகள் அநேகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதில் 11 DMA க்களில் NRW குறைப்புச் செயற்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நிறைவு செய்யப்பட்ட அனேகமான DMA க்களில் வருவாயற்ற நீர் 18% க்கு கீழ் உள்ளது சுட்டிக்காட்டப்பட்டது.

எளீ ஹவுஸ் பிரதேச பொறியியலாளர் அலுவலகம் பூர்த்தி செய்யப்பட்டு O&M க்கு கையளிக்கப்பட்டுள்ளது. எளீ ஹவுஸில் ஊக்குவிப்புப் பம்பி நிலையம் பூர்த்தி செய்யப்பட்டு பொறுப்புரிமையளிக்கப்படவுள்ளது. மாளிகாகந்தவிலுள்ள NRW கட்டடம் மற்றும் தெலவலவிலுள்ள புதிய பயிற்சி நிலையத்தின் வேலைகள் நடைபெற்று வருகின்றன.



மாளிகாகந்தவிலுள்ள NRW கட்டடம்

6. அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசங்களுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111

இக் கருத்திட்டம் அம்பாறை மாவட்டத்தின் சேவை வழங்கப்படாத பிரதேசத்தில் வசிக்கும் ஏறத்தாழ 200,000 மக்களுக்கும் அதேபோன்று மொனறாகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் ஒருசில பகுதிகளுக்கும் சேவையாற்றுவதற்கானதாகும். கருத்திட்டத்தின் மொத்த செலவு ரூபா 20,825 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. உள்ளடக்கப் பிரதேசத்தை அதிகரிக்கச் செய்தல் மற்றும் உள்ளடக்கப் பிரதேசத்தினுள் 40,000 புதிய நீர் சேவை இணைப்புகளை வழங்குல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

கருத்திட்ட ஆக்கக்கூறு -1, வெளிநாட்டு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பகுதியவிலான நிதி அளிப்பின் கீழ் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, நில நீர் தேக்கங்கள், பம்பி நிலையங்கள் மற்றும் விநியோகக் குழாய்களை வழங்கல் வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களால் பூர்த்தி செய்யப்பட்டு O&M க்கு கையளிக்கப்பட்டுள்ளது.



நாமல் ஓயா நீர்க் கோபுரம்

கருத்திட்ட ஆக்கக்கூறு – 2 க்கான 6 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் மற்றும் ஆக்கக்கூறு - 3 க்கான மேற்படி அதே குழாய்கள் குழாயிடுவதற்காக இலங்கை அரசாங்க ஆக்கக்கூறுகளின் கீழ் உள்நாட்டு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆக்கக்கூறு – 2, 59.8% பௌதீக மற்றும் 76.48% நிதிசார் முன்னேற்றத்தை அடைந்துள்ளதோடு ஆக்கக்கூறு – 3 இன் கீழ் குழாயிடல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

7. கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்

கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டமானது, கம்பஹா மாவட்டத்தின் மினுவங்கொட, மீரிகம மற்றும் மஹர பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 449 கிராம அலுவலர் பிரிவுகளில் தற்போதுள்ள நீர் வழங்கலிலிருந்து நீரைப் பெறுகின்ற ஏறத்தாழ 100,000 மக்களுக்கான சேவையை மேம்படுத்துவதற்கும் ஏறத்தாழ 300,000 மக்களுக்கு புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்குமாகும்.

இக்கருத்திட்டத்தின் கீழ், நாளொன்றுக்கு 54,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 1,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட 5 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 90 கி.மீ. நீளத்திற்கு அனுப்பல் குழாய் மற்றும் 630 கி.மீ. நீளத்திற்கு விநியோக குழாய்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக, நீர் வழங்கலின் பிரதான நீர் வளமூலம் உள்ள பஸ்னாகொடவில், 3.5 மில்லியன் க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டுவதற்கான அணைக்கட்டு ஒன்றும் நிர்மாணிக்கப்படும்.

சுத்திகரிப்பப் பொறித் தொகுதியின் சிவில் வேலைகள் அனேமாக பூர்த்தியடைந்துள்ளதோடு, இயந்திரசாதன பொருத்துதல்கள் நடைபெற்று வருகின்றன. பஸ்யால, நைவல, மினுவன்கொட, பலும்மஹர மற்றும் அத்தனகல்லயில் 04 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள் உட்பட 500 கி.மீ. அனுப்பல் மற்றும் விநியோக முறைமைக்கான ஐந்து ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு, நிர்மாணிப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 50% ஆகுமென்பதோடு, நிதியியல் முன்னேற்றம் ரூபா 26,000 மில்லியனாகும்.



கரஸ்னாகொடவில் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

8. அம்பத்தலே நீர் வழங்கல் திட்ட மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம்

அம்பதலே நீர் வழங்கல் முறைமையின் மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்புக் கருத்திட்டத்தை கொழும்பு பிரதான திட்ட கருத்திட்டத்தின் (2012/2013) சிபாரிசுக்கமைய தே.நீ.வ.வ.ச. அமுல்படுத்தியது. அம்பதலே நீர் வழங்கல் முறைமையில் உற்பத்தியின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல், வலுசக்தி சேமிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அனுப்பல் வசதிகளின் வினைத்திறனை மேம்படுத்தல் ஆகியன இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். கருத்திட்டத்தின் இணை-நிதியிடலாளர்களான ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவராண்மை (AFD) யின் உதவியோடு, இலங்கை அரசாங்கம் அம்பத்தலே நீர் வழங்கல் திட்ட மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டத்தை (AWSSIESP) பொறுப்பேற்றுள்ளது. கருத்திட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவு அமெரிக்க டொலர் 100 மில்லியனாகும். கருத்திட்டம் 70% பௌதீக முன்னேற்றத்தையும் 22.52% நிதிசார் முன்னேற்றத்தையும் அடையப்பெற்றுள்ளது. கருத்திட்ட கால எல்லை 2022 மே மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நிர்மாணிப்பு ஒப்பந்தமும் மதியுரை ஒப்பந்தமும் தே.நீ.வ.வ.ச.யின் கட்டுப்பாட்டுக்கு அப்பாட்பட்ட ஒருசில காரணங்களினால் தாமதமடைந்துள்ளது. தாமதத்திலிருந் மீள்வதற்கும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்குமாக PMU மற்றும் PIU வின் (மதியுரையாளர்) வழிகாட்டலின் கீழ் ஒப்பந்தகாரர்களால் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9. ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்திற்கு ஸ்பெயினின் அரசாங்கத்தினாலும் இலங்கையின் ஹட்டன் நெஷனல் வங்கியினாலும் நிதியளிக்கப்படுகிறது. கருத்திட்டமானது ஆணமடுவ, கொட்டவெஹர, நவகத்தேகம மற்றும் புத்தளத்தின் ஒரு பகுதி, கல்கமு, முந்தலம் மற்றும் மஹகும்புக்கடவல பிரதேச செயலாளர் பிரிவுகளின் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வாக அமையும். கருத்திட்டமானது, இன்கிமிட்டிய நீர்த்தேக்கத்தில் நாளொன்றுக்கு 12,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட ஒரு புதிய உள்வாங்கு நிலையம், 1 கி.மீ. நீளமான பிரதானமான மூல நீர் குழாயுடன் நாளொன்றுக்கு 11,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட முழுச் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஆகியவற்றை நிர்மாணிக்கும். 61 கி.மீ. நீளமுள்ள தெளிவான நீர் அனுப்பல் குழாய் நான்கு நீர் கோபுரங்களுக்கு சேவையாற்றுவதோடு, அனைத்து மின் - இயந்திர உபகரணங்கள் உட்பட 328 கி.மீ. நீளமுள்ள விநியோக முறைமை ஆகியவற்றையும் நிறுவன அபிவிருத்தியையும் கருத்திட்டம் உள்ளடக்குகின்றது.

குழாய் இடுதலுக்காக நவகத்தேகம பிரதேச சபையிலிருந்து அங்கீகாரத்தைப் பெறுதல், ஊழியர் பற்றாக்குறை மற்றும் கருத்திட்டத்துக்கான வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினால் ஏற்பட்ட நிதியியல் பிரச்சினை ஆகியன AIWSP எதிர்நோக்கிய பிரதானமான தடைகளாகும்.



கொட்டவெஹர நீர் கோபுரம்

10. களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11

களனி வலது கரை நீர் வழங்கல் திட்டம் கட்டம் - 11, நாளொன்றுக்கு 180,000 க.மீ. கொள்ளளவு கொண்ட புதிய குடிநீர் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நிர்மாணிப்பதன் மூலம் கொழும்பு வடக்கு நகரின் நீர் வழங்கல் கொள்ளளவை அதிகரிக்கச் செய்யும் முதன்மையான குறிக்கோளுடன், சிவில் மற்றும் M&E வேலைகளுக்கான வடிவமைத்து கட்டியெழுப்பும் ஒப்பந்தமாகும். 120,000 புதிய நீர் இணைப்புகளுடன் பயனாளிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 1,750,000 ஆகும்.

கருத்திட்டம் 2017 சனவரி இல் ஆரம்பிக்கப்பட்டதோடு, செலவு ஏறத்தாழ ரூபா 32,700 மில்லியனாகும். நிதியளிப்பு நிறுவனங்கள் கிரடிற் எக்ரிகோல் கோபரேட் மற்றும் சர்வதேச பிரான்ஸ் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியனவாகும்.

2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 26 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய் இடுதலில் 95% நிறைவு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 82% மற்றும் 73% ஆகும். 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கருத்திட்டம் பொறுப்பளிக்கப்படவுள்ளது.

உள்வாங்கும் நிலையத்தில் ஆற்று நீரின் தரத்தை மேம்படுத்துதல், உள்வாங்கு நிலையத்தின் நீரோட்டத்திற்கு பட்டிவெல கால்வாயை திசைதிருப்புதல் மற்றும் நீரோட்டத்தின் உவர்ப்புநீர்த் தடை வரை பியகம EPZ இல் இருந்தான தற்போதுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவுக் குழாய் ஆகியன உத்தேசிக்கப்பட்டுள்ளன.



நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி நிர்மாணிப்பின் முன்னேற்றம்

11. மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் கருத்திட்டம்

மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் கருத்திட்டமானது, மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 18,208 மில்லியன் (வெளிநாட்டு - ரூபா 14,000 மில்லியன் , உள்ளூர் - ரூபா 4,208 மில்லியன்) தொகை இலங்கையின் தேசிய அபிவிருத்தி வங்கியின் (NDB) மூலம் நிதியிடப்பட்டு, 2017 ஒக்டோபர் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், மாத்தறை மாவட்டத்திலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் 285,000 மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதலாகும்.

நில்வலா ஆறு கருத்திட்டத்தின் நீர் வளமூலமாக விளங்குகிறது. நில்வலா ஆற்றுக்குக் குறுக்காக உவர்நீர்த் தடை, நாளொன்றுக்கு 66,000 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 30,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 06 நில நீர்த் தேக்கங்கள், 04 நீர்க் கோபுரங்கள், 300 மீ. நீலமான மூல நீர்க் குழாய், 78 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய் மற்றும் 120 கி.மீ. நீளமான விநியோக முறைமை ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.



உவர்நீர்த் தடை மற்றும் உள்வாங்கு நிலையம்

2019 இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 40% மற்றும் 44% ஆகுமென்பதோடு 2021 ஒக்டோபரில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

13. அளுத்கம, மத்துகம, அகலவத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இந்த கருத்திட்டத்தின் குறிக்கோள்கள் யாவையெனில், மத்துகம, தொடங்கொட, களுத்துறை, பேருவளை, அகலவத்த மற்றும் மதுராவல பிரதேச செயலாளர் பிரிவுகளின் 269 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்குதலும் தற்போதைய உவர்ப்புத்தன்மை ஊடுருவல் பிரச்சினையைத் தணிப்பதுமாகும்.

மொத்த மதிப்பீட்டு செலவு ரூபா 32,278 மில்லியனாகும் என்பதோடு, இதில் இந்தியாவின் எக்சீம் வங்கி ரூபா 24,285 மில்லியனையும், இலங்கை வங்கி ரூபா 4,286 மில்லியனையும், இலங்கை அரசாங்கம் ரூபா 3,707 மில்லியனையும் பங்களிப்புச் செய்கின்றது.

இந்த கருத்திட்டம் 32,000 புதிய நீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்கும் தற்போதுள்ள பாவனையாளர்களின் சேவை மட்டத்தை மேம்படுத்துவதற்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திலிருந்து மொத்தம் 300,000 மக்கள் (60,000 குடும்பங்கள்) பயனடைவார்கள்.

புதிய உள்வாங்கு நிலையம், கெத்ஹேன நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, நில நீர்த் தேக்கம், நீர்க் கோபுரங்கள், மூல நீர் / தெளிந்த நீர் பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல் மற்றும் விநியோக முறைமையை இடுதல் ஆகியன ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2019.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 52% மற்றும் 48% ஆகும்.



அகழியில் மூல நீர் மற்றும் தெளிந்த நீர் குழாய்களை இடுதல்

13. பொல்கஹவெல, பொத்துஹர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

பொல்கஹவெல, பொத்துஹர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டமானது திட்டமிட்டு, வடிவமைத்து கட்டியெழுப்பும் ஒப்பந்தமாகும். இதற்கு இந்தியாவின் எக்சீம் வங்கி மற்றும் இலங்கை வங்கி நிதியிடுகின்றது. கருத்திட்ட மொத்த மதிப்பீட்டு செலவு அமெரிக்க டொலர் 108 மில்லியனாகும். இக்கருத்திட்டத்தின் குறிக்கோள், கருத்திட்ட பிரதேசத்தின் 167 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 162,725 மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குலும் விநியோகித்தலுமாகும்.

நாளொன்றுக்கு 31,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 29,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, 6 நில நீர்த் தேக்கங்கள் மற்றும் 5,175 க.மீ. மொத்த கொள்ளளவைக் கொண்ட ஒரு உயர்த்தப்பட்ட நீர் கோபுரம், 1.5 கி.மீ. நீளமான மூல நீர் அனுப்பல் பிரதான குழாய், 42 கி.மீ. நீளமான DI அனுப்பல் பிரதான குழாய், 320 கி.மீ. நீளமான பிரதான விநியோக குழாய் மற்றும் தொழிற்படுத்தல் கட்டடங்கள் ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும்.

2019 இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 56.5% மற்றும் 53.99% ஆகும் (மீதி முற்பண மீள்அறவீடு 8.48% தவிர்ந்த). கருத்திட்டத்தை 2020 ஜூன் மாதத்தில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

அமுல்படுத்தலின்போது, A6 வீதி நெடுகிலும் குழாய் இடுவதற்கு RDA அனுமதி அளிக்காமையினால் அனுப்பல் மற்றும் நீர்த்தேக்க இடங்களின் அமைவிடங்கள் மாற்றமடைந்தன. எதிர்பாராத கல் உடைப்பை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக அதற்கான அனுமதியைப் பெறுவதிலும் தாமதம் ஏற்பட்டது.



நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

14. மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்

மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம் (GMWSP) 05 சுத்திகரிப்புப் பொறித்தொகுதிகள் (முழுமொத்தக் கொள்ளளவு நாளொன்றுக்கு 75,000 க.மீ.), 05 உள்வாங்கு நிலையங்கள், 10 சேவை நீர்த் தேக்கங்கள் மற்றும் 433 கி.மீ. குழாய் இடல்களின் நிர்மாணிப்பை உள்ளடக்குகின்றது. ஒப்பந்தமானது வடிவமைத்து கட்டியெழுப்பும் வகை ஒப்பந்தமாகும் என்பதோடு, யூரோ 105,645,791 + ரூபா 8,210.96 மில்லியன் தொகைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த காலம் 36 மாதங்கள் ஆகுமென்பதோடு, 2017 ஏப்ரல் இல் ஆரம்பிக்கப்பட்டது.

2019 திசெம்பர் மாதமளவில், சுத்திகரிப்புப் பொறித்தொகுதி 70%, நீர்த் தேக்கம் 75%, உள்வாங்கு நிலையம் 61% மற்றும் குழாய் இடல் 62% வேலைகள் பூர்த்தியடைந்திருந்தன. 80% இயந்திர சாதனங்கள் வழங்கப்பட்டிருந்த அதேவேளை பொருத்துதல் வேலைகள் நடைபெற்று வருகின்றன. 72% நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.



மஹவெலகந்த நீர் தாங்கி

கருத்திட்டம் சில பிரச்சினைகளை எதிர்நோக்கியதால் கருத்திட்ட முன்னேற்றம் அட்டவணைப்படுத்தப்பட்டதை விட பிந்தங்கிய நிலையில் உள்ளது. ரத்தொட்டவுக்கான உத்தேச நீர் மூலமான வெரலுகஸ்தென்ன கிளை ஆற்றலிருந்து நீர் உள்ளீர்க்கப்படுவதற்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தமை தொடர்பான பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை. காணி கொள்ளல் நடவடிக்கைகள் தாமதமாயுள்ளதோடு 4 காணிகள் இன்னும் கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளன. கட்டணச் சிட்டைகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துவதிலுள்ள தாமதம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நிதி நெருக்கடியின் காரணமாக சகதி உலர்த்தல் மேடை, மீளப்பெறும் நீர்த்தேக்கம், வெரலுகஸ்தென்னவில் மாற்றுத் தெரிவு நீர்த்தேக்கம் ஆகியவற்றின் நிர்மாணிப்பு தாமதமடைந்துள்ளது.

15. கண்டி வடக்கு – பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

கண்டி வடக்கு – பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டமானது கண்டி மாவட்டத்தின் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்குகின்றதோடு, தற்போதுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் உற்பத்திக் கொள்ளளவை நாளொன்றுக்கு 100,000 க.மீ. வரை அதிகரிக்கச் செய்வதன் மூலம் 470,000 மக்களுக்கு நன்மை அளிக்க உள்ளது.

சீன எக்சிம் வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் நிதியிடும் மூலமாகும். ஒப்பந்தத் தொகையான அமெரிக்க டொலர் 194.83 மில்லியள் 0,918.47 உடன் ரூபா 8,356.25 மில்லியனாகும். மற்றைய நிதியளிப்பு இலங்கை அரசாங்கத்தின் ரூபா 7,313.94 மில்லியனாகும். ஒப்பந்தம் 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2022 ஆகஸ்ட் 20 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

KNPIWSP பிரதானமாக, நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் உள்வாங்கு நிலையத்தின் மேம்பாடு, 28 சேவை நீர்த் தேக்கங்கள், 16 புதிய பம்பி நிலையங்கள், 567 கி.மீ. நீளமான விநியோக குழாய் மற்றும் 86 கி.மீ. நீளமான அனுப்பல் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. கிராமிய நீர் வழங்கல் மற்றும் NRW தடுப்பு மற்றும் குறைப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கான ஏற்பாடுகளையும் இது உள்ளடக்குகின்றது. 2019 திசெம்பர் இறுதியில் மொத்த பௌதீக முன்னேற்றம் 9.98% ஆகுமென்பதோடு, நிதிசார் முன்னேற்றம் 13.64 ஆகும்.



KNPIWSP மின் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் மேம்பாட்டுக்கான அமைவிட வரைபடம்

16. தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம்

தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டமானது கொரிய எக்சிம் வங்கியின் நிதியிடலின் கீழ் வடிமைத்துக் கட்டியெழுப்பப்படும் ஒரு கருத்திட்டமாக 2017 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மொத்த கருத்திட்டச் செலவு ரூபா 10,227 மில்லியனாகும் (வெளிநாட்டு – அமெரிக்க டொலர் 58 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்க நிதியம் ரூபா 1,326 மில்லியன்).

மஹவ, மற்றும் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் 97,700 மக்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளவாறு 2032 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

கருத்திட்ட ஆக்கக்கூறுகள், நாளொன்றுக்கு 34,500 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 15,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 3 உயத்திய நீர் கோபுரங்கள் மற்றும் 3,750 க.மீ. களஞ்சியப்படுத்தலுக்கான நீர்த்தொட்டி, 39 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய், 266 கி.மீ. நீளமான விநியோக முறைமை மற்றும் தொழிற்பாட்டுக் கட்டடங்கள் (OIC அலுவலகம் மற்றும் 3 விடுதிகள்) ஆகும்.

கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 86.4% ஆகுமென்பதோடு, கருத்திட்டத்தை 2020 மே மாதம் 31 ஆம் திகதி நிறைவு செய்து பொறுப்பளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததோடு, முழுமொத்த கருத்திட்டத்தையும் நிறைவு செய்வதற்காக இலக்கிடப்பட்ட திகதி 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.



நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

17. ஒருகொடவத்தை தொடக்கம் கடுவெல வரையிலுள்ள அனுப்பல் மற்றும் விநியோக பிரதான குழாய்களை மாற்றீடு செய்தல்

இக்கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள் யாதெனில், மிகப் பழைமையான நீர் அனுப்பல் குழாய்களில் நித்தமும் ஏற்படுகின்ற குழாய் வெடிப்புகளின் மூலம் நீர் பாவனையாளர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைத்து, கடுவெல, கொலொன்னாவ மற்றும் கொழும்பு நகர் பிரதேசத்திலுள்ள 1.5 மில்லியன் நீர் பாவனையாளர்களுக்கான சேவை மட்டத்தை மேம்படுத்தலாகும்.

இக்கருத்திட்டத்தின் கீழ், லபுகம மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்தான அனுப்பல் குழாய்கள் ஒருகொடவத்த மேம்பாலத்திலிருந்து கடுவெல கடுகதி நெடுஞ்சாலை இடமாற்றல் வரை லோ லெவல் வீதி நெடுகிலும் 1,200 மி.மீ. மற்றும் 1,000 மி.மீ. DI குழாய்களின் மூலம் மாற்றீடு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக இப்பிரிவில் 355 மி.மீ. விட்டம் மற்றும் 160 மி.மீ. விட்டம் கொண்ட HDPE குழாய்களும் இடப்படும்.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 37.5% மற்றும் 45.0% ஆகும்.



ஒருகொடவத்தை குழாய் இடுதல்

18. கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டமானது 2,000 க.மீ. கொள்ளளவுடன் கூடிய 3 உயர்த்தப்பட்ட நீர் கோபுரங்கள், 3 அனுப்பல் பம்பி நிலையங்கள், 12 கி.மீ. நீளத்துக்கான பிரதான அனுப்பல் குழாய்க் மற்றும் 240 கி.மீ. நீளத்துக்கான பிரதான் விநியோக குழாய்கள், M&E பொருத்துதல்கள் மற்றும் SCADA முறைமை உள்ளடங்கிய சிவில் மற்றும் M&E வேலைகளை உள்ளடக்குகின்ற வடிவமைத்து கட்டியெழுப்பப்படுகின்ற ஒரு கருத்திட்டமாகும். இக்கருத்திட்டத்தின் கட்டம் 1 நிறைவடைவதைத் தொடர்ந்து இப்பிரதேசத்திலுள்ள (45 கிராம அலுவலர் பிரிவுகள்) சனத்தொகையினருக்கு நாளாந்தம் 5,300 க.மீ. நீர் வழங்கப்படும். மொத்த கருத்திட்ட செலவு ரூபா 9,500 மில்லியனாகும் என்பதோடு, நிதி மூலம் சீன அபிவிருத்தி வங்கி, இலங்கை வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

2019 திசெம்பர் இறுதியவில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 80.71% மற்றும் 77.90% ஆகும். தற்போதைய முன்னேற்றம் அட்டவணைப்படுத்தப்பவாறு நடைபெறுவதோடு கருத்திட்டம் 2020 ஏப்பிரலில் நிறைவடையும். கருத்திட்டத்தின் நலனானது, KRB 11 கருத்திட்டத்தின் பூர்த்தியடைதலுடன் ஒருங்கிணைந்துள்ளதோடு கட்டான நீர் வழங்கல் கருத்திட்டத்தின் இறுதி பொறுப்புரிமையளித்தல் இதில் தங்கியுள்ளது.



ரத்தொலுவ OIC அலுவலகம்

19. தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம்

இக் கருத்திட்டமானது தம்புத்தேகம, தலாவ மற்றும் கல்னேவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு பாதுகாப்பானதும் நம்பத்தகுந்ததுமான குழாய் நீரை வழங்குகின்றது. கருத்திட்ட காலகட்டம் 2018 ஜூலை 01 ஆம் திகதி தொடக்கம் 2021 ஜூன் 30 ம் திகதி வரையிலாகும்.

நாளொன்றுக்கு 42,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 18,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, நில நீர்த் தேக்கம் மற்றும் ஒவ்வொன்றும் 1,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட 3 உயர்ப்பட்ட நீர்க் கோபுரங்கள், 40 கி.மீ. நீளமான சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் 12 கி.மீ. நீளமான மூல நீர் அனுப்பல் DI பிரதான குழாய்கள், 135 கி.மீ. நீளமான DI/PVC பிரதான விநியோக குழாய்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியன பிரதானமான ஆக்கக்கூறுகளாகும்.

ராஜாங்கனய குளத்தில் ஒருங்கிணைந்த விவசாயிகள் அமைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பினால் கருத்திட்டத்தின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டதோடு, நீர் வலமூலப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் தலையீடு அவசியமாயுள்ளது. உள்வாங்கு நிலைய கட்டமைப்புக்காக ராஜாங்கனய குளத்திலிருந்து நீர் உள்ளீர்க்கப்படுவதற்கும் காணி கொள்ளலுக்குமாக அங்கீகாரம் பெறப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

2019 இறுதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 19.5% மற்றும் நிதிசார் முன்னேற்றம் 36.34% ஆகும்.

20. கிரம - கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

வலஸ்முல்ல மற்றும் கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின் சேவை உள்ளடக்கத்தை மற்றும் நீர் பயன்பாட்டின வினைத்திறன் மற்றும் நிலைபேறான தன்மையை அதிகரிக்கச் செய்தல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். இக்கருத்திட்டம் அமுலாக்கப்படுவதைத் தொடர்ந்து, முதற் தடவையாக, இருப்பிலுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் தற்போது சேவை வழங்கப்படாதுள்ள புதிய பிரதேசங்கள் பாதுகாப்பானதும் நம்பகத்தன்மையடன் கூடியதுமான நீர் வழங்கலைப் பெறும். இக்கருத்திட்டத்தின் உள்ளடக்கப் பிரதேசமானது கட்டுவன மற்றும் வலஸ்முல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 34 கிராம அலுவலர் பிரிவுகளாகும். 5,200 புதிய இணைப்புகள் மற்றும் 2,000 இப்புகளின் சேவை மேம்பாட்டின ஊடாக மொத்தம் 36,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்கப்படும்.

ஒப்பந்தம் 2014 ஜூன் மாதம் 2 ஆம் திகதி வழங்கப்பட்டது. யுனிகிரடிற் வங்கி அவுஸ்திரேலியா மூலம் மதிப்பீட்டுச் செலவில் யூரோ 10.48 மில்லியன் வெளிநாட்டு நிதி வழங்கப்பட்டதோடு, இலங்கை அரசாங்கத்தின் மூலம் உள்நாட்டு நிதி ரூபா 700 மில்லியன் தேடப்படும். கருத்திட்ட வேலைகள் 2019 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2021 மார்ச் மாதமளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.



திரைதல் மற்றும் திரள்தல் தாங்கி

21 ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம்

கேகாலை மாவட்டத்தினுள் 135 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு, 2042 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 169,200 சனத்தொகையினருக்கு பாதுகாப்பான குழாய் நீர் வசதிகளை வழங்குவதற்கு நெதர்லாந்து ஐபுடே வங்கியின் உதவியோடு, வடிவமைத்துக் கட்டியெழுப்புகின்றதாக ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. மொத்த கருத்திட்ட செலவு யூரோ 81,956,626.00 மில்லியனாகும் என்பதோடு, கருத்திட்ட காலம் 1065 நாட்களாகும். கருத்திட்டம் 2018 திசெம்பர் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு, 2022 மார்ச் 23 இல் நிறைவு செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.



அரநாயக்க நீர்த் தேக்கம்

நாளொன்றுக்கு 24,000 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம், 0.6 கி.மீ. நீளமான மூல நீர் பிரதான குழாய், நாளொன்றுக்கு 21,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, 37 கி.மீ. நீளமான பிரதான அனுப்பல் குழாய், 07 நில நீர்த் தேக்கங்கள் மற்றும் 74 கி.மீ. நீளமான விநியோக முறைமை ஆகியன கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகளாகும்.

ஒப்பந்தகாரரால் 60% ஆன வடிவமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, நிர்மாணிப்புப் பணிகள் 2019 திசெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 16% மற்றும் 26.5% ஆகும்.

உள்நாட்டு வங்கி நிதியளிப்பிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

940,000 சனத்தொகையினருக்கு நன்மைபயக்கக் கூடிய வகையில் நீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்துவதற்காக 16 பாரிய கருத்திட்டங்கள் உட்பட ரூபா 3.5 பில்லியன் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் (LBF) கருத்திட்டங்களும் ரூபா 53 பில்லியன் உள்நாட்டு வங்கி நிதியளிப்புக் கருத்திட்டங்களும் தொழிற்படுத்தப்படுகின்றன. பெந்தோட்ட நீர் வழங்கல் கருத்திட்டம், ருகுணுபுர நீர் வழங்கல் திட்டம், கொழும்பு நகர நீர் வழங்கல் கருத்திட்டம், அம்பாறை நீர் வழங்கல் திட்டம், அவிசாவலை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகிய ஆறு கருத்திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, ஏனைய அனேகமான கருத்திட்டங்கள் 2020 இல் நிறைவு செய்யப்படவுள்ளன.

அ). மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் II

மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதியின் நீர் வழங்கல் விநியோக முறைமையினை உள்ளடக்குவதற்காக மெதிரிகிரிய விநியோகம் கட்டம் 11 கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவில் 31 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். ரூபா 1363.6 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் 11, PVC/DI குழாய்களை வழங்கி இடுதல், பொருத்தல்கள் மற்றும் துணைப்பாகங்கள், உட்பட அளவை செய்தல் மற்றும் வடிவமைத்தல், கவுடுல்ல ஓயாவுக்கு குறுக்காக குழாய் பாலத்தை நிர்மாணித்தல், அலுவலகம் மற்றும் விடுதிகளை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் ஆகியவற்றுக்கான 10% தற்செயல் நிகழ்வுத் தொகையுடன் கூடியதாக கையளிக்கப்பட்டது. கருத்திட்டம் 2016.03.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு 2020 ஏப்பிரல் 22 ஆம் திகதி நிறைவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2019 இறுதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த குழாய் இடுதலின் முன்னேற்றம் 99.34% ஆக காணப்பட்டதோடு ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் 79.68% ஆகும்.



புதிய நகர நீர்க் கோபுர வளவில் அலுவலக கட்டடம்.

ஆ). கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம்

கலகெதர மாவத்தகம நீர் வழங்கல் கருத்திட்டமானது வடமேல் மாகாணத்தில், குருணாகல் மாவட்டத்தின் மாவத்தகம மற்றும் மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டத்தின் மூலம் 29 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு ஏறத்தாழ 33,000 மக்களுக்கு சேவையாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. கருத்திட்ட ஆக்கக்கூறுகள், 27 கி.மீ. நீளமான HDPE/DI பிரதான அனுப்பல் குழாய், மாவத்தகமவில் 1,000 க.மீ. நீர் கோபுரம், பில்லஸ்ஸவில் 450 க.மீ. நீர்த்தேக்கம், 113 கி.மீ. நீளம் கொண்ட விநியோக முறைமை, இரசாயன கட்டடங்கள் (02), சமநிலைப்படுத்தல் நீர்த் தேக்கம் (50 க.மீ.) மற்றும் OIC அலுவலகக் கட்டடம் ஆகியனவற்றை நிர்மாணித்தல் ஆகும். கருத்திட்டத்தின் மூலம் RSC (மத்திய), கட்டுகஸ்தொட்டவிலுள்ள நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலிருந்து நாளொன்றுக்கு 2,000 க.மீ. கலகெதர நீர் வழங்கல் திட்டத்துக்கும் மற்றும் நாளொன்றுக்கு 3,000 க.மீ. மாவத்தகம நீர் வழங்கல் திட்டத்துக்கும் வழங்கப்படும்.

கருத்திட்டம் 2019 மே மாதம் 31 ஆம் திகதி ஓரளவுக்கு நிறைவு செய்யப்பட்டதோடு, கருத்திட்ட சேமிப்பிலிருந்து இரண்டு நீடிப்புகள் மற்றும் OIC கட்டடத்தின் இறுதிக் கட்டம் உள்ளடங்கிய மீதி வேலைகள் நடைபெற்று வருகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

2019 திசெம்பர் 30 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 99.62% ஆகும். நிதியியல் முன்னேற்றம் 61% ஆகும்.
கண்டி வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் நிறைவடைவதைத் தொடர்ந்து வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த நாளொன்றுக்கு 5,000 க.மீ. நீர் கிடைக்காமையின் காரணமாக கருத்திட்டத்தை பொறுப்பளிக்க முடியாதுள்ளது.



மாவத்தகமவில் 1,000 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் கோபுரம்

இ). லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம்

மாத்தளை மாவட்டத்தில் மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு குடிநீர் வசதியை வழங்கும் பொருட்டு லக்கல புதிய நகர நீர் வழங்கல் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ளவாறு 2036 ஆம் ஆண்டளவில் 24,438 நலன்பெறுனர்களைக் கொண்டிருக்கும். கருத்திட்ட செலவு ரூபா 4,496 மில்லியனாகும் என்பதோடு, உள்ளூர் வங்கி நிதியத்தின் மூலம் (HNB) நிதியளிக்கப்படுகிறது. 2016.07.21 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2019.12.29 ஆம் திகதி (திருத்தப்பட்டாறு) பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
களுகங்கை நீர் மூலமாகும். பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக உள்வாங்கு நிலைய அமைவிடம் மாற்றப்பட்டதால், மூல நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பிரதான நீர்க் குழாய்கள் தொடர்பிலான ஒருசில ஏனைய கட்டமைப்பு அமைவிடமும் பாதையும் மாற்றபடுகின்றது. திருத்திட்டப்பட்டவாறான விடயப்பரப்பானது, நாளொன்றுக்கு 4,250 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 4,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, 03 சேவை நீர்த் தேக்கங்கள் (150, 400 மற்றும் 600 க.மீ.), முறையே ஏறத்தாழ 6.4 கி.மீ., 29 கி.மீ. மற்றும் 190 கி.மீ. நீளமான பிரதான மூல நீர்க் குழாய், பிரதான சுத்திகரிக்கப்பட்ட நீர்க் குழாய், மற்றும் விநியோக முறைமை மற்றும் துணைக் கட்டடங்களையும் உள்ளடக்கியுள்ளது.



நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் தெளிந்த நீர்த் தேக்கத்தை நிர்மாணித்தல்

ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 64.5% மற்றும் 36.06% ஆகும். நிதியங்கள் கிடைக்காமையின் காரணமாக கொடுப்பனவுகளை செலுத்துவதில் தாமதம் காணப்படுகின்றதோடு, வங்கியின் (HNB) மூலம் ஒருசில இடைக்கால கோரிக்கைகள் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளன.

ஈ). வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டமானது மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதோடு, 39 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு ஏறத்தாழ 35,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.
நாளொன்றுக்கு 6,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட உள்வாங்கு நிலையம், நாளொன்றுக்கு 5,500 க.மீ. கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, பிரதான மூல நீர்க் குழாய் (1,000 மீ.), சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் பிரதான குழாய் (26 கி.மீ.), நீர்த் தாங்கிகள் (225 க.மீ. மற்றும் 300 க.மீ.), விநியோக குழாய்கள் (100 கி.மீ.), நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகம், மூன்று விடுதிகள் ஆகிவற்றின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பை வேலைகளின் விடயப்பரப்பு உள்ளடக்குகின்றது.
ஒப்பந்தகாரரின் நிதிப் பிரச்சினை காரணமாக 2019 முதல் எட்டு மாத காலத்தில் வேலைகள் மிகவும் குறைவாகவே நடைபெற்றன. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2019 ஆகஸ்டில் வேலைகளை மீள ஆரம்பித்தார்.
2019 இறுதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 52% ஆகவும் நிதியியல் முன்னேற்றம் 32.6% காணப்படுகின்றது.

கருத்திட்டத்தை உரிய நேரத்தில் நிறைவு செய்வதை ஒப்பந்தகாரரின் தொடச்சியாகக் காணப்பட்ட நிதிப் பிரச்சினை பெரிதும் பாதிப்படையச் செய்ததோடு, தே.நீ.வ.வ.ச. யிலிருந்து NDB க்கு கடன் செலுத்தப்படுவதில் ஏற்பட்ட தாமதமும் ஒப்பந்தகாரருக்கு உரிய நேரத்தில் கட்டணச் சிட்டைகளைச் செலுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தியது.



உள்வாங்கு நிலையக் கிணறு மற்றும் பம்பி நிலையம்

உ). அம்பாறை விநியோக வலையமைப்பு நீர் வழங்கல் கருத்திட்டம்

அம்பாறை விநியோக வலையமைப்பு நீர் வழங்கல் கருத்திட்ட ஒப்பந்தத்தில், 10,000 + 2,000 வீட்டு இணைப்புகளை வழங்கும் பொருட்டு 1,119 கி.மீ. நீளமான விநியோக வலையமைப்பின் நிர்மாணிப்பு, 527 கி.மீ. நீளமான PE குழாய்கள், தேவையான பொருத்துகள், விசேடங்களை வழங்குவதற்கு பல பொதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
2015 செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரை அம்பாறை மாவட்டத்தில் நிலவிய மோசமான காலநிலை நிலைமை முடிவடைந்ததைத் தொடர்ந்து முழுப் பலத்துடன் மீள இயங்குவதன் அடிப்படையில், 2,000 மேலதிக நீர் இணைப்புகளுக்கான மேலதிக வேலைகள், பொக்கபெத்த ஊக்குவிப்புப் பம்பி நிலையம், பியன்கலவில் பம்பிகள் மற்றும் தன்னியக்க குளோரீனிடல் முறைமையை பொருத்துதல், மருதமுனை OIC அலுவலக வளவில் எல்லை மதில் மற்றும் வவுனதீவு சுத்திகரிப்புப் பொறித் தொகுதி வளவில் முற்றக் குழாய்களை நிர்மாணித்தல் தொடர்பில் மேலதிக வேலைகளை அமுலாக்குவதற்கு பல்வேறு பணிக் கட்டளைகளின் ஊடாக ஆலோசனை வழங்கப்பட்டது. இறுதி ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் 2019 பெப்ருவரி 12ம் திகதி நடைபெற்றது. மேலும், 2019 மே மாதம் 10 ஆம் திகதி பிணக்குத்தீர்ப்பு இறுதிக் கையளிப்பு வழங்கப்பட்டது.



OIC அலுவலகம் - பரகஹகெலே

ஊ). அவிசாவளை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் அவிசாவளை மற்றும் கொஸ்கம பிரதேசங்களில் நீர் குழாய் விநியோக முறைமையை மேம்படுத்தலாகும். அவிசாவளை மற்றும் கொஸ்கம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் PVC/DI குழாய்கள், பொருத்துகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் இடுதலுக்கும் ஏனைய வேலைகளுக்குமாக ரூபா 1,382.4 மில்லியனுக்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு வங்கி (LBF) நிதியம் நிதியிடல் மூலமாகும். கருத்திட்டம் உண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்ட திகதி 2016.06.01 ஆகும் என்பதோடு 2019 நவெம்பரில் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் கீழான வேலைகள், அவிசாவளை மற்றும் கொஸ்கம பிரதேசத்தில் முறையே 36.1 கி.மீ.மற்றும் 11.2 கி.மீ. நீளமான விநியோக குழாய் முறைமையை வழங்குதல் மற்றும் இடுதல், கொஸ்கமவில் உள்வாங்கு நிலைய மேம்பாட்டு வேலைகள் மற்றும் அவிசாவளை வேலைத்தளத்தில் கட்டட நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு வேலைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இக்கருத்திட்டத்தின் கீழ் அவிசாவலையின் அதிக உயர்த்தியான பிரதேசங்களுக்கு சேவையாற்றப்படுகின்றது.



அவிசாவலை 53/3 ஆம் இலக்க பாலத்துக்கு குறுக்காக குழாய் இடுதல்.

எ). கொழும்பு கிழக்கு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் - பொதி 1, 2, 3

ஹோமாகம, கடுவல, பாதுக்க, சீதாவக்க மற்றும் ஹொரண பிரதேச செயலாளர் பிரதேங்களின் 373,000 மக்களுக்கு பாதுகாப்பான குழாய்வழி குடிநீர் வழங்குதலை இக்கருத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கருத்திட்டமானது 03 ஒப்பந்தப் பொதிகளைக் கொண்டுள்ளதோடு, கருத்திட்டத்தின் செலவு, பொதி 1 (பிரான அனுப்பல் குழாய் 4 கி.மீ. மற்றும் பிரதான விநியோக குழாய் 229 கி.மீ.), பொதி 2 (பிரான அனுப்பல் குழாய் 8 கி.மீ., பிரதான விநியோக குழாய் 10 கி.மீ., நில நீர்த் தேக்கம் - 18,000 கன மீற்றர் கொள்ளளவு மற்றும் கட்டிடங்கள்), பொதி 3 (பிரதான விநியோக குழாய் 400 கி.மீ. மற்றும் வீட்டு இணைப்புகள் 10,000) முறையே ரூபா 5,170 மில்லியன், ரூபா 4,823 மில்லியன் மற்றும் ரூபா 10,049 மில்லியன் ஆகும்.

2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் அனைத்து மூன்று ஒப்பந்தப் பொதிகளினதும் முன்னேற்றம் வருமாறு, ஒப்பந்தப் பொதி 1 - பௌதீக முன்னேற்றம் 99.7% மற்றும் நிதிசார் முன்னேற்றம் 68.2% ஆக காணப்பட்டது, ஒப்பந்தப் பொதி 2 - பௌதீக முன்னேற்றம் 68.1% மற்றும் நிதிசார் முன்னேற்றம் 47.7% ஆக காணப்பட்டது, ஒப்பந்தப் பொதி 3 - பௌதீக முன்னேற்றம் 85.3% மற்றும் நிதிசார் முன்னேற்றம் 68.5மூ ஆக காணப்பட்டது.

2019 திசெம்பர் இறுதியளவில், அடித்தள வடிவமைப்பு திருத்தியமைக்கப்படுதல் மற்றும் வீட்டு இணைப்புகள், RDA யின் வீதி விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட குழாய் இடுதல், வேலைத்தலத்தின் இடமாற்றம் காரணமாக தாமதமடைந்திருந்த நில நீர்த் தேக்கத்தை நிர்மாணித்தல் தவிர்ந்த அனைத்து வேலைகளும் ஓரளவுக்கு நிறைவடைந்துள்ளன.

ஒப்பந்தப் பொதி 01 மற்றும் 03 இன் ஒப்பந்ததாரர்கள் DAB க்கு பிணக்கை ஆற்றுப்படுத்தியுள்ளனர் என்பதோடு DAB யின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. DAB தீர்ப்பு மீது எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பில் ஒப்பந்ததாரர்களுடன் கூட்டங்கள் நடைபெற்ற போதிலும் இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.



இரசாயன வெடிக்கவைத்தல்

ஏ). காலி கொத்தணி நீர் வழங்கல் கருத்திட்டம்

கருத்திட்டம் வெலிகம, ஊரகஸ்மன்சந்தி, கோனபீனுவல மற்றும் திக்கும்புர நீர் வழங்கல் திட்டங்களை உள்ளடக்குகின்றது. கருத்திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபா 1,755 மில்லியனாகும். நிதியிடல் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியின் மூலமாகும். கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகளாக, 86.5 கி.மீ. நீளத்துக்கான PVC/DI குழாய்கள், வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், 4 திட்டங்களில் 117.5 கி.மீ. நீளத்துக்கு PVC/DI குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை இடுதல், ஊரகஸ்மன்சந்தி, ஹிக்கடுவ, கொவுல்ஹேன, வக்வெல்ல மற்றும் வெலிகம நீர் வழங்கல் திட்டங்களில் பம்பிகளை பொருத்துதல், ஊரகஸ்மன்சந்தியில் 100 க.மீ. கொள்ளளவு கொண்ட நில நீர்த் தேக்கம் மற்றும் மேலுயர்த்தப்பட்ட பம்பி நிலையம், வெலிகமவில் 225 க.மீ. நில நீர்த்தேக்கம், பொறுப்பாளர் விடுதி மற்றும் பம்பி நிலையம் ஆகியன உள்ளன. கருத்திட்டமானது மொத்தமாக 55 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்குகின்றது. எதிர்பார்க்கப்படுகின்ற இணைப்புகளின் எண்ணிக்கை 20,000 ஆகுமென்பதோடு, நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 82,000 ஆகும். கருத்திட்டம் 217 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2020 ஜூலை மாதத்தில் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு இறுதியில் கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம முறையே 34.96% மற்றும் 40.84% ஆகும்.



திக்கும்புர நீர் வழங்கல் கருத்திட்டத்தில் "B" வகையான மதகுக் கடவையை நிறைவு செய்கின்றபோது.

ஐ). எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்

எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டமானது ரூபா 2.2 பில்லியன் கருத்திட்டச் செலவுடன் கூடிய உள்நாட்டு வங்கி நிதியிடலுடனான ஒரு கருத்திட்டமாகும். இக்கருத்திட்டம் அதன் நலன்களை (ஏறத்தாழ 15,000) மற்றும் புதிய 3,000 இணைப்புகளை கருத்திட்ட பிரதேசத்தை உள்ளடக்கிய எட்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்குகின்றது. கருத்திட்ட ஒப்பந்தம் 2014.12.08 ஆம் திகதி கையளிக்கப்பட்டதோடு, 2017 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு, 1,095 நாட்களில் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது.

2019 இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 75% (இலக்கு 80%) ஆகவும் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் 58% (இலக்கு 69%) ஆகவும் உள்ளது.

காணி கொள்ளல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, நிர்மாணிப்புச் செயற்பாடுகளுக்கான உரிய இசைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, ஊக்குவிப்புப் பம்பி நிலையம் 1 மற்றும் 11, அனுப்பல் வலையமைப்புடன் கூடியதான பிரதான நீர்த் தாங்கி ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதான ஆக்கக்கூறுகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளன. அனைத்து நிர்மாணிப்புப் பணிகளுக்கும் முன்னர் RDA மற்றும் PRDA உள்ளிட்ட உரிய தரப்பினர்களிடமிருந்து அனைத்து முன் அங்கீகாரமும் பெறப்பட்டது.

மூல அட்டவணையின் பிரகாரம், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை 2020 பெப்ரவரிக்கு முன்னர் ஆரம்பிக்க முடியும் என்பதோடு, 2020 மார்ச் மாத்திலிருந்து முன்னோக்கியதாக வீட்டு இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும்.



காற்றூட்டல் அமைப்பு

ஒ). கிரிதர நீர் வழங்கல் கருத்திட்டம்

கிரிதர நீர் வழங்கல் கருத்திட்டமானது, தொம்பே பிரதேச செயலாளர் பிரிவின் 18 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நீர் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ரூபா 513.28 மில்லியன் உள்நாட்டு வங்கி நிதியிடல் (மக்கள் வங்கி) கருத்திட்டமாகும். கருத்திட்டத்தை 365 நாட்களில் நிறைவு செய்வதற்காக ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு வேலைகள் 2019 பெப்ரவரி 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கலட்டுவாவ N30 இடைமாற்றல் குழாயிலிருந்து முறைமைக்கு நீரைப் பெறுவதற்காக ஹன்வெல்ல பாலத்திற்கு ஊடாக குழாய் இடுதல் உள்ளடங்கியதாக, 63 மி.மீ. விட்டத்தில் (PVC) இருந்து 350 மி.மீ. விட்டம் (DI) வரையிலான விட்டத்துடன் கூடிய குழாய்களின் 100 கி.மீ. நீளமான விநியோக வலையமைப்பை வழங்குதல் மற்றும் இடுதலை வேலைகள் உள்ளடக்குகின்றன.

ஒப்பந்ததாரரின் நிதியியல் மற்றும் முகாமைத்துவப் பிரச்சினை காரணமாக 23மூ மொத்த முன்னேற்றத்துடன் கூடியதாக தற்போது கருத்திட்ட வேலைகள் அட்டவணைப்படுத்தியதை விட பிந்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. ஒப்பந்த காலம் 2 மாதங்கள் மாத்திரம் எஞ்சியுள்ள நிலையில் 90 கி.மீ. (PVC) நீளமான குழாய்களில் 16 கி.மீ. இடப்பட்டுள்ளதோடு, DI குழாய் இடல் (10 கி.மீ.) இன்னமுமே ஆரம்பிக்கபட வேண்டியுள்ளது. வேலைகளை நிறைவு செய்வதற்காக ஒப்பந்ததாரர் 6 மாத கால நீடிப்பைக் கோரியுள்ளார் என்பதோடு, அங்கீகாரம் வழங்குவதற்காக தே.நீ.வ.வ.ச. கோரிக்கை பற்றிய பகுப்பாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.



குழாய் இடல்

ஓ). இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம்

இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் திட்டம் சம்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டம் 15,000 புதிய நீர் இணைப்புகளை உள்ளடக்குவதற்கும் 80,000 நலன்பெறுனர்களுக்கு சேவையாற்றுவதற்கும் திட்டமிட்டுள்ளது.

வேலைகளின் விடயப்பரப்பானது 178 கி.மீ. நீளத்திற்கு HDPE/ DI/ uPVC குழாய்கள், பொருத்துகள், விசேடங்கள், DI வால்வுகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதையும் இடுதலையும் உள்ளடக்குகின்றது.

இவ்வொப்பந்தம் 539 நாட்கள் கருத்திட்ட காலத்துடன் கூடியதாக 2017.09.01 ஆம் திகதி கையளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கடன் உடன்படிக்கையின் பிந்திய செல்லுபடியான தன்மையின் காரணமாக ஒப்பந்தம் செல்லுபடியாகின்ற திகதி 2018 திசெம்பர் 14 ஆம் திகதியாக அமைந்தது. ஒப்பந்தத் தொகை ரூபா 1,528.98 மில்லியனாகும். 2019 இறுதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 25% ஆகவும் நிதியியல் முன்னேற்றம் 21% ஆகவும் உள்ளது.



குழாய் இடல்

ஒள). உள்நாட்டு வங்கி நிதியிடலுடன்கூடிய 3.5 பில்லியன் கருத்திட்டம்

இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில், தற்போதுள்ள விநியோக முறைமைக்கு நீடிப்புகளை வழங்குதல் மற்றும் இடைநிரப்பல்களை மேற்கொள்வதன் மூலம் 11 RSC க்களில் (ஊவா, தெற்கு, வடக்கு, மேல் மத்தி, மேல் வடக்கு, மேல் தெற்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மத்திய மற்றும் சப்பிரகமுவ) உள்ள இணைப்புகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவதாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 3.5 பில்லியனாகும் என்பதோடு, கருத்திட்டத்தின் இறுதியில் எதிர்பார்க்கப்படும் இணைப்புகளின் எண்ணிக்கை 33,250 ஆகும். கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2020 வரை நீடிக்கப்பட்டது. 2019 திசெம்பரில் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 97.6% ஆகுமென்பதோடு நிதியியல் முன்னேற்றம் 69.7% ஆகும்.



சேருநுவர நீர்க் கோபுர நிர்மாணிப்பு

இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்

மாத்தறை குறுகியகால மேம்பாட்டுக் கருத்திட்டம்

மாத்தறை குறுகியகால மேம்பாட்டுக் கருத்திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 300 மில்லியனாகும். மாத்தறை குழும நீர் வழங்கல் திட்டத்தில் நீர் வழங்கல் கொள்ளவை நாளொன்றுக்கு 6,000 க.மீ.களால் மேம்படுத்துவதற்கான அமுலாக்கல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு இதன் பெறுபேறாக நீர் வழங்கலில் மேம்பாடு ஏற்படுமென்பதோடு, பிரதேசத்தில் நீர் வெட்டு நேரம் குறைக்கப்படும். அத்துடன் இக்கருத்திட்டத்தின் கீழ் திஹகொட பிரதேசத்தின் பின்தங்கிய கிராமப் புறங்களிலுள்ள 100 குடும்பங்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்கலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தின் கீழ் தெவிநுவர நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் தலல்லவிலிருந்து பெலியத்த வரை குழாய் இடுதல் நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை திக்வெல்ல நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் திக்வெல்லயில் நைகல குழாய் இடுதல் 18% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

அந்தரகஸ்யாய நிலக் கீழ் நீர்த் தாங்கியிலிருந்து கொன்னோருவ வரை குழாய் இடுதல்

அந்தரகஸ்யாய மற்றும் பந்தகிரிய பிரதேசங்களுக்கு சேவை வழங்குதல் அந்தரகஸ்யாய நீர் வழங்கல் திட்டத்தின் குறிக்கோளாகும் என்பதோடு, எதிர்பார்க்கப்படும் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 12,000 ஆகும். சேவை மேம்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு இத்திட்டத்தின் கீழ் ஒருசில ஒப்பந்தங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கருத்திட்டத்தின் முழுமொத்தப் பௌதீக முன்னேற்றம் 93% ஆகுமென்பதோடு, கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் 62% ஆகும்.

திஸ்ஸமகாராம நீர் வழங்கல் திட்டம்

திஸ்ஸமகாராம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் விரிவாக்கத்துக்கான இக்கருத்திட்டத்தின் குறிக்கோள் நீர் தரத்தை மேம்படுத்துவதாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 393 மில்லியனாகும் என்பதோடு, எதிர்பார்க்கப்படும் நலன்பெறுனர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10,000 ஆகும். இக்கருத்திட்டத்தின் கீழ், காற்றூட்டல் சாதனம், வண்டல் படிவ தாங்கி, இரசாயன அறை மற்றும் தொழிற்பாட்டுக் கட்டடத்தை நிர்மாணித்தல் உள்ளடங்கிய ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது. 2019 இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் முழுமொத்தப் பௌதீக முன்னேற்றம் 53% ஆகுமென்பதோடு, நிதிசார் முன்னேற்றம் 41% ஆகும்.

ரூபா 600 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழான திருகோணமலை விரிவாக்கக் கருத்திட்டம்

திருகோணமலை விரிவாக்க கருத்திட்டத்தின் கீழ் திருகோணமலை பிராந்தியத்துக்கு ரூபா 600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இதில் 2019 ஆம் ஆண்டுக்காக ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 61.81 மில்லியன் செலவிடப்பட்டுள்ள அதேவேளை, 2019 இன் இறுதியில் உள்ளவாறு ரூபா 34.86 மில்லியன் பெறுமதியான கட்டணப் பட்டியல்கள் கைவசம் இருந்தன. 2019 இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 65% ஆகும்.

கேகாலை மீள்குடியமர்த்தல்

2016 ஆம் ஆண்டு காலத்தினுள், கேகாலை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மண் சரிவினால் பாதிக்கப்பட்ட ஏறத்தாழ 2,000 குடும்பங்களுக்கு நீர் வழங்குகின்ற பாரிய ஒரு சவாலை எதிர்நோக்கியது. 2016 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் கேகாலை மாவட்டத்தின் 11 க்கு மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் அக்குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டன. ருஜேஊநுகு இன் நிதி உதவியின் கீழ் தீவிர மீள்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் மண் சரிவினால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்குடியமர்த்தல் கிராமங்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்குவதற்காக ரூபா 455 மில்லியன் அளிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம், 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 15 நீர் வழங்கல் திட்டங்களின் நிர்மாணிப்பை கருத்திட்டம் உள்ளடக்குகின்றதோடு, நிதி ஒதுக்கீடு ரூபா 99.6 மில்லியனாகும்.

தங்கொட்டுவ நீர் வழங்கல் கருத்திட்டம்

தங்கொட்டுவ நீர் வழங்கல் திட்டமானது 6,000 இணைப்புகளுக்கு வசதியேற்பாடு செய்யம் பொருட்டு நாளொன்று 4,000 க.மீ. சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி சேய்கின்ற தற்போதுள்ள ஒரு நீர் வழங்கல் திட்டமாகும். புதிய கருத்திட்டமானது, 500 புதிய இணைப்புகளை உருவாக்குகின்ற சாக்கடை சுததிகரிப்புடன் கூடியதாக நீர் வழங்கல் திட்டத்தின் கொள்ளளவை மேம்படுத்தும். இக்கருத்திட்டத்துக்கான நீர் மூலமாக தற்போதுள்ள மாஓயா உள்வாங்கு நிலையம் பயன்படுத்தப்படும். 450 க.மீ. கொள்ளளவைக் கொண்ட ஒரு நில நீர்த் தடாகம், பின்னடைவு நீரோட்ட மீட்புத் தாங்கி, சாக்கடை தேக்கிவைப்புத் தாங்கி மற்றும் சாக்கடை நீரேரி ஆகியன நிர்மாணிக்கப்பட உள்ளன. விநியோக விஸ்தரிப்புக்கு வசதி செய்யும் பொருட்டு குழாய்கள் இடப்பட வேண்டியுள்ளதோடு பம்பிகள் பொருத்தப்பட வேண்டியுள்ளன. கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபா 200 மில்லியனாகும். 2019 இறுதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 30% ஆக உள்ள அதேவேளை எவ்வித நிதிசார் முன்னேற்றமும் காணப்படவில்லை.

RSC (W-S) இன் தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் ஆதன முகாமைத்துவக் கொள்ளளவை மேம்படுத்தல்

இக்கருத்திட்டம் RSC – மேல் தெற்கில் மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டமானது ரூபா 527 மில்லியன் நன்கொடை (JICA) மற்றும் ரூபா 40 மில்லியன் உள்நாட்டு நிதி ஆகும். கருத்திட்ட காலம் 2018 செப்தெம்பர் தொடக்கம் 2020 ஆகஸ்ட் வரையிலாகும்.

கருத்திட்டம் பிரதானமான மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. குழாய்களின் ஆதன முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தல் (வெளியீடு – 1), இது முடிவுறுத்தப்பட்டுள்ளது: கசிவுக் கட்டுப்பாட்டை மேம்படுத்தல் (வெளியீடு – 2) மற்றும் கசிவுக் கட்டுப்பாட்டுக்கான நடைமுறைப் பயிற்சிக்கான பயிற்சி அளிப்பவர்களை பயிற்றுவித்தல் (TOT) (வெளியீடு – 3).

வெளியீடு 2 இன் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் யாவையெனில், முன்னோடி வலயத்தில் கசிவுக் கட்டுப்பாட்டுக்கான கொள்ளளவை மேம்படுத்தல், புதிய தொழில்நுட்பம் மற்றும் கருவிகளை உள்வாங்குதல் உள்ளிட்ட அறிவுப் பரிமாற்றம், மற்றும் தேவையான வழிகாட்டல்களை இணைத்து நீர் இழப்பு முகாமைத்துவக் கைநூலைத் தயாரிப்பதன் ஊடாக தே.நீ.வ.வ.ச.க்கான ஒழுங்கான வருவாயற்ற நீர் (NRW) முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தல் ஆகியனவாகும்.

வெளியீடு 3 இன் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் யாவையெனில், குழாய் பொருத்தல்கள் மற்றும் கசிவு கண்டுபிடிப்பு பயிற்சிச் சாலையை நிர்மாணித்தல் மற்றும் தே.நீ.வ.வ.ச. பணியாளர்களுக்கு கசிவு கண்டுபிடிப்பு தொடர்பில் பயிற்சி வழங்கல் ஆகியனவாகும் (உள்ளீடு 3 நிறைவு செய்யப்பட்டுள்ளது).

கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 37% மற்றும் 45% ஆகும்.

பண்டாரவளை நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம்

உமா ஓயா பலநோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் சுரங்க நிர்மாணிப்பின் போது, பிரதான சுரங்க நீர்ப் பாதையில் நீர் உட்புகுதல் ஏற்பட்டதோடு, பண்டாரவளை மற்றும் எல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளின் பல கிராமங்களில் பல கிணறுகளில் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதோடு சில முற்றாக வற்றியுள்ளன. இங்கு ஏறத்தாழ 2000 குடும்பங்கள் குடிநீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தகைய பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் நீர் வழங்கல் வசதிகளை அதிகரிக்கச் செய்வதற்காக இக்கருத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கருத்திட்டத்தின் பிரதானமான ஆக்கக்கூறுகள், தியதலாவுக்கான மேலதிக உள்வாங்கு பம்பிகள் மற்றும் ஊக்குவிப்புப் பம்பிகளை வழங்குதல் மற்றும் பண்டாரவளை நீர் வழங்கல் திட்டத்தின் தற்போதுள்ள அனுப்பல் மற்றும் விநியோக முறைமையை மேம்படுத்தல் ஆகியனவாகும். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 97% ஆகின்ற அதேவேளை நிதிசார் முன்னேற்றம் 95.51% ஆக காணப்பட்டது.

மடு தேவாலயத்தில் பக்கதர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான நீர் வழங்கல் திட்டம்

மடு தேவாலயம் மற்றும் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு நீர் வழங்குவதற்காக இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் மூலம் நிதியிடப்படுகின்ற, மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 790.62 மில்லியனாகும். நலன்பெறுனர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை 12,600 ஆகும். பிரதான அனுப்பல் குழாய்க்கான வழங்கல் மற்றும் இடுதல், நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி வடிவமைப்பு 2019 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

குழாய்வழிக் கருத்திட்டங்கள் (நீ.வ.க.)

உலக வங்கி நிதியளிப்பின் கீழான றுயளுளுஜீ கருத்திட்டத்தின் ஊடாக தே.நீ.வ.வ.ச. பிரதான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றதோடு, இது 2019 சனவரி 08 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2020 ஜுன் மாதத்தில் நிறைவு செய்யப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கற்கையானது இலங்கையில் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவை வழங்கலில் காணப்படுகின்ற முக்கியமான இடைவெளிகளை அடையாளம்காணும் என்பதோடு, நாட்டினுள் எதிர்பார்க்கப்படுகின்ற தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை கருத்திற்கொள்வதன் மூலம் இத்துறையில் மூலோபாய ரீதியில் முதலீடு செய்வதற்கான தகவல்கள், கருவிகள் மற்றும் விபரங்களை வழங்கும்.

நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையிலுள்ள இடைவெளிகளை நிரப்பும் பொருட்டு அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்கள் ஐந்து வகைகளின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்படும்: (i) பாதிக்கப்படக்கூடிய பிரிவுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு தற்போதுள்ள பாவணையாளர்களுக்கான சேவைகளின் அளவையும் தரத்தையும் உறுதி செய்வதன் மூலம் இருப்பிலுள்ள சேவை மட்டத்தை மேம்படுத்தல். (ii) உற்பத்திக் கொள்ளளவை முழுமையாகப் பயன்படுத்தும் பொருட்டு இணைப்புகளை மேம்படுத்துவதற்காக நடைபெற்று வருகின்ற கருத்திட்டங்கள் மற்றும் நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் இடைநிரப்பல் மற்றும் விநியோக விஸ்தரிப்பு. (iii) தற்போதுள்ள முறைமைகளின் சேறு மற்றும் சக்தி சேமிப்பு போன்ற கருத்திட்டங்களின் வியாபார வினைத்திறன் மேம்பாடு. (iv) வருமானம் ஈட்டித்தருகின்ற பாவணையாளர் பிரிவுக்கான இணைப்புகளை வழங்குவதன் மூலம் வருமானத்தை மேம்படுத்தல் (அரசாங்க மற்றும் சபை). (v) அரசாங்க மற்றும் தனியார் துறை முதலீட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்/ நிகழ்ச்சிநிரலுக்கு உதவுகின்றதான புதிய கருத்திட்டங்கள்.

மேலுள்ள அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொண்டு, 2020 ஜுன் மாத இறுதியளவில் மேற்படி பிரதான திட்டக் கற்கையின் பெறுபேறாக அமுல்படுத்தல் திட்டத்துடன் கூடியதான புதிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு கருத்திட்டங்களின் பட்டியல் எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் (நீ.வ.க.)

2019 ஆண்டு காலத்தினுள் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் (P&D) பிரிவு வெலிவிட்ட நீர் வழங்கல் திட்டம், மேற்குப் பிராந்திய டெக் சிற்றி அபிவிருத்திக் கருத்திட்டம் (மேற்குப் பிராந்திய பெரும் நகர திட்டம் உள்ளடங்கலாக), மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள் அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை நாளொன்றுக்கு 50,000 க.மீ. களால் விஸ்தரிக்கச் செய்தல், கந்தான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கொள்ளளவு மேம்பாடு, களுத்துறை நீர் வழங்கல் விஸ்தரிப்புக் கருத்திட்டத்தின் முன்-சாத்தியவளக் கற்கை, தலைமை அலுவலகக் கட்டடங்களின் புதுப்பித்தல்.. மேம்பாடு, சீதாவக்க ஏற்றுமதி மேம்பாட்டு வலயத்தில் வடிகட்டல்களின் புனரமைப்பு, களனி வலது கரை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான சுத்திகரிக்கப்பட்ட பிரதான நீர் அனுப்பல் குழாய், முளங்காவில் நீர் வழங்கல் திட்டத்துக்கான (உலக வங்கி நிதியின் கீழ்) திருத்தப்பட்டவாறான விடயப்பரப்பு, நாளொன்றுக்கு 4,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட கிளிநொச்சி புதிய நீர் வழங்கல் கருத்திட்டம் (உலக வங்கி நிதியத்தின் கீழ்), புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு, தெஹியத்தகண்டிய நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு, மகா ஓயா நீர் வழங்கல் திட்டத்தின் சாக்கடை சுத்திகரிப்பு வசதியின் மேம்பாடு, கவரம்மன - போகஹகும்புர நீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்ப பரிசோதனைகள், பத்தேகம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்திற்கான PAC மற்றும் சபை அங்கீகாரத்தைப் பெறுதல் ஆகிய திட்டமிடல் பணிகளில் ஈடுபட்டிருந்தது.

P&D பிரிவானது, ஜப்பிலி முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் (சிவில் மற்றும் M&E தலைமை அலுவலக கட்டடங்களின் புதுப்பித்தல்/ மேம்பாடு, சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட நீர் அனுப்பல் பிரதான குழாய்க்கான விபரமான வடிவமைப்பு, முல்லைத்தீவு நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான (உலக வங்கி நிதியளிப்பின் கீழ்) துணை விடயங்கள், முளங்காவில் நீர் வழங்ல் திட்டத்துக்கான (உலக வங்கி நிதியின் கீழ்) திருத்தியமைக்கப்பட்ட வடிவமைப்பு, நாளொன்றுக்கு 4000 க.மீ. கொள்ளவு கொண்ட கிளிநொச்சி புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு, நாளொன்றுக்கு 12,000 க.மீ. கொள்ளளவு கொண்ட வழமையான நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, லுனுகம்வெஹர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்திற்கான நாளொன்றுக்கு 36,000 க.மீ. கொள்ளளவு கொண்ட உள்வாங்கு நிலையம் மற்றும் களஞ்சிய நீர்த் தேக்கம் (சிவில் மற்றும் M&E), கொலொன்னாவ ஊக்குவிப்புப் பம்பி நிலையம், BOI வலயத்துக்கான நாளொன்றுக்கு 5,500 க.மீ. கொள்ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, தலைவர்/ பொது முகாமையாளர்/ கணக்காய்வு/ சேர்வர்/ தகவல் தொழில்நுட்ப பிரிவுகளுக்கான உத்தேச அலுவலக வளாகங்கள், HR மற்றும் கணக்காய்வு பிரிவுகளுக்கான வலுசக்தி மற்றும் ஒளியூட்டல், தெலவலவில் உள்ள புதிய யப்பான் கருத்திட்ட அலகுக்கான குளிரூட்டல் முறைமை, தலைமை அலுவலகத்திலுள்ள P&D பிரிவுக்கான வலுசக்தி மற்றும் ஒளியூட்டல், எஹலியகொட நீர் வழங்கல் கருத்திட்டம், மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மேம்பாடு, கதிர்காமத்திற்கான பொறியியலாளர் மதிப்பீடு, தலவக்கலே மற்றும் ருவன்வெல்ல உள்ளூராட்சி சபைகளுக்கான சாக்கடை சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான முன் சாத்தியவள அறிக்கை மற்றும் M&E வடிவமைப்பு ஆகிய விபரமான வடிவமைத்தல் பணிகளில் ஆண்டினுள் ஈடுபட்டிருந்தது.

2019 ஆம் ஆண்டினுள் தலைமை அலுவலக P&D பிரிவு மேலும், கம்பஹா, அத்தனகல்ல, மினுவன்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம், களனி வலது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் 11, கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம், யட்டிமஹன நீர்த் தேக்கத்தின் சாத்தியவளக் கற்கை, வீஓயா நீர்த் தேக்கம் மற்றும் காலநிலை நம்பகத்தன்மை மேம்பாட்டு கருத்திட்டத்தின் (CRIP) கீழான களனி ஆறு உவர் நீர்த் தடை, அம்பதலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் வலுசக்தி சேமிப்புக் கருத்திட்டம், ஒருகொட வத்தை தொடக்கம் கடுவெல வரை அனுப்பல் மற்றும் விநியோக பிரதான குழாய்களை மாற்றீடு செய்தல், கொழும்பு மாவட்டத்தின் கிழக்கு நகரங்களின் நீர் வழங்கல் கருத்திட்டம் (பொதி 1, 2 மற்றும் 3), கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், அழுத்தகம, மத்துகம மற்றும் அகலவத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், பொத்துஹெர, பொல்கஹவெல, அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், தெதுரு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம், மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம், தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம், ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம், ஹம்பெகமுவ நீர் வழங்கல் திட்டம், கிரம கட்டுவன ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் ஆகியவற்றின் வடிவமைப்பு மீளாய்வுப் பணிகளில் மற்றும் TEC மற்றும் PAC அறிக்கைகளின் மீளாய்வில் ஈடுபட்டது.


பெறுகைப் பணிகள் என்ற வகையில் இப்பிரிவு, எஹலியகொட நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 01, பொதி 1 மற்றும் 11 இன் பெறுகைப் பணியயில் ஈடுபட்டது. ஆவணப்படுத்தல் பணிகளின் கீழ், ஒரு புதிய தரநியம விலைக் கேள்வி ஆவணம் (SBD) தயாரிக்கப்பட்ட அதேவேளை 62 SBD க்கள் திருத்தியமைக்கப்பட்டன. தயாரிப்பாளர்களின் முன்தகைமை பற்றிய நடவடிக்கைகளில், DI குழாய் தயாரிப்பாளர்களின் ஈராண்டுக் கணக்காய்வு பற்றிய மதிப்பீடு மற்றும் 02 DI குழாய் தயாரிப்பாளர்கள் அதேபோன்று 03 DI வால்வு அறை மூடி தயாரிப்பாளர்களின் மதிப்பீடுகள் 2019 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டன. மேற்படி ஆவணப்படுத்தல் உப பிரிவானது, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் விலைக் கேள்வி ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கான மற்றும் பெறுகைகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தரநியம விலைக் கேள்வி மீளாய்வுக் குழுவின் செயலகமாகவும் செயற்படுகின்றது.

ஆண்டினுள், 175 அளவுப் பத்திரங்கள், 22 பொறியியலாளர் மதிப்பீடுகள், 2019 ஆம் ஆண்டுக்கான நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக்கான வருடாந்த அறவீட்டுப் புத்தகம் ஆகியன தயாரிக்கப்பது. RSC க்களின் 04 மாற்றங்கள், 01 செலவு முன்மொழிவு, அத்துடன் 05 செலவு விபரங்கள் ஆகியவற்றையும் கையாண்டுள்ளது. QS பிரிவின் மூலம் 08 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (மதிப்பீடு மற்றும் CESMM3 க்கான) நடத்தப்பட்டுள்ளதோடு விலை தொடர்பிலான பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டது.

தற்போதுள்ள சாக்கடைத் திட்டங்கள்

மாகாணம்/பி.சே.நி.	சாக்கடைத் திட்டங்களின் எண்ணிக்கை
மத்திய	01
கிழக்கு	00
வட மத்திய	00
வட மேல்	01
வடக்கு	00
சப்பிரகமுவ	00
தென்	01
ஊவா	01
மேல் மத்திய	07
மேல் வடக்கு	03
மேல் தெற்கு	01
மொத்தம்	**15***


* இது கொழும்பு மாநகர சபையினால் கையாளப்படுகின்ற சாக்கடைத் திட்டத்தையும் தே.நீ.வ.வ.ச.யினால் கையாளப்படுகின்ற திட்டங்களையும் உள்ளடக்குகின்றது.



நடைமுறையிலுள்ள சாக்கடைக் கருத்திட்டங்கள்

நகர அபிவருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் நிறைவேற்றப்படும் பாரிய சாக்கடைக் கருத்-திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு: விரிவாக்கத்தின் கீழ் இருந்த வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்



	கருத்திட்டத்தின் பெயர்	நிதியளிப்பு முகவராண்மை
1.	இரத்மலான.:மொரட்டுவை கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் கட்டம் 1 படிமுறை 2	AFD
2.	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவம்	JICA
3.	கொழும்பு பெரும்பாக பிரதேசத்தில் சாக்கடை இணைப்புகளை அதிகரிக்ச் செய்வதற்கான பீழுடீயு கருத்திட்டம்	உலக வங்கி
4.	குருணாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப் புரவேற்பாடு	சீனா
5.	நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (ளுர்ஐகுவு) கருத்திட்டம்	AFD

வெளிநாட்டு நிதியளிப்புச் சாக்கடைக் கருத்திட்டங்கள்

1.) இரத்மலானை / மொரட்டுவ கழிவு நீர் அகற்றல் கருத்திட்டம் - கட்டம் 1 படிநிலை 2

இரத்மலானை/ மொரட்டுவ பிரதேசத்தில் தற்போதுள்ள சேகரிப்பு வலையமைப்பு உள்ளடக்கத்தை விஸ்தரிப்பதற்கு இரத்மலானை.. மொரட்டுவ கழிவு நீர் அகற்றல் கருத்திட்டம் - கட்டம் 1, படிநிலை 2 திட்டமிட்டுள்ளது. கருத்திட்ட விடயப்பரப்பானது, பம்பி நிலையங்களையும், தற்போதுள்ள பம்பி நிலையங்களின் மேம்பாட்டையும், கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியையும் உள்ளடக்கியதான புதிய சேகரிப்பு வலையமைப்பை உள்ளடக்கியுள்ளது. கருத்திட்டம் வடிவமைப்புக் கட்டத்தில் உள்ளது. கருத்திட்டத்தின் தற்காலிக செலவு மதிப்பீடு ரூபா 16,073 மில்லியனாகும் என்பதோடு, 2050 இல் நலன்பெறுனர்கள் எண்ணிக்கை 170,890 ஆகும். 2019 திசெம்பரில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 2.29% மற்றும் 1.40% ஆகும். இலங்கை அரசாங்கத்திற்கும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மைக்கும் (AFD) இடையிலான கடன் வசதி உடன்படிக்கை 2019 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இது தே.நீ.வ.வ.ச. பொறியியலாளர்களால் வடிவமைக்கப்பட்ட முதலாவது பாரிய சாக்கடைக் கருத்திட்டமாகும் என்பதோடு, இதனூடாக வெளிநாட்டு ஆலோசகர்களை ஆட்சேர்க்காது எதிர்காலத்தில் இத்தகைய வடிவமைத்தல்களை நிறுவனத்தினாலேயே பொறுப்பேற்பதற்கான இளம் பொறியியலாளர்கள் குழுவொன்றை எமக்கு அபிவிருத்தி செய்ய முடியும்.

பொதுமக்கள் மற்றும் காணி உரிமையாளர்களின் எதிர்ப்பு காரணமாக காணி கொள்ளலில் ஏற்பட்ட தாமதம் மண் பரிசோதனைப் பணிகளைப் பாதித்துள்ளது.

2.) கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்



வண்டல் படிமத் தாங்கி

கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் (KCWMP) 2030 ஆம் ஆண்டில் 55,000 சனத்தொகையினருக்கு சேவையாற்றுகின்ற மொத்தம் 733 ஹெக்றயார் உள்ளடக்கத்தைக் கொண்டதாகும். கருத்திட்ட விடயப்பரப்பானது, கண்டி வாவி, மகாவலி ஆறு மற்றும் கண்டி நகரிலுள்ள நீரூற்றுக்களின் நீர் தரத்தை மேம்படுத்துதலும், இதன் மூலம் அதிக மக்கள் தொகையைக் கொண்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் துப்புரவேற்பாட்டு நிலைமையை மேம்படுத்துதலுமாகும். இதனை அடைவதற்காக கருத்திட்டமானது, கழிவு நீர் சேகரிப்பு முறைமை, நாளொன்றுக்கு 14,000 க.மீ. கொள்ளளவைக் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, கழிவு அகற்றல் முறைமை ஆகியவற்றை நிர்மாணிக்கும் என்பதோடு, குறைந்த வருமானம் பெறும் பிரதேசங்களுக்கான துப்புரவேற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்யப் படுவதை தொடர்ந்து வீட்டு இணைப்புகள் வழங்கப்படும். JICA பிரதானமான நிதியிடும் முகவராகும் என்பதோடு, மொத்த கருத்திட்ட செலவு ரூபா 22.6 மில்லியனாகும். 2019 திசெம்பரில் உள்ளவாறு 54% நிதிசார் முன்னேற்றம் மற்றும் 73% பௌதீக முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

பாதகமான காலநிலை, மலைப்பாங்கான பகுதிகள் வேலைகள் தாமதமடைவதற்குக் காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும் முன்னுரிமைப்படுத்திய வலயங்களின் பொறுப்பளித்தல் 2020 ஏப்பிரல் ஆரம்பத்தில் உள்ளவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதோடு கருத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்தல் 2021 இறுதியளவில் எதிர்பார்க்கப்படுகின்றது.

3.) கொழும்பு பெரும்பாக (GC) பிரதேசத்தில் சாக்கடை இணைப்புகளை அதிகரிக்கச் செய்வதற்கான GPOBA (உலக வங்கி நிதியிடல்) கருத்திட்டம்.

பெறுபேறு அடிப்படையிலான உதவிகள் தொடர்பிலான உலக பங்காண்மை (GPOBA) கருத்திட்டமானது, உலக வங்கி, இலங்கை அரசாங்கம், தே.நீ.வ.வ.ச. மற்றும் நலன்பெறுனர்களால் நிதியிடப்படுகின்ற ஒரு முன்னோடிக் கருத்திட்டமாகும். இக்கருத்திட்டத்தின் விடயப்பரப்பானது, ஐந்து விதத்திலான பெறுபேறுகளின் கீழ் சாக்கடை இணைப்புகள்/ துப்புரவேற்பாட்டு மேம்பாடுகளை வழங்குவதன் மூலம் பெறுபேறு அடிப்படையிலான அணுகுமுறையின் ஊடாக, மேம்படுத்தப்பட்ட துப்புரவேற்பாட்டு முறைமை மற்றும் சேவைகளுடன் குறைந்த வருமானம் பெறும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கச் செய்தலும், வறிய குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட துப்புரவேற்பாட்டு சேவைகளை விநியோகிப்பதற்கான வினைத்திறன்மிக்கதொரு பொறிமுறையாக முன்னோடி OBA என்றவாறு செயற்படுதலும் ஆகும். 96% க்கும் அதிகமான வெளிநாட்டு நிதியளிப்பாகிய அமெரிக்க டொலர் 4,894,840.00 தொகையை பயன்படுத்தி 8,345 குடும்பங்களுக்கு (41,725 சனத்தொகையினர்) நன்மையளிக்கின்ற வகையில் 2019.03.31 ஆம் திகதி கருத்திட்டத்தின் பௌதீக வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு மேற்பார்வை வேலைகள் தே.நீ.வ.வ.ச. யின் மூலம் மேற்கொள்ளப்பட்டதோடு, கருத்திட்டம் பிரதானமான 7 ஒப்பந்தங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக அமுலாக்கப்பட்ட பிரதேசத்தில் குறிப்பிடத்தக்களவு சுற்றாடல் மேம்பாடு அடையப்பெற்றுள்ளது. தற்போதுள்ள நீர்நிலைகளின் நீரின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, கழிவுநீர் முகாமைத்தும் மற்றும் துப்புரவேற்பாட்டுடன் தொடர்புடைய சகப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. நுளம்பு பெருகின்ற இடங்கள் குறைக்கப்பட்டுள்ளதோடு, பொதுவாக கருத்திட்ட பிரதேசத்தில் பொதுச் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.



லுனாவ சமுத்ர சக்தி வீடமைப்புத் திட்டத்துக்கான லுநுமுயுவுளு

4). நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT) கருத்திட்டம்

நீர்கொழும்பு, காலி - உனவட்டுன மற்றும் களனிய - பேளியகொட ஆகிய தெற்கு மற்றும் மேற்குக் கரையோரங்களில் வசிக்கும் 200,000 மக்களுக்கு கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் SHIFT கருத்திட்டத்தின் நோக்காகும். நீர்கொழும்பு நகரத்திற்கான கழிவுநீர் அகற்றல் உட்கட்டமைப்பு வசதியை வழங்குதல், சாத்தியவளக் கற்கைகள், காலி - உனவட்டுன மற்றும் களனிய - பேளியகொட பிரதேசங்களுக்கான விபரமான வடிவமைப்பு மற்றும் கேள்விப்பத்திர ஆவணங்களை செய்தல், கருத்திட்ட பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதற்கான வறியோர் சார்பான நிதியம் ஆகியவற்றை SHIFT இன் 1வது கட்டம் உள்ளடக்குகின்றது. இதற்கு மேலதிகமாக, நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறைசார் நிறுவன வரைச்சட்டகத்தை மேம்படுத்துவதற்கான சிபாரிசுகளை வழங்குவதற்கு தொழில்நுட்ப உதவி (TA) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குதல், அதன் நிலைபேறான நிதியிடலை உறுதிசெய்தல் மற்றும் சாக்கடை முகாமைத்துவத் திறன் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றையும் இது வழங்கும்.

SHIFT முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டத்துக்கான நிதியிடல் அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவராண்மையின் (AFD) ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, AFD ஊடாக ஐரோப்பிய சங்கத்தினால் TA ஆக்கக்கூறுகளுக்கான நிதியிடப்படும். மொத்த கருத்திட்ட செலவு ரூபா 21,540 மில்லியனாகும். மேற்படி அனைத்து பகுதிகளுக்குமான சாத்தயவளக் கற்கை அறிக்கையை மற்றும் நீர்கொழும்புக்கான ஆரம்ப வடிவமைப்பு வரைவு அறிக்கையை வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை (DSC) சமர்ப்பித்துள்ளது. நீர்கொழும்புக்கான விபரமான வடிவமைப்பு நடைபெற்று வருகின்றது. 2019 திசெம்பரில் உள்ளவாறு 4.1% பௌதீக மற்றும் 2.8% நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.



திறப்பு விழா

திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை)

2019 ஆம் ஆண்டு காலத்தினுள், கடந்த ஆண்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட, கல்முனை, ஏறாவூர் மற்றும் பொலனறுவை நகர பிரதேசங்களுக்கு குழாய் கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான சாத்திய வளக் கற்கைகள் நிறைவு செய்யப்பட்டன. கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவிலிருந்து (PAC) அங்கீகாரம் பெறப்பட்டதோடு, அமைச்சின் ஊடாக NPD இசைவைப் பெற்றுக்கொள்வதற்காக முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. களுத்துறை மற்றும் அழுத்கம.். பேருவளை நகர பிரதேசங்களான கரையோரப் பகுதிக்கு குழாய் கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான புதிய சாத்திய வளக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வத்தளை, கடுவெல மற்றும் திருகோணமலையின் உத்தேச கருத்திட்ட பிரதேசங்களில், கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான காணிகளை அடையாளம்காணலுடன் கூடியதாக சாத்தியவளக் கற்கைகளுக்கான பணியகக் கற்கைகள் ஆரம்பிக்கட்டுள்ளன. ஆண்டினுள் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு (சாக்கடை) பிரிவானது, பெரும் நகர அமைச்சின் மூலோபாய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட, அனுராதபுரம் நகரத்தின் கழிவுநீர் முகாமைத்துவத்துக்கான AFD யினால் நிதியிடப்பட்ட சாத்தியவளக் கற்கையை மேற்பார்வை செய்தது. பதுளை மாவட்டத்துக்கான உலக வங்கியின் மூலம் நிதியளிக்கப்படுகின்ற துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் (SEP) கருத்திட்டத்தின் திட்டமிடல் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, WaSSIP கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய சாத்தியவளக் கற்கைக்கான TRO நிறைவு செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டினுள், WaSSIP கீழ் அமுல்படுத்தப்பட வேண்டிய சாக்கடை சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கான திட்டமிடல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதோடு, இதன் கீழ் மொனறாகல, கொடகவெல, வெலிகெபொல பிரதேச சபைகளுக்கான இயந்திரமய சாக்கடை சுத்திகரிப்புப் பொறித்தொகுதி வடிவமைக்கப்பட்டது. மேலும், தலவாக்கலை (நுவரெலியா மாவட்டம்), பதுளை, பண்டாரவெல, எல்ல மற்றும் ஹட்டன் பிரதேச சபைகளுக்கான இயந்திரமய சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதி வடிவமைப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

கல்கிசை சாக்கடை பம்பி நிலையத்தில் சாக்கடை இறக்கத்துக்கான மணல்துகள் அகற்றல் முறைமையின் வடிவமைப்பு: மற்றும் துர்வாடைக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிஎவமைப்பு, சொய்ஸாபுர கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான மிருதுவான திறைக்கான உயர்த்தல் ஏற்பாடு மற்றும் மிருதுவான மற்றும் சொரசொரப்பான திறைக்கான மேலுறை ஆகியவற்றின் வடிவமைப்பும் நிறைவு செய்யப்பட்டது. மஹரகம அபேக்ஷா ஆஸ்பத்திரியின் கழிவுநீர் அகற்றல் மேம்பாட்டின் கீழ், அயடின் சிகிச்சை வாட்டின் புதிய நீடிப்பு முன்மொழிவுக்கான தாமதமாக்கல் தாங்கியின் வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பு வரைதல்கள் CEA மற்றும் அணுசக்தி ஒழுங்குமுறையாக்கல் ஆணைக்குழுவின் இணைப்பாக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

குழாய்வழியிலான பாரிய சாக்கடைக் கருத்திட்டங்களுக்கான EIA/IEE கற்கைகளின் ஆவணப்படுத்தல், கேள்விப்பத்திரம் கோரல் மற்றும் நிறைவேற்றல் ஆகியன P&D (சாக்கடை) பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. இதன் கீழ், தெஹிவளை – கல்கிசை, சிலாபம் - புத்தளம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே கழிவுநீர் அகற்றல் கருத்திட்டங்களுக்கான EIA 2019 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது.

குழாய்வழி கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டங்களின் காணி கொள்ளலின் கீழ் தெஹிவளை – கல்கிசை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, மாத்தறை, சிலாபம் - புத்தளம், பதுளை, கம்பஹா, அழுத்கம.். பேருவளை, களுத்துறை, பொலனறுவை, காத்தன்குடி, மட்டக்களப்பு, கல்முனை மற்றும் ஏறாவூர் கழிவுநீர் அகற்றல் கருத்திட்டங்களுக்கான அடையாளம்காணல் மற்றும் காணி கொள்ளல் வேலைகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பம்பி நிலையத்துக்கான காணி கொள்ளல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான செயலாற்றுகை

2020 மற்றும் 2021 காலகட்டத்துக்கான எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான செயலாற்றுகை

நீர் வழங்கல் மற்றும் சாக்கடை உள்ளடக்கம்

	உண்மை		திட்டமிடப்பட்ட
	2018	2019	2020
சனத்தொகை (மதிப்பிடப்பட்ட)	21,670,000	21,886,700	22,105,567
குழாய் மூலமான நீர் வழங்கல் உள்ளடக்கம் (சனத்தொகை)	10,943,950	11,337,311	12,162,465
தே.நீ.வ.வ.ச. குழாய் மூலமான நீர் வழங்கல் இணைப்புகளின் உள்ளடக்கம் (%)	40.1	41.5	44.8
முழுமொத்தமான குழாய் மூலமான நீர் வழங்கல் இணைப்புகளின் உள்ளடக்கம் (%)	50.5	51.8	55.0
குழாய் மூலமான சாக்கடை உள்ளடக்கம்	447,503	453,055	496,669
குழாய் மூலமான சாக்கடை உள்ளடக்கம் (%)	2.06	2.07	2.25

எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பான நீர் வழங்கல் உள்ளடக்கத்துக்கான அணுகுதல்

	உண்மை%		திட்டமிடப்பட்ட %
	2018	2019	2020
மொத்த குழாய் மூலம்	50.5	51.8	55.0
தே.நீ.வ.வ.ச. குழாய் மூலம்	40.1	41.5	44.8
பாதுகாக்கப்பட்ட குழிக் கிணறுகள்	36.4	36.4	36.4
குழாய்க் கிணறுகள் / கைப்பம்பிகள்	3.2	3.2	3.2
மழை நீர் சேரிப்பு மற்றும் ஏனையவை	0.5	0.5	0.5
பாதுகாப்பான நீருக்கான அணுகுதல் முழுமொத்தம்	90.6	91.9	95.1

நிலைபேறானதன்மை மற்றும் அவசரநிலை பதிலிறுப்பு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நாளாந்த செயற்பாடுகள் இயல்பாகவே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் (SDG), "அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவேற்பாட்டின் கிடைப்பனபு மற்றும் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதி செய்தல்" எனும் 6வது இலக்கை யதார்த்தமாக்குவதனை திசைமுகப்படுத்தியிருந்த அதேவேளை இலங்கையினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக தே.நீ.வ.வ.ச. தேசிய மட்ட செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டது. மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளிலிருந்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு மாற்றமடைகின்ற வகையில் தே.நீ.வ.வ.ச. அப்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், 2030 ஆம் ஆண்டாகின்றபோது அனைவருக்கும் பாதுகாப்பானதும் மலிவானதுமான குடிநீருக்கான உலகளாவியதும் நியாயமானதுமான அணுகுதலை அடையப்பெறுதல் எனும் இலக்கு 6.1: அனைவருக்கும் போதியளவானதும் நியாயமானதுமான துப்புரவேற்பாடு மற்றும் ஆரோக்கியத்துக்கான அணுகுதலை அடையப்பெறுதல் எனும் இலக்கு 6.2: மற்றும் திறந்த கழிப்பிடங்களை முடிவுறுத்தல் மற்றும் பெண்கள், சிறுமிகள் மற்றும் ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய நிலையிலுள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் ஆகியவற்றை கண்காணித்தல் மற்றும் அடைவுகள் பற்றி அறிக்கையிடும் பொருட்டான தேசிய சுட்டிகளை அபிவிருத்தி செய்வதிலும் இலக்குகளை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தது.

குறிப்பிட்ட SDG ஐ நோக்கியதாக தே.நீ.வ.வ.ச. யின் கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் திசைமுகப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அடிப்படை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் தொடர்பில் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேற்படி விசேட குழுவின் மூலம் சிபாரிசு செய்யப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்பட்டதோடு, 2019 ஜூன் மாதத்தில் தரப்பினர்களால் செல்லுபடியாக்கப்பட்டது. எதிர்கால தொழிற்பாட்டு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் குறித்த செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல் தொடர்பிலும் அதில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான உரிய நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் தே.நீ.வ.வ.ச. தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2019 ஆம் ஆண்டு காலத்தினுள், தே.நீ.வ.வ.ச. அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் சேர்ந்து மேற்படி நோக்கத்துக்காக தரவுகளைச் சேகரிப்பதற்கான ஒரு வினாக்கொத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் சில பேச்சுவார்த்தைகளையும் நடத்தியது.

2019 ஆம் ஆண்டில் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பிலான நிலைபேறானதன்மை மற்றும் அவசரநிலை பதிலிறுப்புகளில் முனைப்புடன் ஈடுபடுவதை தே.நீ.வ.வ.ச. தொடர்ந்தும் மேற்கொண்டதோடு, அரசாங்க நிறுவனங்களின் மூலம் நடத்தப்பட்ட பல செயலமர்வுகளுக்கும் பங்களிப்புச் செய்தது. அவை பற்றிய விபரங்கள் வருமாறு.

i. இலங்கை தன்னார்வ தேசிய மீளாய்வுக்கான தேசிய பல்தரப்பினர் ஆலோசனை செயலமர்வு - இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடம், 2018.04.24

ii. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG) 6 மேற்பார்வை – தரப்பினர்கள் ஆலொசனைச் செயலமர்வு – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு – நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர்கூடம், 2018.04.26

iii. தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படவுள்ள குடும்ப மதிப்பீட்டுக்கான நீர் தரப் பரிசோதனை தேவைப்பாடுகள் - SDG 6 இலக்கு 6.1 - நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சின் கேட்போர்கூடம், 2018.10.23

iv. SDG 6 சுட்டி குழுக் கூட்டம் - நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு, 2018.08.17

v. SDG க்கான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறை தயார்நிலை, பிரதான தரப்பினர்களுடனான கூட்டம் - அப்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சு, 2018.03.28

vi. SDG 6.1 மற்றும் 6.2 இலக்குகளை அடைவதற்கான பாதுகாப்பாக முகாமைசெய்யப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாடு தொடர்பிலான உலக கண்காணிப்பு முறைமை பற்றிய WHO மற்றும் UNICEF இன் இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட இணையத்தின் ஊடான கருத்தரங்கு - நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கேட்போர்கூடம், 2019.05.28

vii. SDG 6 இலக்குகள் - நீர் மற்றும் துப்புரவேற்பாட்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான தேசிய இலக்குகளை அமைத்தல் - நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் கேட்போர்கூடம், 2019.06.26

viii. SDG – 6 சுட்டிகள் - தொடர்பில் WHO / UNICEF இணைந்த கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்ட உதவியுடனான செயலமர்வு – வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல், 2019.07.23


ix. அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கான பொதுசன சேவை விநியோக ளுனுபு பிரதானபோக்கினைத் தயாரித்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பிலான ஆலோசனை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான மூலோபயங்கள் செயமர்வு - மூவென்பிக் ஹோட்டல், 2019.09.20

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய, 2018 ஆம் ஆண்டில் தே.நீ.வ.வ.ச. "அவசரநிலை பதிலிறுப்புத் திட்டம்" ஒன்றை அபிவிருத்தி செய்தது. அவசரநிலைப் பதிலிறுப்புத் திட்டமானது, பல்வேறான அவசரநிலை காலகட்டத்தின்போது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவான நீர் வழங்கல் சேவையில் ஏற்படுகின்ற தடைகளைக் குறைப்பதற்கும் பொதுச் சுகாதார பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தீர்வுகளை வழங்குவதற்கும் தொழிற்படுத்துனர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கான வழிகாட்டல்களாக அவசரநிலை பதிலிறுப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிலும் மேற்படி அவசரநிலை பதிலிறுப்புத் திட்டத்தில் தே.நீ.வ.வ.ச. இற்றைப்படுத்தல்களை மேற்கொண்டது. தொடர்புடைய புதிய அபிவிருத்திகளைக் கவனத்திற்கொண்டு 2019 ஆம் ஆண்டிலும் மேற்படி குடிநீர் கொள்கையை மீளாய்வு செய்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

ஆண்டறிக்கை - 2019

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

> "கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஒவ்வொரு சிபாரிசும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு சில விடயங்கள் சபைக் கூட்டத்தில் மேலும் கலந்துரையாடப்பட்டன."



1999 நவெம்பர் 19 ஆம் திகதிய பீஎப்/பீ.ஈ/3 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க, 590 ஆம் இலக்க சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2965(பீ) இலக்க சபைத் தீர்மானத்தின் ஊடாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பணிப்பாளர் சபை இணக்கப்பாடு பெறப்பட்டு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

2010.12.14 ஆம் திகதிய PED 55 ஆம் இலக்க வழிகாட்டல்களுக்கமைய பணிப்பாளர் சபைக்கு உதவுதல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் நோக்கமாகும்.

குழுவின் குறித்துரைக்கப்பட்ட வகிபாகம் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு:

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் அவர்களது விளைதிறனின் பக்கச்சார்பின்மையை தொடர்ந்து மீளாய்வு செய்யத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏற்புடைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதியியல் அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்வதற்கான சபையின் மேற்பார்வைப் பணிக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உதவுதல் வேண்டும்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, அனைத்து ஏற்புடைய விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கடைப்பிடிக்கப்படுவதென்பதை தொடர்ச்சியான மீளாய்வு மற்றும் கண்காணிப்புடன் உறுதி செய்வதற்கு சபைக்கு உதவுதல் வேண்டுமென்பதோடு, அத்துடன் இணங்கியொழுகாத சந்தர்ப்பங்களில் சபைக்கு சிபாரிசுகளைச் செய்தலும் வேண்டும்.
- கணக்காய்வு முற்றும் முகாமைத்துவக் குழுவானது உள்ளக.ஃ. வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள் மற்றும் COPE விதப்புரைகளை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதோடு, தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபைக்கு உதவுதலும் வேண்டும்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் சபைக்கு உதவுதல் வேண்டும்.

2019 ஆம் ஆண்டினுள் குழு பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது,

1. திரு. ஜே.எம்.யு.பீ. ஜயமஹ	-	சபை உறுப்பினர் - குழுவின் தலைவர்
செல்வி பி.கே.ஏ.டீ. த சில்வா		
2. திரு. சாந்த ரத்நாயக்க	-	சபை உறுப்பினர்
3. திருமதி கே.ஏ. சுபத்ரா வல்பொல	-	சபை உறுப்பினர்
4. திரு. டீ.யூ. சுமனசேகர	-	பொது முகாமையாளர்
திரு. ஆர்.எச். ருவினிஸ்		
5. திரு. டி. தொட்டவத்த	-	மேலதிக பொ.மு. (நிதி)
6. திரு. ஜீ.கே. இத்தமல்கொட	-	மேலதிக பொ.மு. (ம.வ.மு.)
7. திரு. கே.ஜே.வீ.ஏ. பெரேரா	-	மேலதிக பொ.மு. (CS)
திரு. சீ.சீ.எஸ்.எச். பெர்னாந்து	-	பதில் மே.பொ.மு. (CS)
8. திரு. ஆர்.எம்.ஏ.எஸ். வீரசேன	-	பிரதி பொ.மு. (உ.க.)
செல்வி ஏ. சிறியலதா	-	பதில் பிரதி பொ.மு. (உ.க.)
9. திரு. எம். எச்.எம். சல்மான்	-	உப தலைவர்
10. செல்வி டீ.என். பீரிஸ்	-	கணக்காய்வு அத்தியட்சகர்
11. செல்வி எஸ்.டபிள்யு. குணவர்தன	-	பிரதம உள்ளக கணக்காய்வாளர்
12. செல்வி டபிள்யு.பி. சந்தமாலி த சில்வா	-	சபையின் செயலாளர்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூன்று தடவைகள் கூடியதோடு நிகழ்ச்சிநிரல் விடயங்களின் கீழ் பின்வருவன கலந்துரையாடப்பட்ட முக்கியமான விடயங்களாகும்.

i. 2018.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று மற்றும் 2019 ஜூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறான அரை ஆண்டு நிதிக் கூற்று குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது.

ii. 2019 ஆம் ஆண்டின் மீளாய்வின் கீழ் மூீஐ யில் வினைத்திறன் மேம்பாட்டின் சில அறிகுறிகள் அவதானிக்கப்பட்டன.

iii. 2009 ஜூன் மாத முாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் குழுவின் மூலம் 2019 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதோடு, பணி ஆணையின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் பரிசீலனைக்காக அதன் சமர்ப்பித்தல்கள் சிபாரிசு செய்யப்பட்டன.

கலந்துரையாடப்பட்ட விடயங்களில், வருவாயற்ற நீர் குறைப்பு மற்றும் கருத்திட்டத்துக்கான செயலாற்றுகைக் கண்காணிப்புத் திட்டம் தொடர்பிலான சிறந்ததொரு கண்காணிப்பு முறைமைக்காக கருத்திட்டத்தின் தகவல்கள் அதேநேரம் இற்றைப்படுத்தப்படுவதற்கான "டேஷ் போர்ட்" ஒன்றின் தயாரித்தலை முன்மொழிந்து பல குழுக் கூட்டங்களின் ஊடாக பல தடவை கலந்துரையாடப்பட்டது.

iv. குழுவினால் நிதியியல் மேலாண்மையின் திருத்தப்பட்டவாறான அதிகாரங்கள் சிபாரிசு செய்யப்பட்டதோடு 2019 ஆம் ஆண்டுக்கு செல்லுபடியாகின்றது.

v. 2018 ஆம் ஆண்டின் 3வது மற்றும் 4வது காலாண்டுகளுக்கான கணக்காய்வுச் சுருக்கம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 4வது காலாண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 1வது காலாண்டின் கணக்காய்வுச் சுருக்கத்தின் வழிகாட்டல்களுடன் தொடர்புடைய பின்தொடர் நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டன.

vi. அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலிறுத்தல் பற்றிய நிலைமை மதிப்பீடு செய்யப்பட்டதோடு பொறுப்புக்கூறலை உச்சப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

vii. COPE வழிகாட்டல்கள் மற்றும் 2019 ஆகஸ்ட் 22 ஆம் திகதி நடைபெற்ற COPE குழுக் கூட்டத்தின் செயல் குறிப்புகள் கலந்துரையாடப்பட்டு COPE மூலம் எழுப்பப்பட்ட விடங்களைத் தணிப்பதற்கான தீர்வு நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டன.

viii. 2017 ஆண்டறிக்கை பூர்த்தி செய்யப்பட்டதோடு, 2018 ஆண்டுக்கான ஆண்டறிக்கையை தயாரித்தல் நடைபெற்று வருகின்ற

ix. அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுத் தேவைப்பாடுகளுக்கும் சபை இணங்கியொழுகியது.

சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவாறு குழுவின் அனைத்து விதப்புரைகளும் மேற்கொள்ளப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டது.

நிதியியல் கூற்று

73 - 74 விபரமான வருமானக் கூற்று


75 நிதி நிலைமைக் கூற்று


76 மூலதன மாற்றம் பற்றிய கூற்று

77 காசுப் பாய்ச்சல் கூற்று

79 - 100 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்

101 - 122 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை




Rs

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

நிதி நிலைமைக் கூற்று

விரிவான வருமானக் கூற்று

உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2019 மார்கழி 31

விரிவான வருமானக் கூற்று

2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	பாதீடு 2019 ரூபா	உள்ளபடியானது 2019 ரூபா	உள்ளபடியானது 2018 ரூபா
வருமானம் (வட் இன் நிகர)	7	25,954,703,400	**26,079,488,608**	24,806,457,684
விற்பனைக் கிரயம்	8	(17,303,602,703)	**(16,614,378,349)**	(15,821,034,600)
மொத்த இலாபம்		8,651,100,697	**9,465,110,259**	8,985,423,084
ஏனைய செயற்பாட்டு வருமானம் மற்றும் இலாபம்	9	1,496,778,600	**1,258,512,779**	1,061,966,069
நிர்வாகச் செலவினம்	10	(12,109,926,297)	**(12,059,061,307)**	(10,969,381,641)
ஏனைய செயற்பாட்டுச் செலவினம்	11	(671,000,000)	**(764,590,969)**	(906,753,982)
செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)		(2,633,047,000)	**(2,100,029,238)**	(1,828,746,471)
நிதி வருமானம்	12	375,600,000	**1,454,249,803**	1,574,439,901
நிதிக் கிரயம்	13	(4,941,000)	**(465,671,785)**	(262,731,394)
வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)		(2,262,388,000)	**(1,111,451,220)**	(517,037,963)
வருமான வரி (பொருளாதார சேவை கட்டணங்கள்)	14	(166,575,000)	**(65,383,426)**	(63,287,387)
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)		(2,428,963,000)	**(1,176,834,646)**	(580,325,351)

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 26 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

விரிவான வருமானக் கூற்று
2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	பாதீடு	உள்ளபடியானது	உள்ளபடியானது
	2019	2019	2018
	ரூபா	ரூபா	ரூபா
வருடத்திற்கான இலாபம்/(நஷ்டம்)	(2,428,963,000)	(1,176,834,646)	(580,325,351)
வருடத்திற்கான பிற விரிவான வருமானம்			
வரையறுக்கப்பட்ட நன்மை கடமையில் உண்மையான ஆதாயம்			277,616,559
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்	(2,428,963,000)	(1,176,834,646)	(302,708,792)

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 26 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

நிதி நிலைமைக் கூற்று

2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்புகள்	உள்ளபடியானது 2019 ரூபா	மீண்டும் கூறப்பட்ட மீதி 2018 ரூபா
சொத்துக்கள்			
நிலையான சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	15	**246,276,731,455**	193,176,543,150
கற்பனைச் சொத்துக்கள்	16	**4,176,328**	5,667,741
செயற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள்	17	**291,525,375,599**	247,867,666,528
நிதிச் சொத்துக்கள்	18	**2,050,210**	3,737,585
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**537,808,333,592**	441,053,615,003
நடைமுறைச் சொத்துக்கள்			
பொருளிருப்புகள்	19	**8,732,498,024**	7,324,291,091
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்	20	**6,871,077,905**	8,667,342,429
வைப்புக்கள் மற்றும் முற்பணம்	21	**40,706,840,162**	43,824,831,314
முதலீடுகள்	22	**27,736,376,662**	12,424,124,006
காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்	23	**3,925,735,348**	1,591,910,199
இயக்கமற்ற சொத்துக்கள்	34.2	**149,681,812**	149,681,812
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**88,122,209,912**	73,982,180,851
மொத்தச் சொத்துக்கள்		**625,930,543,504**	515,035,795,855
உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்			
உரிமை மூலதனம்			
அரசாங்க திணைக்களத்திடமிருந்து கையேற்ற சொத்துக்கள்	24	**185,480,387**	185,480,387
அரசாங்க மூலதனம் (பங்கு)	25	**85,106,439,687**	81,053,316,307
உத்தியோகத்தர் நலன்புரி நிதியம்	26	**29,411,874**	23,463,597
நிறுத்திவைத்த இலாபங்கள்		**(9,408,054,417)**	(8,225,271,493)
அரசாங்க மானியங்கள்	27	**105,903,930,027**	98,303,838,433
மூலதன மானியங்கள்	28	**241,308,488,604**	218,460,298,409
உரிமை மூலதனம்		**423,125,696,163**	389,801,125,640
நிலையான பொறுப்புகள்			
பெறவேண்டிய கடன்கள்	29	**139,316,053,612**	94,926,739,465
ஏனைய பிற்போட்ட பொறுப்புகள்	30	**4,057,934,251**	4,051,404,991
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புகள்		**143,373,987,863**	98,978,144,456
நடைமுறைப் பொறுப்புகள்			
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	31	**39,245,156,498**	17,050,007,733
செலுத்த வேண்டிய கடன் மூலதனம்	29	**12,034,922,913**	5,353,649,911
செலுத்த வேண்டிய கடன் வட்டி		**8,078,638,649**	3,780,726,696
இயக்கமற்ற பொறுப்புகள்	34.2	**72,141,419**	72,141,419
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**59,430,859,478**	26,256,525,759
மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்		**625,930,543,504**	515,035,795,855

ஆர். ஏம். ஏ. எச். வீரசேன
மேலதிக பொது முகாமையாளர் (நிதி)

ஆர். எச். ருவினிச்
பொது முகாமையாளர்

பக்க இலக்கம் 08 முதல் 14 வரையான பக்கங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 15 முதல் 26 வரையான பக்கங்களில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறிப்புக்கள் யாவும் நிதி கூற்றுக்களின் முக்கியமான பகுதிகளாகும். நிதி கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமாக பணிப்பாளர்கள் சபை பொறுப்புக் கூறுவர். இந்த நிதிக் கூற்றுக்கான அங்கீகாரம் பணிப்பாளர்கள் சபையினால் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் பொருட்டு கையொப்பமிடப்படுகின்றது.

நிசாந்த ரனதுங்க
தலைவர்

நிமல் ஆர் ரனவக
உப தலைவர்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

பங்கு மாற்றங்கள் சம்பந்தமான கூற்று

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக.

	குறிப்பு	அரசாங்க திணைக்களங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள்	அரசாங்க மானியங்கள்	அரச மூலதனம்	மூலதன மானியங்கள்	பணிக்குழாம் நலன்புரி நிதி	திரட்டிய இலாபம்/ நஷ்டம்	மொத்தம்
		ரூபா	ரூபா		ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2018 ஜனவரி 01 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை		185,480,387	94,838,588,669	75,254,960,972	192,631,358,038	22,527,125	(8,145,448,178)	354,787,467,012
முன்னைய ஆண்டுச் சீராக்கல் -								
சொத்துக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்	34.1.1						88,496,259	88,496,259
சொத்துக்களை கண்டறிவதற்கும் அகற்றுவதற்குமான பெறுமானத்தேய்வுச் சீராக்கல்	34.1.2						41,243,667	41,243,667
புனரமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள்	34.2						(1,271,130)	(1,271,130)
இருப்புக்களை கண்டறிதல் மற்றும் அகற்றுதல்							(6,861,000)	(6,861,000)
வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகளை கண்டறிதலும், அகற்றுதலும்	34.2						3,715,258	3,715,258
வங்கி நிலுவைகளை சரி செய்தல்	34.2						(5,390,596)	(5,390,596)
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளை சரி செய்தல்	34.2						2,116,860	2,116,860
2018.01.01 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை		185,480,387	94,838,588,669	75,254,960,972	192,631,358,038	22,527,125	(8,023,398,860)	354,909,516,331
ஆண்டிற்கான தேறிய இலாபம்							(302,708,792)	(302,708,792)
சொத்துக்களை கண்டறிதல், நீக்குவதற்காக தேய்வுகளை சீராக்குதல்	34.1.1	-	-	-	-	-	2,132,625	2,132,625
வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள்		-	3,418,879,181	-	25,536,892,975	-	-	28,955,772,157
கடன் தொகையை மூலதனமாக மாற்றுதல்	34.2	-	-	5,798,355,335	-	-	-	5,798,355,335
வைப்புக்கல் மற்றும் ஏனய முற்கணம்	34.2						(6,346,320)	(6,346,320)
பொருளிருப்புக்கள்	34.2						45,229,961	45,229,961
புனரமைப்பு மற்றும் கட்டுமான பணிகள்	34.2						3,695,065	3,695,065
வேளிநாட்டு உள்ளுர் மற்றும் அரசாங்க மானியம்	34.2		46,370,583		292,047,395		57,865,299	396,283,278
முடிவுத் திகதிவரை வைத்துக்கொள்ளப்படும் நிதி நடைமுறைக்கேற்ற பத்திரம்	34.2						(804,000)	(804,000)
நலன்புரி நிதிக்கு மாற்றுதல்						936,472	(936,472)	-
2018.12.31 ஆம் திகதிக்கு மீண்டும் கூறப்பட்ட நிலுவை		185,480,387	98,303,838,433	81,053,316,307	218,460,298,409	23,463,597	(8,225,271,493)	389,801,125,641
ஆண்டிற்கான தேறிய இலாபம்							(1,176,834,646)	(1,176,834,646)
வருடத்தினுளான வரவுகள்/மாற்றங்கள்			7,600,091,594		22,848,190,195			30,448,281,790
கடன் தொகையை மூலதனமாக மாற்றம்				4,053,123,380				4,053,123,380
நலன்புரி நிதிக்கு மாற்றுதல்						5,948,277	(5,948,277)	-
2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ளவாரான நிலுவை		185,480,387	105,903,930,027	85,106,439,687	241,308,488,604	29,411,874	(9,408,054,416)	423,125,696,165

பக்க இலக்கம் 08 முதல் 26 வரையான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் யாவும் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதிகளாகும்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

காசுப்பாய்ச்சல் கூற்று

2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

	குறிப்பு	உள்ளபடியானது 2019 ரூபா	மீண்டும் கூறப்பட்ட மீதி 2018 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
வரிக்கு முன்னரான தேறிய இலாபம் /(நட்டம்)		(1,111,451,220)	(517,037,963)
சீராக்கலிற்கானது			
வட்டி வருமானம்	12	(1,454,249,803)	(1,574,439,901)
நிலையான சொத்து கைதவிர்பில் இலாபம் /(நட்டம்)		8,426,050	24,193,893
பெறுமானத் தேய்வு	10.2	4,614,775,009	3,663,574,560
ஒய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு	30.1	578,942,828	706,912,095
வட்டிச் செலவினம்	13	465,671,785	262,731,394
தொழிறிபடு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		3,102,114,649	2,565,934,078
பொருளிருப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		(1,408,206,933)	50,076,524
கடன்பட்டோர், பெறவேண்டியவை மற்றும் வைப்புக்களில் (அதிகரிப்பு)/ குறைவு		4,987,732,998	(1,736,116,494)
கடன்கொடுத்தோர் மற்றும் ஏற்பாடுகளில் அதிகரிப்பு)/ குறைவு		22,201,678,025	3,140,750,015
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு		28,883,318,739	4,020,644,123
செலுத்திய வரி		(138,860,749)	(63,287,387)
செலுத்திய பணிக்கொடை	30.1	(578,942,828)	(501,739,973)
செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசுப் பாய்ச்சல்		28,165,515,162	3,455,616,762
முதலீட்டு நடவடிக்கைகள் / பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
நிலையான சொத்துக்கள் மற்றும் நடைபெறும் வேலைகளில் முதலீடு		(93,000,764,052)	(71,637,779,836)
சொத்துக்களின் பற்றுதல்		1,687,375	4,492,884
கைதவிர்ப்பு சொத்துக்களிற்கான விற்பனை இலாபம்		17,400	12,695,977
பெறப்பட்ட முதலீட்டு வருமானம்		1,454,249,803	1,574,439,901
முதலீடுகளின் (முதலீடு) / பற்றுதல்கள்		(15,312,252,655)	2,195,336,043
செயற்பாட்டு நடவடிக்கைகள்/ (பயன்படுத்தலில்) இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		(106,857,062,129)	(67,850,815,031)
நிதி நடவடிக்கைகள் / (பயன்படுத்தலில்) இருந்தான காசுப்பாய்ச்சல்			
முன்னைய ஆண்டின் போதான அரசாங்க மானியம்		7,600,091,594	3,465,249,764
முன்னைய ஆண்டின் போதான மூலதன மானியம்		24,402,315,887	27,180,747,901
புதிய கடன்கள் மற்றும் பங்கு மாற்றத்திற்கான கடன் ரசீதுகள்		61,968,254,527	43,283,510,844
கடன் திருப்பிச் செலுத்தல்கள்		(6,844,543,998)	(4,366,443,474)
செலுத்திய வட்டி		(6,100,745,895)	(4,974,153,569)
		81,025,372,115	64,588,911,466
காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு		2,333,825,148	193,713,197
ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		1,591,910,199	1,398,197,000
ஆண்டு இறுதியிலுள்ள் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்		3,925,735,348	1,591,910,199

அந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியிலிருந்து 8 முதல் 26 வரையான பக்கங்களிலிருந்து கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டு

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

1. திரட்டிய தகவல்கள்

1.1 பொதுவானவை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது 1974 இன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரச்சட்டதின் கீழ் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டச் சபையொன்றாக உள்ளது. சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இரத்மலானை, காலி வீதியில் அமைந்துள்ளதுடன் வியாபாரத்தின் பிரதான அமைவிடம் அதே இடத்தில் அமைந்துள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது (என்டபிள்யூஎஸ்&டிபீ) நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் மேற்பார்வையின் கீழான நிறுவனமொன்றாக உள்ளது.

1.2 பிரதான நடவடிக்கைகள்

சமுதாயத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை தயார்செய்து விற்பனை செய்யவதே சபையின் பிரதான நடவடிக்கைகளாக உள்ளது.

நாடு முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரை விருத்தி செய்து இலங்கையை சிறந்த நாடாக கட்டியொழுப்புவதே தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குறிக்கோள்களாக உள்ளது.

2. தயாரிப்பு அடிப்படை

2.1 நிதிக்கூற்றுக்களின் இணக்கம்

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தால் வழங்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

2011 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆணடும் மற்றும் அவ்வாண்டு வரையும் உள்ளடக்கிய சகல காலமும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது அதன் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்) அமைய தயாரித்திருந்தது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்

2012 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்க தயாரிக்கப்பட்டிருந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை எப்படி எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ் ஐ பின்பற்றியது பற்றி தகவல் 7 ஆவது குறிப்பை பார்க்கவும்.

2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதிக் கூற்றுக்கள் ரூபா வில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடப்பட்டவற்றைத் தவிர சகல பெறுமதிகளும் அண்ணளவாக ஆயிரத்திற்கு (ரூபா 000) குறிப்பிடப்பட்டது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களானது கிரயம், திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் திரட்டிய பெறுமதிகுறைப்பு நட்டங்கள் என்வற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏதாவது பிரமாணம் அங்கீகாரம் செய்கின்ற போது ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதி மீளளிப்பு கிரயத்திலும் நீண்டகால நிர்மாண செயற்திட்டங்களிற்கான கடன்பெறல் கிரயங்களிலும் என்பவற்றை அத்தகைய கிரயங்கள் உள்ளடக்குகிறது. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் முக்கிய பகுதிகள் ஒரேயளவு இடைவெளிகளில் மீள்நிரப்பப்பட வேண்டுமென வேண்டப்படுகின்றது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அவற்றினை இதன்படி குறிப்பாக பாவணைக் காலம் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றுடன் தனித்தனியான சொத்துக்களாக அத்தகைய பகுதிகளாக அடையாளப்படுத்துகிறது. அவ்வாறே, பிரதான பரிசோதனைகளை செயற்படுத்தும் போது அதன் கிரயம் பிரமாண அங்கீகாரங்களை திருப்திசெய்கையில் மாற்றீடாக பொறி மற்றும் உபகரணங்களின் தொகையை மேற்கொள்கையில் அங்கீகரிக்கின்றது. ஏனைய சகல திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு கிரயங்கள் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

நிதியேற்பாடுகளிற்கான பிரமாண அங்கிகாரங்களை செய்கையில் உரிய சொத்துக்களின் கிரயத்தில் அதன் காலத்தின் பின்னர் சொத்தொன்றின் தரகு குறைப்பதற்காக எதிபார்க்கப்பட்ட கிரயத்தின் தற்போதைய பெறுமதியை உள்ளடக்குகிறது.

3.1.1 பெறுமானத்தேய்வு

பின்வருமாறு சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலத்திற்கு மேலாக நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகிறது.

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	
கட்டிடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு	1.67% - 2%
சுத்திகரிப்பு பொறி மற்றும் உபகரணங்கள்	5 %
சேவைகள் மற்றும் மொத்த தண்ணீர் அளவைமானி	10%
பரிமாற்ற பொறி மற்றும் விநியோகக் குழாய்கள்	1.67%
உபகரணங்கள்	10%
தளபாம் மற்றும் பொருத்திகள்	10%
கணனிகள் உபபாகம் மற்றும் கையடக்க தொலைபேசிகள்	20%- 33.3%
மோட்டார் வாகனங்கள்	10%- 20%
குத்தகையுடமை வாகனங்கள்	14.3 %

3.1.2 செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி

மூலதனமாக்கப்படாத மற்றும் ஆண்டினுள் செலவிடப்பட்ட மூலதனச் செலவு ஆகியவை செயற்பாட்டிலுள்ள மூலதனப் பணி எனக் குறித்துக்காட்டப்படுவதுடன், ஆண்டினுள் மூலுதனமாக்கப்பட்ட மற்றும் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் உடைமைகள் யாவும் சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களாக மாற்றியமைக்கப்படும்.

3.1.3 குத்தகை

ஒழுங்கமைப்புள்ளதா அல்லது அதனைக் கொண்டுள்ளதா எனவும், பரிசோதனை திகதியில் பொருள்களை அடிப்படையாக ஒழுங்கமைப்புகள் கொண்டுள்ளதா எனவும், குறித்த சொத்தொன்றோ அல்லது சொத்துக்களோ பயன்படுத்துவதில் ஒழுங்கமைப்புக்களை நிறைவேற்றலில் தங்கியுள்ளதா அல்லது சொத்துப் பயன்பாட்டு உரிமை ஒழுங்கமைப்புக்களையோ ஒப்படைக்கின்றதா எனவும் நிர்ணயித்தல், அவ்வாறே, குறிப்பிடத்தக்க ஒழுங்கமைப்புக்களில் அவ்வுரிமை வெளிப்படையாக இருக்கவில்லை.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3.1.4 கற்பனைச் சொத்துக்கள்

கையேற்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகரிப்பு கிரயத்தில் தனித்தனியாக அளவிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆரம்ப அங்கீகாரம் கற்பனைச் சொத்துக்கள் திரண்ட கிரக் கழிப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கற்பனைச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்திக் கிரயங்கள் தவிர்ந்தவை மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன் செலவினங்கள் ஆண்டில் ஏற்பட்டிருந்த செலவினத்தில் வருமானக் கூற்றில் தாக்கமேற்படுத்தியது.

3.1.5 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிரயங்கள்

ஆராய்ச்சிக் கிரயங்கள் ஏற்பட்டதாக செலவழிக்கப்பட்டன. தனிப்பட்ட செயற்திட்டங்கள் மீது அபிவிருத்திச் செலவினங்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செய்முறைப் பயிற்சியளிக்க முடிந்த போது கற்பனைச் சொத்துக்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன.

- சொத்துக்கள் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கொ கிடைக்கும் என்று கற்பனைச் சொத்துக்களை முழுமையாக்குகின்ற தொழில்நுட்ப சாத்தியவள அறிக்கை.
- முழுமையாக்குவதற்கான அதன் செயல்திட்டமும் பயன்படுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அதன் இயலுமை.
- சொத்துக்கள் எதிர்காலத்தில் எப்படி பொருளாதார நலன்களை ஏற்படுத்தும்.
- சொத்துக்களை முழுமையாக்குவதற்கு வளங்களின் கிடைப்பனவு
- அபிவிருத்தியின் போது உண்மைத்தன்மையான செலவினத்தை அளவிடுவதற்கான இயலுமை.

சொத்தாக பின்வரும் ஆரம்ப பெறுதி குறைப்பு அபிவிருத்திச் செலவினம், சொத்துக்களை கிரயக் கழிவின் திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதிக் குறைப்பு நட்டம் என்பவற்றில் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி முழுமையாக்கும் போது சொத்துக்களின் தீர்ப்பனவு ஆரம்பிக்கின்றதுடன் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நன்மைகளின் காலத்திற்கு மேலாக தீர்க்கப்பட்டிருந்தது. கடன் தீர்ப்பனவு விற்பனைக் கிரயத்தில் பதியப்பட்டுள்ளது. அபிவிருத்திக் காலத்தின் போது சொத்துக்கள் வருடாந்த பெறுமதிக் குறைப்பிற்காக பரீட்சிக்கப்பட்டது.

3.1.6 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிக் குறைப்பு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியில் சொத்துக்கள் கட்டாயமாக பெறுமதி குறைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படடுள்ளதா எனவும், குறிப்பாக அவ்வாறு இருக்கையில், அல்லது கையேற்கப்பட்ட சொத்துக்களிற்காக வருடாந்த பெறுமதிக் குறைப்பு பரீட்சிப்பின் போது, சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மதிப்பிடுகின்றது. சொத்துடமையாளர் அறவிட வேண்டிய தொகையை சொத்துடமையாளருடைய அல்லது விற்றுக் காசு உருவாக்குகின்ற பிரிவினுடைய (சிஜீயூ) சந்தைப் பெறுமதி கழித்த பயன்பாட்டுக் கிரயங்கள் மற்றும் அதன் பெறுமதி உயர்வாகவுள்ளமையால் தனிப்பட்ட சொத்தாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இல்லையேல், ஏனைய சொத்துக்களிலிருந்து தனித்துவப்படுபவையா அல்லது சொத்துக்களின் தொகுதி பெருமளவு தனித்துவமாக உள்ளதா என காசுப்பாய்ச்சல் கூற்றில் அச்சொத்துக்கள் உருவாக்கியிருக்கவில்லை. சொத்துக்கள் அல்லது சீஜீயூ இன் முற்கொண்டுவரும் தொகை அதன் அறவிட வேண்டிய தொகையை விஞ்சியிருந்தது. சொத்துக்கள் மெறுமதி குறைத்து மதிப்பிட கருத்திற்கொள்ளப்பட்டதுடன் அதன் அறவிட வேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடுகையில், எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் பணப்பெறுமதி மதிப்பிடுகையில் தற்போதைய சந்தைப் பெறுமதி தாக்கம் மற்றும் சொத்துக்களிற்கான குறிப்பிடத்தக்க ஆபத்துக்களென வரிக்கு முன்னரான கழிப்பனவை பயன்படுத்துவதன் மூலம் அவர்களுடைய தற்போதைய பெறுமதிக்கு கழிவுவழங்கப்படுகின்றன. விற்பனை செய்வதற்கு நியாயபெறுமதி குறைவு கிரயங்களை நிர்ணயிக்கையில், அண்மைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கிற்கு எடுக்கப்படுகின்றன. அதேவேளையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இனங்காண முடியாதுள்ளது. முறையான பெறுமதியிடல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

3.2.1 பொருளிருப்புக்கள்

பொருளிருப்புக்களின் மதிப்பு கிரயத்தில் பதியப்படுவதுடன் தேறிய உண்மையான பெறுமதி ஏதாயினும், பழுதடைந்தவற்றிற்கான நிலுவை படிகளை செய்த பின்னர் குறைவாக உள்ளவற்றுடன் மெதுவாக அசையும் விடயங்கள் முதல் வந்து முதல் செல்லல் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டிருந்தது. தேறிய உண்மையான பெறுமதி சாதாரண வியாபாரத்தின் போது, முழுமையாக்கலின் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கழிப்பனவு மற்றும் அவசியமான விற்பனைகளைச் செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்கள் என்பவற்றின் விற்பனை விலையை மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளிருப்பின் அளவீடு

3.2.2 பொருளிருப்பின் கிரயங்கள்

மூலப் பொருட்கள்

ஏதாவது இடைநேர் செலவினங்களுடன் சேர்த்து கொள்வனவுக் கிரயம்

ஏனைய இருப்புக்கள்

கிரயம் நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் அமைந்துள்ளது.

3.3 காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்

காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் கையிலுள்ள காசு, இடைப்போக்கிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் நிலுவையாகவிருக்கின்ற தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளது.

4 பொறுப்புக்கள், ஏற்பாடுகள் மற்றும் உரிமை மூலதனம்

4.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்பு

4.1.1 ஓய்வூதிய நலக் கடமைப்பொறுப்புக்கள் (எஜ்கேஏஎஸ் 19)

(அ) பிற்போட்ட நலத் திட்டம்- பணிக்கொடை

இலங்கை கணக்கீட்டு நியம இல. 19 எல்கேஎஸ் 19) உடன் இணங்கி சகல ஊழியர்களும் சேவையாற்றிய முதலாவது ஆண்டிலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஓய்வூதிய நலக் கிரயம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டமொன்று செயற்படுகின்றதுவரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கிரயங்கள் செயற்படுத்தப்பட்ட கடன் முறை பிரிவு பயன்படுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட நல ஓய்வூதியத் திட்டத்திற்கான உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விரிவான வருமானத்தில்

அவை ஏற்பட்டிருந்த காலத்தில் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டது. அத்தகை உள்ளபடியான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் நிறுத்திவைத்த இலாபங்களிலும் உடனடியாக அனுமதிக்கப்பட்டதுடன் அடுத்துவரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டங்ளிற்கு மீள வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையறுக்கப்படாத கடந்த சேவைக் கிரயங்கள் நன்மைகளாக வரையறுக்கப்பட்டிருந்த இதுவரையான சராசரி காலத்தினை விட நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. கடந்த சேவைக் கிரயங்கள்

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள்
2019 மார்கழி 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

பின்வரும் உள்ளடக்கங்களின் அல்லது மாற்றங்களிற்கு அல்லது ஒய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே நன்மைகளை வைத்திருந்தால் உடனடியாக அனுமதிக்கப்பட்டிருந்தன.

XIV. சபையானது 2016, 2017 மற்றும் 2018 ஆம் அண்டுகளுடன் தொடர்பாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு சீராக்கல்களை செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவால், 2018 ஆம் ஆண்டு இறுதியில் அடைந்த நட்டங்கள் ரூபா 117.96 மில்லியனால் அழிவடைந்திருந்தது. எனவே, அடுத்தவரும் ஆண்டில் மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கான சீராக்கல்கள் செய்வதற்கான சாத்தியத்தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது. எனவே, மீளாய்வாண்டிற்கான இலாபத்தின் பொருண்மை மற்றும் உண்மைத்தன்மை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் அத்தகைய சீராக்க்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு	வரவு வைக்கப்பட்ட தொகை	செலவு வைக்கப்பட்ட தொகை	திரண்ட இலாபத்திற்கான தேறிய தாக்கம்
2018	8,086,792	108,922,950	100,836,158
2017	18,821,712	140,160,044	121,338,332
2016	243,896,877	139,680,704	104,216,173

XV ஏழு செயற்திட்டங்கள் (07) தொடர்பில் நடைபெறும் வேலைகளின் கீழ் ரூபா 198,729,791 கூட்டுத்தொகையான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் அவசியமான சீராக்கம் செய்யும் நொக்கில் புலனாய்வு செய்யப்படாமல் பத்து ஆண்டுகளிறகு மேலான வீச்சில் மாற்றமடையாதிருந்தது.

XVI. மூன்று (03) நிலையான வைப்புகள் தொடர்பில் ரூபா 15,302,077 மற்றும் ரூபா 1,125,718 தொகை மீதான முறையே பெறப்பட்ட வட்டி வருமானம் மற்றும் கழிக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி என்பன கண்கிற்கு கொண்டு வரப்ட்டிருக்கவில்லை. மேலும், ஐ.அ.டொலர் 91,395.37 மில்லியன் தொகையான

மூன்று (03) ஐ.அ.டொலர் வைப்புக் கணக்குகளில் பெறப்பட்ட வட்டி ரூபாவில் மாற்றுவதற்குப் பதிலாக டொலர் விடயங்களில் நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டிருந்தது. எனவே, வட்டி வருமானம், பெறவேண்டிய பிடித்துவைத்தல் வரி மற்றும் வங்கி மீதிகள் என்பன முறையே ரூபா 15,619,025, ரூபா 780,502 மற்றும் ரூபா 14,838,523 என்பவற்றால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. அத்துடன், நான்கு (04) ஐ.அ.டொலர் வைப்பு கணக்குகள் தொடர்பில் ரூபா 137 மில்லியன் அட்டுறு வட்டி வருமானமும் கணக்கேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேல், 2019 நவம்பர் 08 முதல் 2019 திசெம்பர் 08 வரையான காலப்பகுதிக்காக இன்னொரு வைப்புக் கணக்கில் ரூபா 3,457,862 தொகையான பெறப்பட்ட வட்டி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

XVII. ரூபா 1,130,959 தொகையான இன்னொரு நிலையான வைப்பு வட்டி மீதான அட்டுறு வட்டி வருமானம் இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதேநேரம், ரூபா 352,247 தொகையான இன்னொரு நிலையான வைப்புக்கள் மீதான அட்டுறு வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

XVIII. ரூபா 71,040,247 தொகையான இலங்கை வங்கி நிலையான வைப்புக்களில் பெறவேண்டிய வட்டி வருமானத்தின் ஆரம்ப மீதியில் மீளாய்வாண்டின் போது ரூபா 49,702,919 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. எனவே, ரூபா 21,337,328 ஆன இருக்கின்ற மீதி மீளாய்வாண்டின் போது முறையாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

XIX. முன்னைய ஆண்டில் தொங்கல் கணக்கிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்த ஏனைய கடன்பட்டோர், முற்பணங்கள், வியாபார கடன்கொடுத்தோர், கோரப்படாத சம்பளங்கள் போன்றன உள்ளடங்கலான முறையே ரூபா 149,681,812 மற்றும் ரூபா 72,141,419 தொகையான நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற சொத்து மற்றும் பொறுப்புக்கள் மீதி மீளாய்வாண்டின் போது உரிய கணக்குகளிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்காததுடன் அத்தகைய மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் செயற்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செயற்பாடற்ற பொறுப்புகளாக இனங்காணப் பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 95,796,513 ஆன இனங்காணப்படாத மீதி மற்றும் ரூபா 5,906,882 ஆன வங்கி மீதியை புலனாய்வு செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் செயற்பாடற்ற சொத்தாக மேற்குறிப்பிடப்பட்ட மீதியில் இருந்தது.

XX. ரூபா 2,549,787 தொகையான நான்கு ஆண்டுகளிற்கு முன்னர் களணி பிராந்திய திருடப்பட்ட இருப்புக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருளிருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படடிருந்தது. உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து

அத்தகைய இழப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

XXI. இறையில் ஆதனம், காட்டிட ஆதனம் மற்றும் பங்குடைமைகள் போன்ற மூன்று (03) நிலையான சொத்துக்களின் உண்மைத்தன்மை மற்றும் உள்ளதன்மை ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் இருந்த பெறுமதிக்கும் வவுனியா, மட்டக்களப்பு, களுத்துறை, பாணந்துறைபிராந்திய அலுவலகங்கள் மற்றும் சப்ரகமுவ பிராந்திய ஆதார நிலையங்களின் நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நேரொத்த பெறுமதிக்கும் இடையில் ரூபா 105,427,971 கூட்டுத்தொகையான வித்தியாசமான அழிவடைந்த பொருட்கள் கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.

XXII. நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் சபையின் வர்த்தகப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வு பட்டியலில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் வியாபாரக் கடப்பட்டோரில் ரூபா 139,689,087 மற்றும் புதிய இணைப்பு கடன்பட்டோரில் ரூபா 95,689,900 ஆன வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், களணி மற்றும் ஊவா பிராந்தியங்களில் முறையே ரூபா 264,575,461 மற்றும் ரூபா 121,051,407 தொகையான வியாபாரக் கடன்பட்டோரை தவிர மேற்குறிப்பிட்ட வித்தியாசங்கள் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

XXIII. வர்த்தகப் பிரிவின் அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பவற்றில் காட்டப்பட்ட மீட்டர் விற்பனைகளின் பெறுமதிக்கும் மொத்த விற்பனைகளின் பெறுமதிக்கும் இடையில் ரூபா 149.49 மில்லியனான இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

XXIV. உரிய செயற்திட்டங்களில் நிதிக்கூற்றுக்களுடன் சபையின் நிதிக்கூற்றுக்கள் ஒப்பிடும் போது கண்டி நகர கழிவுநீர் அகற்றல் முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் என்பவற்றின் வெளிநாட்டு மானியங்களில் ரூபா 12,243.47 மில்லியன் கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. கண்டி நகர கழிவுநீர் அகற்றல் முகாமைத்துவ செயற்திட்டதிலுள்ள ரூபா 8,482.62 மில்லியன் வித்தியாசத்தில் ரூபா 8,425.68 மில்லியன் வித்தியாசத்திற்கான காரணங்கள் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் தவறான பதிவு காரணமான உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தில் ரூபா 3,760.86 மில்லியன் வித்தியாசம் 2020 மார்ச் 30 வரையும் சபையின் கணக்குப் புத்தகங்களில் திருத்தப்பட்டிருக்கவில்லை.

XXV. மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில், சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலைகளின் பெறுமதிக்கும் நான்கு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் தனிப்பட்ட நிதிகூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த பெறுமதிக்கும் இடையில் ரூபா 431.5 மில்லியன் கூட்டு மொத்த தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

XXVI. நான்கு வங்கிகள் (04) தொடர்பில் வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 20,139,121 மற்றும் ரூபா 19,487,118 தொகையான முறையே இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் செலவு மீதிகள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

XXVII. கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	விடயம்	பெறுமதி	கிடைக்கப்பெறாத சான்றுகள்
		ரூபா	
(அ)	புதிய இணைப்புக் கடன்பட்டோர்	156,043,490	விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு
(ஆ)	விசேட மிகையூதிய முற்பணம் மற்றும் பண்டிகை முற்பணம்	1,211,506	விரிவான பட்டோலைகள்
(இ)	இடர் கடன்கள், வாகனக் கடன்கள் மற்றும் ஏனைய ஊழியர் கடன்கள்	16,446,209	விரிவான பட்டோலைகள்
(ஈ)	ஏனைய கடன்பட்டோர்	78,817,838	விரிவான பட்டோலைகள்
(உ)	அசையாத மற்றும் அசையக் கூடிய சொத்துக்கள்	1,039,566,195	காலப்பகுப்பாய்வு
(ஊ)	ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	53,226,240,081	நிலையான சொத்துப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள்
(எ)	வியாபார கடன்கொடுத்தோர்	68,854,475	விரிவான பட்டோலைகள்
(ஏ)	ஏனைய கடன்கொடுத்தோர	332,650,903	விரிவான பட்டோலைகள்
(ஐ)	வரிச் செலவினம்	65,383,426	ஆண்டிற்கான விரிவான வருமான

		வரிக் கணிப்பீடு	
(ஒ)	குத்தகை கடன்கொடுத்தோர்	3,190,775	வங்கி கணக்கிணக்கக்கூற்று
(ஒ)	வேறு நிறுவனங்களிலுள்ள குறுகிய கால வைப்புக்கள்	13,211,058	விரிவான பட்டோலைகள்

XXVIII.2015 யூலை 08 ஆந் திகதிய PE/WS/NWSDB/GEN/2015 ஆம் இலக்க கடிதத்தால் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தால் எடுக்கப்பட்ட தீர்மாணத்தின் அடிப்படையிலும் 2016 பெப்ரவரி 04 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரமும் 2014 ஆம் ஆண்டிற்கு பின்னர் தொடங்கப்பட்டிருந்த செயற்திட்டங்களிற்காக பெறப்பட்டிருந்த ரூபா 85,106,439,687 தொகையான நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள் 2015 ஆண்டிலிருந்து அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொது திறைசேரியின் பதிவேடுகளின் பிரகாரம், ரூபா 59,348,887,214 இற்கு சமமான தொகைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சார்பில் செலுத்த வேண்டிய கடன்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. எனவே, வெளிநாட்டு கடன்களாக சபையால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 25,757,552,473 இற்கு சமமான தொகைகள் எவ்வித அனுமதியும் இல்லாமால் அரசாங்க உரிமை மூலதன கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

XXIX. நிதிக் கூற்றுகளிலுள்ள மீதிகளுடன் இரண்டு (02) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் மூன்று (03) உள்நாட்டு வங்கிசெயற்திட்டம் என்பன சொர்பில் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் போது, நிதிக்கூற்றுக்களி பிரகாரம் நிலுவையாகவிருக்கின் கடன் மீதி ரூபா 292,455,446 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும். ஒன்பது (09) உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் கடன்கள் மீதான அட்டுறு வட்டி தொடர்பில் வங்கிகளிலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களை ஒப்பிடும் போது ரூபா 7,558,250 ஆன மேலதிக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை ***இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு*** இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபை நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு

காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடரபாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 1.2 (II), 1.2(III), 1.2(IV), 1.2(V), 1.2(VI), 1.2(XII), 1.2(XVI), 1.2(XX), 1.2(XXV) ஆம் பந்திளை தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு இறுதி அறிக்கைகளில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபைபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட எந்தவொரு பிரயோகிகக்கூடிய எழுத்து மூல சட்டங்கள், பொது மற்றும் விசேட நெறிப்படுத்தல்களுடன் சபை இணங்கியிருக்காததை குறிப்பிடுதல். தவிர,

சட்டங்கள் / நெறிப்படுத்தல்களுக்கான தொடர்பு	இணங்காமை
(அ) பொது முகாமையாளருடைய சுற்றறிக்கைகள்	
(i). 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய நிர்வாகம்/12/2015 ஆம் இலக்கம்	துண்டிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களிற்குள் நிலுவையாகவிருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 5,000 இற்கு அதிகமாக பெறுமதியுடைய 2,089 துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் தொடர்பில் ரூபா 481,739,069 கூட்டுத் தொகையான நிலுவையாகவிருக்கின்ற கட்பட்டோரை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii)	2018 செப்தெம்பர் 26 ஆந் திகதிய நிர்வாகம்/09/2018 ஆம் இலக்கம் பிரிவு (02)	5 ஆண்டுகளிற்கு மேலாக உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்துவருகின்ற ஊழியர்களிடமிருந்து சந்தை வாடகைக்கு சமமான மாதாந்த வாடகை மற்றும் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட்ட 12.5 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 5 ஆண்டுகளிற்கு மேலாக அவர்கள் உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்துவருகின்ற போதிலும் மீளாய்வாண்டிற்காக பிராந்திய ஆதரா நிலையத்தில் (தெற்கு) 17 ஊழியர்களிடமிருந்து ரூபா 2,326,566 தொகையான வாடகை தண்டப்பணம் மற்றும் 2018 செப்தெம்பர் முதல் 2019 திசெம்பர் வரை மொனறாகலை முகாமையாளர் அலுவலகத்தில் 04 ஊழியர்களிடமிருந்து ரூபா 656,732 தொகை (மீளறவீடு உள்ளடங்கலான வாடகை) என்பன 2020 யூலை 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2006 செப்தெம்பர் 22 ஆந்திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை	சபையின் ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகளின் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.
(இ)	2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	யாழ்ப்பாணத்தில் நிலையான இணைப்புகள் தொடர்பில் ரூபா 5,390,596 தொகையான வியாபார பெறவேண்டியவைகள் திறைசேரி அனுமதி பெறாமல் பழிவழிக்கப்பட்டிருந்தது.
(ஈ)	2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
	(i) பிரிவு 2	சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் என்போருக்காக இரண்டு வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது.
	(ii) பிரிவு 3.1	2019 சனவரி முதல் 2019 ஆகஸ்ட் வரையான காலத்தின் போது சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் என்போருக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களிற்கான எரிபொருள்

		செலவினங்களிற்காக அனுமதிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி ரூபா 1,590,251 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், 2019 சனவரி முதல் 2019 ஒக்தோபர் வரையான காலத்தின் போது பிரதி பொது முகாமையானர், உதவி பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய ஆதார நிலையங்களின் பிராந்திய முகாமையாளர் (தெற்கு) என்போரின் எரிபொருள் செலவிற்காக ரூபா 463,427 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.
(உ)	கம்பஹா, அத்னாகல மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்ட்தின் வசதியளிப்பு உடன்படிக்கையின் பகுதி 3.1.18.15(இ) இன் பிரிவு 2	கைதவிர்க்கப்பட்ட கடன் பெறுகைகளில் 2019 ஒக்தேபரில் ஐந்து (05) ஐ.அ.டொலர் வைப்புக் கணக்கில் ரூபா 15,273.76 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஊ)	2017 பெப்ரவரி 15 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை	வெளிநாட்டு நிதிகள் நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக ஒரே ஒரு உள்ளக கணக்காய்வாளர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தார்.
(எ)	2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு	மீளாய்வாண்டின் போது சபையானத 2019 திசெம்பர் 31 அளவில் உரிய அமைச்சிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த பதினெட்டு (18) ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 22.03 மில்லியனான தொகையை செலுத்தியிருந்தது. இதன்படி, 2015 திசெம்பரிலிருந்து 2019 திசெம்பர் 31 வரை விடுவிக்கப்பட்ட ஊழியர்களிற்காக நீர் வழங்கல் அமைச்சால் சபைக்கு ரூபா 168.45 மில்லியன் தொகை மீளளிப்புச் செய்யவேண்டியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள்,

காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல். தவிர

I. கட்டான நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தின் எதிபரார நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி நிலத்தடி நீர்த்தேக்கம் மற்றும் 1000 கன மிற்றர் இயலளவுடைய நீரிறைக்கும் இல்லம் என்பன நிர்மாணிப்பதற்கு ரூபா 67,368,370 ஒப்பந்த பெறுமதியில் உப ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உப ஒப்பந்தத்திற்கு கொள்வனவு நடைவடிக்கைகள் தொடர்ான தொர்பால் செயற்பாட்டில் இல்லாமல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் ஊடாக உப ஒப்பந்தகாரருக்கு நிதிகளை அனுப்பும் போது பிரதான ஒப்பந்தகாரரால் இலாப எல்லையாக ரூபா 8,084,204 ஆன தொகை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

II. ரூபா 8,692,053 மொத்தப் பொறுமதியான பயன்படுத்தா முடியாத நிலையிருக்கின்ற முவாயிரத்து நூற்றிதொன்னூற்று இரண்டு (3,192) தண்ணீர் மீற்றர் உதிரிப்பாகங்கள் மற்றும் நூற்றிநாற்பத்தினான்கு பல்க் மீற்றர் உதிரிப்பாங்கள் என்பன மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இரத்மலானை வேலைத்தளத்தில் இருந்தது.

III. பத்து வித்தியாசமான டயாமீற்றரில் ரூபா 54,253,067 பெறுமதியான ஆறாயிரத்து நானுற்றிமுப்பத்து நான்கு (6,434) தண்ணீர் மீற்றர்கள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக பிரதான களஞ்சியங்களில் இருந்தது. மேலும், சில தண்ணீர் மீற்றர்களில் உத்தரவாக காலப்பகுதி ஏற்களவே காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

IV. கடுகஸ்தோட்டை சுத்திகரிப்பு பொறியில் 2007 ஆம் ஆண்டின் போது பொருத்தப்பட்ட KVA 2000 இயலளவுடைய மின்பிறப்பாக்கி 2016 மார்ச் 28 இல் ரூபா 15 மில்லியன் செலவு செய்யப்பட்டு திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு 1500 உத்தரவாத மணித்தியால்கள் மற்றும் 5 ஆண்டுகள் உத்தரவாத காலப்பகுதி என்பவற்றில், பொருத்தியதிலிருந்து 2 ஆண்டுகள் மற்றும் 189 மணித்தியாலங்கள் பூர்த்தியான பின்னர், பழுதடைந்திருந்ததுடன் 2020 மார்ச் 30 வரையும் திருத்தம் செய்வதற்கு நவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

V. எட்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்தகாரருடைய குறைவான செயலாற்றல், காணி ஒப்படைத்தலில் தாமதம், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற விடங்கள், ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட PE குழாய்களின் குறைந்த தரம் போன்றன காரணமாக 184 நாட்கள் முதல் 1,825 நாட்கள் வரையான வீச்சில் கருத்திற்கொள்ளக்கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டது.

VI. கிரிதர நீர்வழங்கல் செயற்திட்டத்தின் ஒப்பந்தம் பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 29.71 சதவீதம் குறைவாகவிருந்த ரூபா 513.28 மில்லியன் ஒப்பந்த தொகையில் தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளருக்கு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், கொள்வனவு வழிகாட்டலின் 7.9.11 (அ) ஆம் பிரிவின் பிரகாரம் கோரப்பட்ட வீதங்களின்படி வேலைகள் மற்றும் சேவைகள் போன்ற அத்தகைய விடயங்கள் கொள்வனவு செய்வதற்கு எப்படி கேள்வியாளரால் தகும் என்பதை நிரூபிபதற்கு ஒப்பந்தகாரரிடமிருந்து வீதப்பகுப்பாய்வுகளை தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு (TEC) பெற்றிருக்கவில்லை.

VII. மாத்தளை சுத்திகரிப்பு பொறியிற்காக 2016 ஏப்ரலில் ரூபா 3,895,000 (பொறியிலாளர் மதிப்பீட்டினை விட 47 சதவீதம் அதிகமாக) கிரயத்தில் 1 கனமீற்றர் இயலளவுடைய இரண்டு அலும் பம்புகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட பம்புகள் 2020 மார்ச் 30 வரையும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

VIII. FIDIC வழிகாட்டலின் 14.6 ஆம் பிரிவிற்கு (நிர்மாணத்திற்கான ஒப்பந்த நிபந்தனைகள்) முரணாக மாத்தறை (iv) ஆம் கட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தில் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல 01 மற்றும் 02 ஆம் இலக்க இடைக்கால கொடுப்பனவு சான்றிதழில் மொத்த ஒப்பந்த பெறுமதியின் 2.5 சதவீத்தை விட குறைந்த விலைப் பட்டியலிற்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

IX. கொழும்பு மாவட்ட நகர கிழக்கு நீர் வழங்கல் செயற்திட்டத்தின் (பொதி 1 மற்றும் 3) விப்பட்டியலிற்கு (BOQ) முரணாக, திரும்ப நிரப்பதல் நோக்கத்திற்காக அகழப்பட்ட மண்ணை பயன்படுத்தும் நொக்கத்திற்காக 267,188 மீற்றர்களிற்காக தற்காலிக வீதி சீர்படுத்தலிற்காக ரூபா 732.07

மில்லியன் மேலதிக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் 2018 ஆம் ஆண்டின் பொது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபையில் நிலவிய வீதங்களுடன் ஒப்பிடும் போது தண்ணீர் மீற்றரின் ஒரு பகுதியாக பிரஸ் யூனியன் உள்ளதுடன் தண்ணீர் மீற்றரின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ள பொதிலும், பொதி (iii) இற்காக இறக்கமதி செய்யப்பட்ட 10000 தண்ணீர் மீற்றர்களிற்காக ரூபா 79.79 மில்லியன் மிகைக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. இது விலைப்பட்டியலில் புறம்பாக உள்ளடக்கப்பட்டிருந்தது. எனவே, பிரஸ் யூனியன் வழங்கலிற்காக பொதி (i) மற்றும் (iii) இற்காக ரூபா 25.32 மில்லியன் தனியான கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு விடயங்கள்

I. ரூபா 1,392 மில்லியன் கூட்டுத்தொகையான வியாபாரக் கடன்பட்டோர், புதிய இணைப்பு கடன்பட்டோர், கழிவுவகற்றல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. அதில், கொழும்பு, களணி, கோட்டை மற்றும் தெஹிவளை பிராந்தியங்களிலுள்ள கடன்பட்டோர் 54 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

II. அமைச்சர்களின் உத்தியோகபூர்வ விடுதிகளிற்கு வழங்கப்பட்ட 17 புதிய இணைப்புகள் தொடர்பில் ரூபா 3,637,204 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறும் அறவிடப்படாமல் இருந்தது. அதில் ரூபா 2,268,899 இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது.

III. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற துண்டிக்கப்பட்ட கடன்பட்டோர் ரூபா 1,328,616,496 ஆக இருந்தது. அதில், 79 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,049,623,385 தொகையான கடன்பட்டோர் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது.

IV. சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 'ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையிலிருந்து அறவிடவேண்டியவை ரூபா 7,712,773 ஆக இருந்தது. எவ்வாறாயினும், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 2,201,854 ஆக காட்டப்பட்டிருந்தது.

V. 2003 முதல் 2008 ஆம் ஆண்டுகள் வரையான காலத்தின் போது பிராந்திய ஆதார நிலையத்தில் (மத்திய) ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 8,177,506 கூட்டுத் தொகையான முற்பணங்கள் மற்றும் 2009 முதல் 2012 ஆம்

ஆண்டுகள் வரையான காலத்தின் போது தலைை அலுவலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 26,103,612 கூட்டுத் தொகையான முற்பணங்கள் என்பவற்றினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

VI வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு மா நகர சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மற்றும் மாநகர காசாளர் உள்ளடங்கலாக வேறு நிறுவனங்களில் இருந்த ரூபா 47,430,495 தொகையான குறுகியகால வைப்புக்கள் மூன்று அண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. மேலும், உரிய அமைச்சில் விடப்பட்டிருந்த ரூபா 4,378,828 தொகையான முற்பணங்கள் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்ததுடன் விரிவாக தகவல்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் மெய்மையாய்வு செய்யமுடியாதிருந்தது.

VII. ஒப்பந்தகாரருடைய பிடிகாசு மற்றும் மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்புக்கள் முறையான ரூபா 1,839.2 மில்லியன் மற்றும் ரூபா 3.19 மில்லியன் தொகை உரிய தரப்பினருக்கு விடுவிப்தற்கோ அல்லது அவற்றினை வருமானமாக கருதப்படாமலோ மூன்று ஆண்டுகளிற்க மேலாக இருந்தது. மேலும், அந்த பிடிகாசு மற்றும் வைப்புக்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகார்கள் பூர்த்தியாக்கியிருந்தார்களா என மெய்மையாய்வு செய்வதற்கு கணக்காய்விற்கான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.

VII. சபையானது காலிப் பகுதி கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கழிவுநீர் பொறி சுத்திகரிப்பு பொறி நிர்மாணிப்பதற்கு காணியொன்றை கொள்வனவு செய்திருந்ததுடன் இந்த காணி மதிப்பாய்வு திணைக்களத்தால் ரூபா 71.5 மில்லியனாக பெறுமதியிடப்பட்டிருந்தது. காணியின் பெறுமதியின் 30 சதவீதத்திற்கு சமமான தொகை 21.25 மில்லியன் தொகை சபையின் சிரேஸ்ட சட்ட உத்தியொகத்தரின் சிபார்சில் முற்பணமாக காணி உரிமையாளருக்கு 2014 ஏப்ரலில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியில் வசித்திருந்தவர்களின் காணி உரிமையாண்மை தொடர்பான தகராறு காரணமாக பின்னர் செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கு நீதி மன்ற வழக்கு தொடரப்பட்டிருந்தது. ஏற்கனவே காணியில் சில குடும்பங்கள் வசித்திருந்ததுடன் இருக்கின்ற உரிமையாளர் முற்பணத்தினை பெற்ற பின்னர் காணியிலிருந்து மண்மை அகற்றியிருந்தார். செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் அவற்றின் மீதான தண்டப்பணம் என்பன 2020 யூலை 31 வரையும் காணி உரிமையாளரிடமிருந்தோ அல்லது சபையின் பொறுப்பான உத்தியோகத்தர்களிமிருந்தோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

IX. 2008 முதல் 2017 வரையான காலத்தின் போது களுத்துறை பிராந்தியத்தில் மீற்றர் வாசிப்பு மூலம் ஈடுபடுத்தப்பட்ட ரூபா 1,145,235 தொகையான காசு மோசடி 2020 யூலை 31 வரையும் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

X. 1999 முதல் 2006 வரையான ஆண்டின் பொது திருகோணமலை, களணி மற்றும் அம்பாறை பிராந்தியங்களில் இடம்பெற்ற ரூபா 248.44 மில்லியன் தொகையான காசு மோசடிகள் 2019 திசெம்பர் 31 வரையும் உரிய தரப்பினரிமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2001 ஆம் ஆண்டின் போது பண்டாரவளை பிராந்தியத்தில் இடம்பெற்ற இன்னொரு ரூபா 272,735 தொகையான கர்சு மோசடிகள் 2019 திசெம்பர் 31 வரையும் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

XI. 2017 முதல் 2019 வரையான ஆண்டின் பொது மீற்றர் வாசிப்பு மூலம் இடம்பெற்ற மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் பிரகாரம், மொனறாகலையில் இரண்டு மோசடிகள், களுத்துறை மற்றும் மத்திய பிராந்தியத்தில் இரண்டு மேசடிகள் என்பன இடம்பெற்றது. மேலும், மொனறாகலையில் வெல்லவாயாவில் இடம்பெற்ற மோசடியில் வாடிக்கையாளரால் பட்டியல் கொடுப்பனவு நிராகரித்தமையால் ஏற்பட்ட இழப்பை 2020 சனவரி 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

XII. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறக்குமதி செய்யப்பட்ட இடைப்பொக்கிலுள்ள இருப்பு ரூபா 876.23 மில்லியனாக இருந்தது. அதில், ரூபா 162.92 மில்லியன் தொகையான இருப்புக்கள் புலனாய்வு செய்யப்படாமல் ஆறு மாதங்களிற்கு மேலாக இடைப்போக்கிலுள்ள இருப்பாக இருந்தது.

XIII. 746.2 மில்லியன் கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் மொத்த உற்பத்தியில், 25 சதவீதத்திற்கு சமமான 186.1 மில்லியன் கனமீற்றர் மீளாய்வாண்டின் வருமானமற்ற தண்ணீராக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. வருமானமற்ற தண்ணீரின் பெறுமதி நீர்க்கசிவு, சட்டவிரோத இணைப்புகள், இலவச வழங்கல் மற்றும் நிர்வாக இடையூறுகள் போன்றன காரணமாக சபைக்கு குறிப்பிடத்தக்களவு இழப்பொன்று ஏற்பட்ட பொதிலும் புறம்பாக கணக்கிடுவதற்குப் பதிலாக சாதாரண கிரயமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு நகரத்தில் வருமானமற்ற தண்ணீர் 41 சதவீதம் பதியப்பட்டிருந்த அதேநேரம் காலி, கேகாலை, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பண்டாரவளை, கண்டி மற்றும் திருகோணமலை பிராந்தியங்கள் மீளாய்வாண்டின் போது 25 சதவீதத்திற்கு மேல் பதிவுசெய்திருந்தது.

XIV. உள்நாட்டு வங்கிகளால் நிதியளிக்கப்பட்டிருந்த இரண்டு (02) செயற்திட்டங்கள் தொடர்பில் சபையால் தவணைப்பணங்கள் திருப்பிச் செலுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக செயல்தவறு வட்டியாக ரூபா 1,561,573 இற்கு சமமான தொகை ஏற்பட்டிருந்தது.

XV. துறைமுகத்திலிருந்து மூலப்பொருள் கொள்கலன்களின் அகற்றலில் உள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட்ட பொல்காவல, பொதுகர, அல்லவ ஒருங்கிணைந்த செயற்திட்டம், தெதுறுஓயா நீர் வழங்கல் செயற்திட்டம், ஆணைமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம், களணி வலது கரை நீர்வழங்கல் செயற்திட்டம் (கட்டம் ii) என்பன தொடர்பில் துறைமுக தண்டப் பணமாக ரூபா 376.52 மில்லியன் கூட்டுத் தொகை ஏற்பட்டிருந்தது.

XVI. வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 28 இணைப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் வருடாந்த நுகர்வு ரூபா 44.52 மில்லியன் விலைப்பட்டியல் வருமானத்திற்கு சமமாக 1,246,157 கனமீற்றர் இருந்தது. எவ்வாறாயினும், இது 2019 திசெம்பர் 31 வரையும் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

XVII. நிலவிய சந்தை வீதங்களுடன் ஒப்பிடும் போது தெதுறுஓயா நீர் வழங்கல் செயற்திட்டத்தில் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 21 மில்லியன் மேலதிக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது.

XVIII. வடமத்திய நிலத்தடி நீர் பிரிவில் ரூபா 6,005,215 தொகையான மீள்சுழற்சி வேலைகளில் அசாதாரண வரவு மீதி மற்றும் ரூபா 665,580 தொகையான இடைபோக்கிலுள்ள காசில் அசாதாரண செலவு மீதி என்பன 2020 யூன் 30 வரை தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

XIX. 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 29,180,175 பெறுமதியான பழுதடைந்த இருப்புக்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

XX. 2020 யூலை 31 வரையும் 2019 ஆம் ஆண்டிற்கான கணிப்பீட்டுச் சபை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

XXI. ஆறு மாதங்களிற்கு மேல் சமர்ப்பிக்கப்படாமல் இருந்த ரூபா 24,081,457 தொகையான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

XXII. 2018 ஆம் ஆண்டில் இருப்பு மெய்மையாய்வின் போது மாத்தறை களஞ்சியத்தில் 461 கைவிடப்பட்ட விடயங்கள் மற்றும் இனங்காணப்பட்ட மொனறாகலை மாவட்டத்தில் 43 விடயங்கள் என்பன 2020 மார்ச் 31 வரையும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
M

சுருக்க வடிவங்கள்

AC	-	அஸ்பெஸ்டோ சீமெந்து
ADB	-	ஆசிய அபிவிருத்தி வங்கி
ADRA	-	அட்வன்டிஸ்ட் அபிவிருத்தி மற்றும் நிவாரண முகவராண்மை
AE	-	பிரதேச பொறியியலாளர்
AFD	-	பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை
AGM	-	உதவிப் பொது முகாமையாளர்
AIWSP	-	ஆணமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
AWSSIP	-	அம்பத்தலே நீர் வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டம்
BMICH	-	பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
BOC	-	இலங்கை வங்கி
BOQ	-	அளவுப் பட்டியல்
BOI	-	முதலீட்டுச் சபை
CBO	-	சமூக அடிப்படையிலான அமைப்புகள்
CCN	-	கொழும்பு நகர வடக்கு
CCS	-	கொழும்பு நகரம் தெற்கு
CCTV	-	மூடிய சுற்றுத் தொலைக்காட்சி
CEA	-	மத்திய சுற்றாடல் அதிகார சபை
CEB	-	இலங்கை மின்சார சபை
CETRAC	-	நிர்மாணிப்பு உபகரணங்கள் பயிற்சி நிலையம்
CHPB	-	வீடமைப்பு திட்டமிடல், கட்டடங்கள் நிலையம்
CI	-	வார்க்கப்பட்ட இரும்பு
CIPM	-	ஆளணி முகாமைத்துவ பட்டய நிறுவனம்
CKDu	-	நோய்க் காரணி கண்டறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்
CMC	-	கொழும்பு மாநகர சபை
CP	-	கூட்டிணைந்த திட்டம்
CRIP	-	காலநிலை நம்பகத்தன்மை மேம்பாட்டுக் கருத்திட்டம்
CRIWM	-	காலநிலை நெகிழ்திறன் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம்
CS	-	கட்டுப்பாட்டுப் முறைமை
cu.m.	-	கன மீற்றர்
DAB	-	பிணக்கு நீதித்தீர்ப்புச் சபை
DEWATS	-	பன்முகப்படுத்தப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமை
DGM	-	பிரதி பொது முகாமையாளர்
DGM (WC)	-	பிரதிப் பொது முகாமையாளர் (மேல் மத்திய)
DI	-	முலாம் பூசப்பட்ட இரும்பு
DMA	-	மாவட்ட மானியிடல் பிரதேசம்
DoNCWS	-	தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்
DS	-	பிரதேச செயலகம்
LBF	-	உள்நாட்டு வங்கி நிதியம்
LKR	-	இலங்கை ரூபாய்
M&E	-	இயந்திரவியல் மற்றும் மின்னியல்
DSC	-	வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை மதியுரை
DSD	-	பிரதேச செயலகப் பிரிவு
DZUWSP	-	உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்
EIA	-	காலநிலைத் தாக்க மதிப்பீடு
EPZ	-	ஏற்றுமதி தயாரிப்பு வலயம்
EWSP	-	எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்
GCWWMIIP	-	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
GIS	-	புவியியல் தகவல் முறைமை
GM	-	பொது முகாமையாளர்
GMWSP	-	மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
GN	-	கிராம உத்தியோகத்தர்
GND	-	கிராம உத்தியோகத்தர் பிரிவு
GoSL	-	இலங்கை அரசாங்கம்
GPOBA	-	வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GR	-	நில நீர்த் தேக்கம்
GVWSP	-	வவுனியா பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
HDPE	-	உயர் கன பொலி எதிலீன்
HRM	-	மனித வள முகாமைத்துவம்
IEC	-	சர்வதேச மின்தொழில்நுட்ப ஆணைக்குழு
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICTAD	-	நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
IWA	-	சர்வதேச நீர் கழகம்
IWSP	-	ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
IEE	-	மின் பொறியியலாளர் நிறுவனம்
IESL	-	இலங்கை பொறியியலாளர் நிறுவகம்
IMS	-	பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை
IoT	-	விடயங்களின் இணையம்
ISO	-	தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு
IT	-	தகவல் தொழில்நுட்பம்
ITEC	-	இந்திய தொழில்நுட்ப, பொருளாதார கூட்டமைப்பு
IPVPN	-	இணைய நெறிமுறை மெய்மைப்பாடு பிரத்தியேக வலையமைப்பு
JICA	-	யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JPY	-	யப்பான் யென்
KCWMP	-	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்
Km	-	கிலோ மீற்றர்
KRB	-	களனி வலது கரை
RSC	-	பிரதேச உதவி நிலையம்
RSC (WN)	-	பிரதேச உதவி நிலையம் (மேல் வடக்கு)
RSC (WS)	-	பிரதேச உதவி நிலையம் (மேல் தெற்கு)
MD&T	-	மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சி
MIS	-	முகாமைத்துவ தகவல் முறைமை
MoU	-	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MSC	-	முாமைத்துவ உதவி ஆலோசனை

MUDWSHF	-	நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு
NAITA	-	தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
NBRO	-	தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்
NC	-	வட மத்திய
NCP	-	வட மத்திய மாகாணம்
NDB	-	தேசிய அபிவிருத்தி வங்கி
NDT	-	தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NGOs	-	அரச சார்பற்ற அமைப்புகள்
NHDA	-	தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
NIBM	-	தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்
NPD	-	தேசிய திட்டமிடல் திணைக்களம்
NRW	-	வருவாயற்ற நீர்
NWSDB	-	தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
O&M	-	தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு
OIC	-	நிலையப் பொறுப்பதிகாரி
OKP	-	ஒரேஞ்ச் அறிவு நிகழ்ச்சித்திட்டம்
PAM	-	Polyacrylamides
PE	-	Poly Ethelene
PVC	-	Polyvinyl Chloride
P&D	-	திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு
PAC	-	கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு
PDMRC	-	திட்டமிடல், வடிவமைப்பு கைநூல் மீளாய்வுக் குழு
PMU	-	கருத்திட்ட முகாமைத்துவ அலகு
PRDA	-	மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
PTB	-	Physikalisch Technische Bundesansdalt
PWD	-	அரச வேலைத் திணைக்களம்
R&D	-	ஆராய்சியும் அபிவிருத்தியும்
RDA	-	வீதி அபிவிருத்தி அதிகார சபை
RDB	-	கிராமிய அபிவிருத்தி வங்கி
RFP	-	முன்மொழிவுக்கான வேண்டுகோள்
RIDEP	-	கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம்
RM	-	பிராந்திய முகாமையாளர்
RO	-	ஊடுகலப்பு னுளுஊ - வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை மதியுரை
DSD	-	பிரதேச செயலகம்
DZUWSP	-	உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம்
EIA	-	காலநிலைத் தாக்க மதிப்பீடு
EPZ	-	ஏற்றுமதி தயாரிப்பு வலயம்
EWSP	-	எட்டம்பிட்டிய நீர் வழங்கல் கருத்திட்டம்
GCWWMIIP	-	கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
GIS	-	புவியியல் தகவல் முறைமை
GM	-	பொது முகாமையாளர்
GMWSP	-	மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
GN	-	கிராம உத்தியோகத்தர்
GND	-	கிராம உத்தியோகத்தர் பிரிவு
GoSL	-	இலங்கை அரசாங்கம்
GPOBA	-	வெளியீட்டு அடிப்படையிலான உதவி தொடர்பான உலக பங்காளர்
GR	-	நில நீர்த் தேக்கம்
GVWSP	-	வவுனியா பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டம
HDPE	-	உயர் கன பொலி எதிலீன்
HRM	-	மனித வள முகாமைத்துவம்
IEC	-	சர்வதேச மின்தொழில்நுட்ப ஆணைக்குழு
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
ICTAD	-	நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்
IWA	-	சர்வதேச நீர் கழகம்
IWSP	-	ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம்
IEE	-	மின் பொறியியலாளர் நிறுவனம்
IESL	-	இலங்கை பொறியியலாளர் நிறுவகம்
IMS	-	பொருட்பட்டியல் முகாமைத்துவ முறைமை
IoT	-	விடயங்களின் இணையம்
ISO	-	தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பு
IT	-	தகவல் தொழில்நுட்பம்
ITEC	-	இந்திய தொழில்நுட்ப, பொருளாதார கூட்டமைப்பு
IPVPN	-	இணைய நெறிமுறை மெய்மைப்பாடு பிரத்தியேக வலையமைப்பு
JICA	-	யப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர்
JPY	-	யப்பான் யென்
KCWMP	-	கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம்
Km	-	கிலோ மீற்றர்
KRB	-	களனி வலது கரை
RSC	-	பிரதேச ஆதார நிலையம்
RSC (WN)	-	பிரதேச ஆதார நிலையம் (மேல் வடக்கு)
RSC (WS)	-	பிரதேச ஆதார நிலையம் (மேல் தெற்கு)
RSC (N)	-	பிரதேச ஆதார நிலையம் (வடக்கு)
RSC (NW)	-	பிரதேச ஆதார நிலையம் (வடமத்திய)
RWS	-	கிராமிய நீர் வழங்கல்
SBD	-	தரநியம விலைக்கேள்வி ஆவணங்கள் ளுஊயுனுயு - மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுதல்
SCAPC	-	நிலையான அமைச்சரவை அங்கீகார பெறுகைகள் குழு
SDG	-	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
SEP	-	துப்புரவேற்பாட்டு மேம்பாட்டு கருத்திட்டம்
SHIFT	-	நகரங்களுக்கான துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார முன்னெடுப்பு
SIDA	-	சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை
SLIDA	-	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்
SLSI	-	இலங்கை தரக் கட்டளை நிறுவனம்
SMS	-	குறுகிய செய்திச் சேவை

ST	-	சிறிய நகரம்
STPs	-	சாக்கடை சுத்திகரிப்பு பொறித்தொகுதி
TA	-	தொழில்நுட்ப உதவி
TCE	-	மொத்த மதிப்பீட்டுச் செலவினம்
THM	-	Tihalomethane
ToR	-	செயல் விதிகள்
ToT	-	பயிலுனர்களுக்கு பயிற்சியளித்தல்
UNICEF	-	ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் அவசர நிதியம்
UPVC	-	Unplasticised Polyvinyl ஊாடழசனைந்
USD	-	ஐக்கிய அமெரிக்க டொலர்
VPN	-	கற்பித பிரத்தியேக வலையமைப்பு
VPP	-	வவுனியா பங்களிப்புத் திட்டமிடல்
VAT	-	சேர் பெறுமதி வரி
WASSIP	-	நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம்
WDCE	-	நீர் மற்றும் அபிவிருத்தி மகாசபை மற்றும் கண்காட்சி
WHO	-	உலக சுகாதார அமைப்பு
WSP	-	நீர் வழங்கல் கருத்திட்டம்/ நீர் பாதுகாப்புத் திட்டம்
WSS	-	நீர் வழங்கல் திட்டம்
WTP	-	நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி
WWDS	-	கழிவுநீர் அகற்றல் முறைமை
WWTP	-	கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி

அடிப்படைத் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
(தே.நீ.வ.வ.ச.)

சட்ட வடிவம்
அரசாங்கத்திற்குச் சொந்தமானதொரு நியதிச்சட்ட சபையாகும்.

கூட்டிணைக்கப்பட்ட திகதி
1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. சட்டமான பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1974.03.01 ஆம் திகதி

1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தே.நீ.வ.வ.ச. (திருத்தச்) சட்டத்தின் மூலம் 1992.03.11 ஆம் திகதி சட்டம் திருத்தப்பட்டது.

வரிப் பதிவு இலக்கம்
4090 31820

VAT பதிவு இலக்கம்
4090 31820 7000

தொடர்புகளுக்கு , தலைமை அலுவலகம்
காலி வீதி, இரத்மலானை, இலங்கை
தொலைபேசி : +94 11 2638999 (உடனடி)
+94 11 2637194, +94 11 2611589
தொலை நகல் : +94 11 2636449
மின் அஞ்சல் : gm@waterboard.lk
இணையத் தளம் : www.waterboard.lk

வழிகாட்டல் அமைச்சு
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள்

அழைப்பு நிலையம்
1939 (24 மணி நேரமும்)

பாவனையாளர் சேவைப் பிரிவு, தலைமை அலுவலகம்
+94 11 2623623 (கடமை நேரத்தில்)

வங்கியாளர்
இலங்கை வங்கி

கணக்காய்வு
பிரதி பொதுமுகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)
அரச கணக்காய்வுப் பிரிவு

பணிப்பாளர் சபை
பொறியியலாளர் கே.ஏ. அன்சார் -
தலைவர் தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம்)
திரு. எம். எச்.எம். சல்மான் -
உப தலைவர் (2018.01.24 தொடக்கம்)
திரு. பீ.ஐ.ரீ. மஹீலால் சில்வா -
செயற்பாட்டு பணிப்பாளர் தே.நீ.வ.வ.ச. (2015.02.05 தொடக்கம்)
திரு. சாந்த ரத்நாயக்க -
சபை அங்கத்தவர், தே.நீ.வ.வ.ச. (2015.02.12 தொடக்கம்)
பொறியியலாளர் தனேஷ் குணதிலக்க (சாக்கடை)
பொறியியலாளர் எஸ்.எஸ்.எஸ். விபுலானந்தன் -
(கருத்திட்ட இணைப்பு)
செல்வி ஏ. சிறியலதா (உள்ளக கணக்காய்வு) -
பதிற் கடமை
மாகாணங்களின்.பிராந்திய உதவி நிலையங்களின் பிரதி பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் கே.பீ.ஆர்.எஸ். சமரசிங்க -
(மேல் - மத்திய)
பொறியியலாளர் எம்.ரீ.எம். ரஸில் -
(மேல்-தெற்கு)
பொறியியலாளர் பீ. ராமவிக்ரம
(மேல் - வடக்கு)
பொறியியலாளர் டபி.என். பிரேமசிறி
(உற்பத்தி)
பொறியியலாளர் கலாநிதி (திருமதி) வசந்த இலங்கசிங்க (வட மேல்)
பொறியியலாளர் ஜீ.வீ. விஜேரத்ன
(வட மத்திய)
பொறியியலாளர் எம்.கே.டீ.ஜே.எச். மீகொட (மத்திய)
பொறியியலாளர் ரீ. பாரதிதாசன் (வடக்கு)
பொறியியலாளர் ஆர்.எஸ். லியனகே (ஊவா)
பொறியியலாளர் எஸ்.எஸ். தேவராஜா (சபரகமுவ)
பொறியியலாளர் (திருமதி) எம்.கே.ஏ.ஜே.எம். விஜேசிங்க (தெற்கு)
பொறியியலாளர் என். சுதேசன் (கிழக்கு)
திருமதி கே.ஏ. சுபத்ரா வல்பொல -
சபை அங்கத்தவர், தே.நீ.வ.வ.ச. (2015.02.13 தொடக்கம்)
டாக்டர் ரீ.பீ. ஆனந்த ஜயலால் -
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2017.01.20 தொடக்கம்)
டாக்டர் எல்.ரீ. கம்லத் -
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2015.04.02 தொடக்கம்)
திரு. ஜே.எம்.யு.பீ. ஜயமஹ -
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2015.04.02 தொடக்கம்)
செல்வி பி.கே.ஏ. த சில்வா -
சபை அங்கத்தவர் தே.நீ.வ.வ.ச. (2019.06.13 தொடக்கம்)

சபைச் செயலாளர்
திருமதி. டபிள்யு.பீ. சந்தமாலி த சில்வா

சிரேஷ்ட முகாமைத்துவம்
பொறியியலாளர் டீ.யூ. சுமனசேகர -
பொது முகாமையாளர் (2019.09.01 வரை)
பொறியியலாளர் ஆர்.எச். ருவினிஸ்,
பொது முகாமையாளர் (2019.09.05 தொடக்கம்)
பொறியியலாளர் எஸ்.ஜே.ஆர். ராஜ்குமார் மே.பொ.மு.
(வடக்கு / மத்திய)
பொறியியலாளர் என்.எச்.ஆர். குலநாத
(சாக்கடை)
பொறியியலாளர் விஜேதுங்க மே.பொ.மு.
(கொள்கை, திட்டமிடல்)பொறியியலாளர் ஜே.கே.எஜ். பதிரண, மே.பொ.மு.
(தெற்கு / கிழக்கு)
பொறியியலாளர் ரீ.டபி.எஸ். பெரோ, மே.பொ.மு.
(நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
பொறியியலாளர் சீ.சீ.எச்.எஸ். பர்னாந்து, மே.பொ.மு.
(மேற்கு)
பொறியியலாளர் (திருமதி) வசந்தா இலங்கசிங்க, மே.பொ.மு.
(கூட்டிணைந்த சேவைகள்)
திரு. ஜீ.கே. இத்தமல்கொட மேல.பொ.மு.
(மனித வள முகாமைத்துவம்)
திரு. டீ. தொடவத்த மேல.பொ.மு.
(நிதி)

பிரிவுகளின் பிரதி பொதுமுகாமையாளர்கள்
திருமதி என்.வை.எஸ். அபேகுணவர்தன
(கைத்தொழில் உறவு)
திரு. டபி.ஏ.எஸ். சுமனசூரிய (மனித வளங்கள்)
திரு. ஆர்.எம்.ஏ. பண்டார
(வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)
திருமதி எம்.எம்.எஸ். பீரிஸ் (நிதி)
திரு. ஏ.ஜீ.எஸ். குமார (கிரயம்)
பொறியியலாளர் எஸ்.ஜீ.ஜீ. ராஜ்குமார் (வர்த்தகம்)
பொறியியலாளர் கே.டீ.பி.எப். சிறிவர்தன
(கூட்டிணைந்த திட்டமிடல்)
பொறியியலாளர் ஐ.வீ.டபி. எதிரிவீர (சி.ந./கி.நீ.வ.)
பொறியியலாளர் (திருமதி) டீ.எம்.எல்.சீ. பிட்டவல
(அபிவிருத்தி)
பொறியியலாளர் ஜாலிய லலித் சீக்குகே
(ADB கருத்திட்டம்)
பொறியியலாளர் ரீ.எம்.டபி. சுனில் பண்டார
(எந்.மின்) – பதில்
பொறியியலாளர் டபி.ஜீ.சீ.எல். வீரசேகர
(திட்டமிடல், வடிவமைப்பு)
பொறியியலாளர் ஜே. சந்திரதாச (தகவல் தொழில்நுட்பம்) – பதில்

கருத்திட்ட பணிப்பாளர்களாக செயலாற்றுகின்ற மே.பொ.மு./பிரதி பொது முகாமையாளர்கள்
பொறியியலாளர் எஸ்.ஏ. ரஷீட்
(கொழும்பு நீர் வழங்கல் சேவைகள் மேம்பாட்டுக் கருத்திட்டம்)
பொறியியலாளர் ஆர்.ஏ.ஏ. ரணவக்க
(ஞாகைவ கருத்திட்டம்)
பொறியியலாளர் எம்.எம். உமா லெப்பே
(அனுராதபுரம் கட்டம் 11)
பொறியியலாளர் என்.எச்.டீ.பீ. தர்மபால
(கம்பஹ அத்தனகல்ல நீர் வழங்கல் கருத்திட்டம்)